௨௧:௯1

# அறிஞர் அண்ணாவின்

## கருத்துரைகள்

தொகுத்தவர் :
வி. பொன்னுசாமி

விற்பனை உரிமை :

அப்பர் புத்தக நிலையம்

1621, தெற்கு ராஜ வீதி, தஞ்சாவூர்.

ஸ்ரீமகள்ஸ் நிலையம் வெளியீடு—16
முதற்பதிப்பு : ஜூலை, 1967
உரிமை பதிப்பகத்தார்க்கே

11569.

விலை ரூ. 2-00

வெளியிட்டோர் :
ஸ்ரீமகள்ஸ் நிலையம்
144, பவழக்காரத் தெரு
சென்னை-1

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

# பதிப்புரை

தமிழ் மக்களின் இதயவானிலே ஓர் உதய சூரியனுகச் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் தலைவர் அறிஞர் அண்ணு! இன்று தமிழக அரசின் ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருக்கும் சாரதியாக —முதலமைச்சராக—வீற்றிருக்கின்ருர். நாட்டை வளப்படுத்த—நாட்டு மக்களின் உளத்தை வளப் படுத்த—வாழ்வை வளப்படுத்தத் தக்க பல கருத் துக்களை அறிஞர் அண்ணு அவ்வப்போது வழங்கிக் கொண்டிருக்கிருர். அத்தகைய சிறந்த கருத் துக்களில் சிலவற்றை திரு. வி. பொன்னுசாமி தொகுத்தளித்துள்ளார். அன்னுருக்கு நம் நன்றி !

அறிஞர் அண்ணுவின் கருத்துரைகளை தமிழ் நாட்டின் ஆடவர் பெண்டிர், இளைஞர் முதியோர், ஆசிரியர் மாணவர் ஆகிய எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டுமென விரும்புகிருேம்.

ஸ்ரீமகள்ஸ் நிலையத்தார்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முதல் பொதுக் கூட்டம் ... | 5 |
| 2. | தஞ்சைத் தரணியில் ... | 16 |
| 3. | தமிழ் வெளியீட்டுக் கழக நூல் வெளியீட்டு விழாவில் ... | 24 |
| 4. | அம்பேத்கார் பிறந்தநாள் விழாவில் ... | 38 |
| 5. | பச்சையப்பர் கல்லூரியில் ... | 44 |
| 6. | சட்டக் கல்லூரியில் ... | 47 |
| 7. | டில்லியில் செய்தியாளர்களிடையே ... | 48 |
| 8. | புதிய சட்டமன்ற தி. மு. க. உறுப்பினரிடையே ... | 50 |
| 9. | பாராட்டுவோரிடையே ... | 52 |
| 10. | திருச்சி வழக்கறிஞர்களிடையே ... | 57 |
| 11. | மதுரை நீதிமன்றக் கட்டிட கால்கோள் விழாவில் ... | 61 |
| 12. | வணிகர்களுக்கு ... | 62 |
| 13. | உணவு விடுதிகள் சங்கத்தினரிடையே ... | 64 |
| 14. | பத்திரிகையாளர்க்கு ... | 65 |
| 15. | தொழிலாளர்களுக்கு ... | 67 |
| 16. | அரசாங்க ஊழியர்களிடையே ... | 70 |
| 17. | காஞ்சி கைத்தறி வார விழாவில் ... | 74 |
| 18. | கொள்கை விளக்கம் ... | 75 |
| 19. | திருவொற்றியூர் குடியிருப்புக் காலனி திறப்பு விழாவில் ... | 78 |
| 20. | பங்கீட்டுக் கடை வியாபாரிகளிடையே ... | 83 |
| 21. | ஏற்றுமதி இறக்குமதி வணிகர்களிடையே ... | 86 |
| 22. | நீதிக் கட்சி வரவேற்பில் ... | 88 |
| 23. | சென்னை கைத்தறி வார விழாவில் ... | 92 |
| 24. | போஜனா இதழுக்கு அளித்த பேட்டியில் ... | 98 |
| 25. | பண்பாட்டுக் கழகக் கருத்தரங்கில் ... | 100 |
| 26. | காஞ்சி வழக்கறிஞர்களிடையே ... | 103 |
| 27. | தேசீய வாணிபக் கழகத்தில் ... | 105 |
| 28. | சுடான்லி இஃச்டாலின் மருத்துவமனை மருத்துவக் கல்லூரி புத்தாண்டு விழாவில் ... | 108 |
| 29. | தமிழ்நாட்டு சங்கீத சங்க விழாவில் ... | 114 |
| 30. | பெண்கள் உணவுக் கவுன்சிலில் ... | 116 |
| 31. | மகாவீரர் பிறந்தநாள் விழாவில் ... | 117 |
| 32. | காஞ்சி பட்டு-சரிகை விற்பனை சங்கத்தில் ... | 120 |

# முதல் பொதுக் கூட்டம்

நான் தேர்தலுக்குப் பிறகு, தேர்தலில் உங்கள் ஆதர வால் வெற்றி பெற்று, அமைச்சரவைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, சென்னை நகரத்தில் முதன் முதலாக பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இதுதான். பல்வேறு நிகழ்ச்சிகளில் அன்றாடம் சென்னையில் கலந்து கொண்டு வந்துள்ளேன்; ஆனால் பொதுக் கூட்டங் களில் கலந்து கொள்வது இதுதான் முதல் தடவை. நாட்டு மக்கள் நமக்கு அளித்த ஆதரவு, ஆட்சிப் பொறுப்பேற்கும் அளவிற்குப் போய்விட்டது. அதனால்தான், நாம் அடிக்கடி இதுபோன்ற பொதுக் கூட்டங்களில் சந்திக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தேர்தல் வெற்றிகளை அறிவித்த அன்று, காலையிலிருந்து வீட்டில் அமர்ந்துகொண்டு வானொலி மூலம் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நாற்பது, அறுபது, எண்பது, நூற்றியிருபது என்று இப்படி நமது கழகத்தவர் வெற்றி கூடிக் கொண்டே போகப்போக, உள்ளபடியே நான் கவலையடைந்து விட்டேன்; பொறுப்புகளை நமது கைக்கு மக்கள் ஒப்படைத்து விட்டனரே, இனி எப்படி அவர்களைச் சந்திப்பது என்று! அதேபோல், இப்போது உங்களை எல்லாம் என் கண்குளிரப் பார்ப்பதற்குக்கூட நேர மில்லையே! உங்களது கரங்களைப் பிடித்துக் குலுக்கி நன்றி

கூறவும், வணக்கத்தைத் தெரிவிக்கவும் நேரமில்லையே என்று ஏங்குகிறேன்; வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட வருத்தத்தோடும் கவலையோடும்தான், நான், இரண்டு மாதங்களாக நாட்களைத் தள்ளிக்கொண்டு வருகிறேன். இனிய கானம் பாடும் வானம் பாடிப்பறவையாக உங்களிலே ஒருவனாய்ப் பழகி இருந்துவிட்டு, இன்று உங்களைப் பிரிந்து இருப்பது என்றால், மிகவும் கடினமாக இருக்கிறது. தன் விருப்பப்படி பாடிப் பறந்து திரியும் ஒரு வானம்பாடியைப் பிடித்துக் கூண்டுக்குள் அடைத்துவிட்டால், அப்பறவை, எத்தனை துயர்களுறுமோ - எத்தனைத் தொல்லைப் படுமோ- எத்தனை வேதனைப் படுமோ அப்படி வேதனைப்படுகிறேன். நான் உங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அற்றுப்போனதால்! இன்று உங்கள் எல்லோரையும் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். உள்ளபடியே பூரிப்படைகிறேன். நான் என்றும் உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புகிறேன். காங்கிரசுக்காரர்கள் பதவியில் இருந்தபோது நடப்பதிலே ஒரு கம்பீரம், பார்ப்பதிலே ஒரு கம்பீரம், பேசுகிறபோது ஒரு கம்பீரம், ஆகட்டும் பார்க்கலாம் என்று கூறுவதிலே ஒரு கம்பீரம் என்ற நிலையிலே இருந்தனர்! அந்த அளவுக்குப் பதவியிலிருந்து கொண்டு ஆணவத்தோடு நடந்து கொண்டார்கள்!

நாங்களும் அப்படி நடப்போம் என்று யாரும் நினைக்க வேண்டாம். காலையிலிருந்து இரவு இரண்டு மணிவரையிலும்கூட பிரச்சினைகள் பல, அன்றாடம் இருந்து கொண்டே இருக்கிறது. அவைகளைக் கவனித்து நாட்டு மக்களின் வாழ்வு மலரப் பல வழிகளை ஆராய்ந்து கொண்டு வருகிறோம். அதுதான் இன்றைய ஆட்சியாளரின் பொறுப்பு! ஜூன் மாதத்தில் இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துத் தரவேண்டும். அதில் முதலில் வந்து நிற்கிற கணக்கு. காங்கிரசார் வாங்கிவிட்டுப் போன ரூபாய் நாலாயிரம்கோடி கடனுக்குச் செலுத்த வேண்டிய

ரூபாய் இருபத்திரெண்டு கோடியைப் பற்றிய பிரச்சினை யாகும்; இதற்கு முதலில் வழி தேட வேண்டும். அதோடு அல்லாமல் ரூபாய் பதிமூன்று கோடிக்கான கடனை வேறு, இவ்வாண்டிலேயே (1967) தந்தாக வேண்டும். அரசு ஊழியர்களுக்குப் புதிதாக வழக்களித்துள்ள பஞ்சப்படியைத் தருவதற்கு இவ்வைந்தாண்டுக்கு மட்டும் ரூபாய் இருபத்தினன்கு கோடி தேவைப்படுகிறது! எங்கே இவற்றையெல்லாம் உங்களிடத்திலே வந்து சொல்கிறேனே என்ற அச்சத்தால் தான், மாலை நேரங்களில், பொது மேடைகளில், அவர்கள் நம்மைப்பற்றித் திட்டித் திட்டிப் பேசி வருகிறார்கள்! பக்தவத்சலம் அவர்கள் மேடைகளில் மிகவும் காரசாரமாக நம்மைத் திட்டிப் பேசுவதாக இங்கே நண்பர்கள் கூறிக் குறைபட்டுக் கொண்டனர்.

நான் அவரைத் தனியாகச் சந்திக்கும்போது மட்டும் குழைந்து குழைந்து பேசுகிறார்; நமது செயல்களை, பேச்சுக்களை சரி என்று ஏற்றுக் கொள்கிறார்; ஆனால், மேடைகளில் மாலை நேரத்தில் அந்த ஒருமணிநேரம் மட்டும் அப்படிக் பேசுகிறார்: மற்றபடி தனியாகப் பேசும் போது, ஒத்துழைப்புத் தருவதாகவும் கூறி வருகிறார்கள்; ஆறு மாத காலம் அவகாசம் தருகிறோம் என்று கூறினர், ஆனால், மேடைகளில் அப்படி! காங்கிரசு தோற்றதற்குக் கமிட்டி கூடிக் காரணம் கண்டவர்கள் எல்லோரும், பக்தவச்சலம் அவர்களைத்தான் காரணம் காட்டியிருக்கிறார்கள்! அவர்கள் அவரைக் காட்டித் திட்டுகிறார்கள், குறைபட்டுக் கொள்கிறார்கள் என்றால், இவர் ஏன் என்மீது கோபம் காட்ட வேண்டும்? 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்களே, அந்தக் கதையாக இருக்கிறது. தாய்மார்கள், சமைத்ததனால் அழுக்கேறிய பாத்திரங்களைத் துலக்காமல் மீண்டும் அடுப்பின்மேல் ஏற்றமாட்டார்கள். அழுக்கை அகற்றிய பிறகுதான் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி சமைக்க ஆரம்பிப்பார்கள்! அதுபோல் இருபது

ஆண்டுகளாக அவர்கள் ஏற்படுத்திவிட்டுப்போன அழுக்கைத் துலக்குகிறோம்! அழுக்கை அகற்றியானதும் மக்களுக்கு ஆவன செய்யக் காத்துக்கிடக்கிறோம்! அறிவறிந்த மக்கள் அனைவரும் அறிவர் இதனை! பாத்திரங்களைத் தாய்மார்கள் துலக்கிக் கொண்டிருக்கும்போது குழந்தை அழுதால், கணவனைப் பார்த்து, 'குழந்தையைக் கொஞ்சம் தூக்கிக் கொள்ளுங்களேன்; என் கை அழுக்காக இருக்கிறது; சுத்தப் படுத்திக் கொண்டு வருகிறேன்' என்பார்கள்! அது போல ஆட்சியில் உள்ள அழுக்குகளைத் துலக்கிக் கொண்டிருக்கிறேன்! கழகத் தோழர்களாகிய நீங்கள் தான் அழுகின்ற குழந்தைகளாகிய மக்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்றேன். 'கையில் உள்ள அழுக்கைக் கழுவிக் கொண்டு வருகிறேன்' என்றேன்; ஆனால் தோழர்கள் விடவில்லை; அழுக்குக் கையில் இருந்தாலும் பரவாயில்லை துலக்கி முடியாமல் இருந்தாலும் பரவாயில்லை; முதலில் வந்துவிட்டுப் போங்கள்' என்று அழைத்து வந்துவிட்டார்கள்! துலக்கிவிட்டுப் பிறகு உங்களிடத்தில் வரலாம் என இருந்தேன்; என்றாலும், இப்போதே அழுக்குக் கையுடனேயே வரவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. பதவியைப் பறித்துக் கொண்டீர்களே- பழிக்காமல் பல்லாண்டு பாடவா செய்வார்கள் காங்கிரசார். வசைபாடாமல் வாழ்த்தவா செய்வார்கள்? பதவி பறிபோனதால் அவர்களுக்கு எரிச்சலும்- ஏமாற்றமும் ஏற்படுகின்றன. குழந்தைக்கு அப்பம் வாங்கித் தந்து தாய்மார்கள் அழைத்து வரும்போது அப்பத்தைப் பருந்து தூக்கிச் செல்லுமானால், தாய்மார்கள் அப்போது அப்பருந்தை, 'பாழாய்ப்போன பருந்து பறித்துக் கொண்டு போய்விட்டதே' என்று தூற்றத்தானே செய்வார்கள்? வாழ்த்தவா செய்வார்கள். எனவேதான் அவர்கள் நம்மைத் தூற்றிப் பேசி வருகிறார்கள்! பேசட்டும்! தினமும் அரைமணி அல்லது ஒரு மணியாவது மாலை நேரத்தில் மேடைகளில் நம்மைப்பற்றி வசைபாட அவர்களை அனுமதி

யுங்கள்! அப்படியாவது அவர்களது எரிச்சல் அடங்கி மனம் குளிரட்டும்! திராவிடமுன்னேற்றக் கழகத் தோழர்களுக்குக் கொஞ்சமாவது மனிதாபிமானம் இருந்தால், அவர்கள் திட்டுவது குறித்து வருத்தப்பட மாட்டார்கள். நாம் இல்லாததைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் இருந்ததை இழந்திருக்கிறார்கள். இருந்ததை இழந்தவர்களின் இதயத்தில் வேதனை எழத்தான் செய்யும். அவர்களை டிசம்பரில் பார்த்ததற்கு இப்போது பார்த்தால் இளைத்திருப்பது தெரியும்! பாவம் டிசம்பருக்குப் பிறகு இந்த வேதனையால் அவர்கள் மெத்த இளைத்துப் போய் இருக்கிறார்கள். எனக்கே சற்று பரிதாபமாகக்கூட இருக்கிறது - வேதனையாகவும் இருக்கிறது - அவர்களது கவலை தோய்ந்த முகத்தைப் பார்க்கின்றபோது, 'நம்மால் அல்லவா இத்துணை இடர்களும் அவர்களுக்கு ஏற்பட்டது' என்பதை நினைக்கும் போது உள்ளபடியே எனக்கும் பரிதாபம் ஏற்படுகிறது. பதவி பறிபோன பின் பக்தவத்சலம் செய்வதறியாது வீட்டிலேயே நாற்காலியில் அமர்ந்து யோசித்தவராய் 'என்ன மேசை மீது ஏதுமில்லையே- வீடே காலியாகக் கிடக்கிறதே- நாம் இந்த நிலைக்கா வரவேண்டும்' என்று பெருமூச்சு விட்டுப் பெருந்துயரில் ஆழ்ந்திருக்கிறார் என்றால், திட்டாமல் நம்மை வாழ்த்தவா செய்வார். தனக்குப் பார்த்த பெண்ணை அடுத்தவனுக்கு முடித்து வைத்து - அந்தத் திருமணமும் தன் கண்ணெதிரிலேயே நடக்கின்ற போது-மேளவாத்திய இசையை கேட்கின்ற போது - தனது தலையே வெடித்திடும் போல இருக்கும் போதும் நிறுத்துங்கள் என்று கூறிடத் தோன்றும். அதற்கே அப்படி என்றால் இருபது ஆண்டுகள் சுவைத்த பதவியை விட்டு விடவும் அந்தப் பதவியில் எதிர் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் அமரவும் கண்டால் அவருக்கு எப்படித்தான் மனம் அமைதி பெறும்? அப்படிப் பேசுவது மனித இயல்பு; ஆனால் அதைக் கேட்டு நாம்

வேதனைப்படக் கூடாது; மாறாக, அமைதியைப் பின்பற்ற வேண்டும் நீங்கள் ஒவ்வொருவரும் அப்படி அமைதியைக் கடைப்பிடிப்பீர்களானால் எனக்குள்ள பளு குறையும் - எனக்குள்ள வேலைகள் மீதியாகும். பக்தவத்சலம் ஏதோ நேற்றுவரை பாராட்டியதாகவும் இன்றுதான் ஏதோ புதிதாகத் திட்டுவதாகவும் நீங்களே நினைத்து ஏன் வருந்துகிறீர்கள்.

ஏதோ இத்தனை நாள் அவர் பூவினால் அர்ச்சித்தது போலவும், இன்று மட்டும் பொல்லாங்கு உரைப்பது போலவும் திட்டுவது போலவும் என்னிடம் சொன்னீர்கள்! அவர்களைப் பேச விடுங்கள் - அதுதான் நமக்கு நன்மை தரும். நான் டில்லிக்குச் சென்ற போது அங்குள்ளவர்கள் எப்படி நீங்கள் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்தீர்கள் என்று கேட்டு அதிசயப்பட்டார்கள் - பாராட்டினார்கள். நாம் கையாண்ட அமைதி முறைகளையும் ஏற்றுக் கொண்ட இன்னல்களையும் அனுபவித்த அல்லல்களையும் அவர்களுக்கு நான் எடுத்துக் கூறினேன். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன சாதித்தது! என்று கேட்பவர்களுக்குக் கூறுங்கள் அரிசியே இல்லாமல் இருந்த களஞ்சியத்தில் இந்த அரசு கொள்முதல் செய்து இருப்பு வைத்திருக்கிறது; பதுக்கலைப் பறிமுதல் செய்கிறது; பதுக்கல்காரர்களைத் தண்டிக்கிறது; முன்பு அவர்கள் பட்ட கடனை யெல்லாம் அடைத்து வந்திருக்கிறது; மக்களின் நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் தமிழை அரியணை ஏறச் செய்திருக்கிறது; அன்று இருந்த விலையைவிட இன்று ஓரளவுக்கு விலையைக் குறைத்து இருக்கிறது; அரிசி விலையைக் குறைத்துள்ளதோடு 'அரிசி இல்லை' என்ற நிலையையும் மாற்றியமைத்திருக்கிறது; இது போதாதா? என்று கேளுங்கள். இதுகூட உங்களால் செய்ய முடியவில்லையே? என்றும் கூறி விளக்குங்கள். பெரிதாக ஏதும் செய்து விட்டதாகக் கூறி நாங்கள் பெருமை கொள்ளவில்லை!

அதிகம் செய்துவிட்டதாகக் கூறி ஏதும் அகமகிழ்ச்சி யடைய வில்லை! இனித்தான் செய்ய வேண்டியவை- ஈடுபட வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன! மூன்று வார மாகப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி இல்லை என்றால், 'திங்கள், வியாழன், பட்டினி இரு' என்றார்கள்! பழத்தைச் சாப்பிடு என்றார்கள்! 'முடியுமானால் எலிக் கறியைச் சாப்பிடு' என்றார்கள் இப்படி எல்லாம் ஏழை மக்களைக் கண்டு எள்ளி நகையாடி வந்தார்கள். இது நியாயமா? இது தான் சனநாயகமா? விளைநிலமில்லாத சென்னை கோவை போன்ற இடங்களுக்கும் மற்றும் பல நகரங்களுக்கும் அரசு உணவுப் பங்கீடு முறையில் உணவு வழங்கி வரு கிறது. அரிசி கிடைக்க வழியில்லை யென்று விவரம் அறிந்த உடன் இங்கெல்லாம் 'அரசுதானே அரிசி தர வேண்டும்? ஆட்சியை எங்களிடம் ஒப்படைத்தபோது வெறும் ஐந்நூறு டன் அரிசிதானே, களஞ்சியத்தில் இருந்தது. சென்னை நகரமக்களுக்கு இது ஒரு நாளைக்கே காணுதே? அப்படி இருக்க மற்ற இடங்களுக்கும், சென்னைக்கு மறு நாளைக்கும் என்ன செய்வதாக நினைத்து விட்டுச் சென்றார்கள்? மறுநாளைக்கு மக்களைப் பட்டினி போடுவதா? புதியவர்களாயிற்றே பத்து நாளைக்கான உண வாவது சேமித்து வைத்துவிட்டுப் போவோம் என்று இல்லாமல் காலி செய்து விட்டுப் போனார்களே! 'கொள் முதல் செய்ய நேரமில்லை' என இப்போது அவர்கள் கூறலாம். நேரம் இருந்தது; அந்த அரிய நேரத்தை, பைல்களைக் கொளுத்துவதிலேயே செலவிட்டனர். 'பைல்' களைக் கொளுத்த நேரமிருந்தது அரிசி தேட நேரமில்லையா? பகைவர்கள் ஒரு நாட்டைப் பிடித்து ஆட்சிக்கு வரு வார்கள் என்றால், அப்போதுதான் ஏற்கனவே இருக்கும் அரசினர், தங்கள் நாட்டின் இரகசியத்தை வெளிப்படுத் தும் குறிப்புகள் உள்ள 'பைல்' களை மட்டும் பகைவர் களிடம் சிக்கக்கூடாது என்பதற்காக மட்டும் பத்திரமாக

பாதுகாப்பான ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்வர்; இல்லையாயின் கொளுத்தி விடுவர். அப்படி என்ன நானும் பக்தவத்சலமும் எதிரிகளா? பகைவர்களா? அண்டை நாட்டவர்களா? பிறகு ஏன் கொளுத்த வேண்டும்? இது குறித்து இந்தியாவில் உள்ள பல அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், பக்தவத்சலனாரின் இந்த செயல் குறித்து மிகவும் கடுமையாக கேவலமாக ஆங்கிலத்தில் ஐந்தாறு வார்த்தைகள் சொன்னார்கள்; அப்போது அதை செவிமடுத்துக் கேட்கவும் எனக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. நானே அந்தக் கடுமையான ஆபாச வார்த்தைகளைச் சொல்லக் கூடாது. எனவே பக்தவத்சலத்தைப் பற்றி இப்போது பரிதாபமாக இருக்கிறது. அந்த அளவுக்குப் பெரிய மனிதர் சிறிய செயலில் ஈடுபட்டுக் கேவலத்திற்கு இடம் தேடிக் கொண்டாரே என்பதை நினைக்கும் போது, மெத்த அவர்பால் இரக்கம் கொள்கிறேன். நான் இதைப்பற்றி இவ்வளவு அதிகமாக எடுத்துப் பேச மாட்டேன்; அவர் இதைவிடாமல் பேசுவதால், அதற்கு பதில் தரக் கடமைப் பட்டுள்ளேன். அன்றுகூட சட்டமன்றத்தில், 'ஏதோ பெரியவர் செய்து விட்டார்' என்று சொல்லி, அப்படியே விட்டுவிட்டேன். இவ்வாண்டில் எட்டு இலட்சம் டன் உணவு கொள்முதல் செய்ய வேண்டும். 'ஏன்' என்று கேட்டு விளங்கிக் கொள்ளுங்கள். நமது தமிழகத்தின் ஓராண்டின் விளைச்சல் நாற்பது இலட்சம் டன் ஆகும்; இதில் சென்னை கோவை போன்ற தொழில் நகரங்களுக்கும், மற்ற நகரங்களுக்கும் அரசுதான் அரிசி வழங்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் எட்டு இலட்சம் டன் உணவு கொள்முதல் செய்தால், பஞ்சம் ஏற்பட்டாலும் விலை ஏறினாலும் - இந்தக் குறிப்பிட்ட நகரங்களில், 'உங்கள் பங்கீடு இதோ இருக்கிறது' என்று கூறி நியாய விலையில் கொடுத்து, மக்களுக்கு உதவ முடியும். இது மாவட்ட கலெக்டர்களுடன் இரண்டு நாட்கள் கலந்தாலோசித்து எடுத்த முடிவாகும். தாகம்

ளடுத்த உடன் தண்ணீர் எப்படிக் குடிக்காமல் இருக்க முடியும்? அதுபோல அரிசிப் பங்கீடு வேண்டுமென்றால் கொள்முதல் செய்ய வேண்டாமா? இதுபற்றி இங்குள்ள காங்கிரசுக்காரர்கள் - குழப்பம் செய்கிறார்கள். தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் சொல்கிறார் 'கொள்முதல் செய்வது நல்லதுதான்; இது போதாது; இன்னும் அதிகமாக கொள்முதல் செய்யுங்கள்' என்று. காங்கிரசில் தலை அப்படி!- தலை தவிர மற்ற உடலில் உள்ள பாகங்கள் இப்படி! கொள் முதலில் கொடுமைகள் நிகழுமானால் என்னிடம் எடுத்துச் சொல்லுங்கள், என்றேன். நிலமே இல்லாதவன் வீட்டில் நில முதலாளி ஒருவன் ஆறு மூட்டைகளைப் பதுக்கி வைத்திருந்தான்! அதைக் கண்டு பிடித்துப் பறிமுதல் செய்தது நமது அரசு! இது கொடுமையா? ஏழையானதால் உண்மையை சொல்லிவிட்டார்! ஏழைக்குப் பொய் சொல்ல தைரியம் வராது! பணம் சேர்ந்து விட்டால் பொய் தாராளமாக வரும்! 'பூசையறை' என்று போர்டு போட்டு விட்டு - உள்ளே பதுக்கல், இருந்தால் - கள்ளச் சாமான் இருந்தால் அதை விட்டு விட்டு வர நாங்கள் என்ன பைத்தியக்கார சர்க்காரா நடத்துகிறோம். எனவே, நாம் எந்த மிட்டா மிராசுக்கும் பயப்படப் போவதில்லை! எத்தனை மாடிகள் கொண்ட வீட்டில் பதுக்கல் இருந்தாலும் என்னதான் கதர் சட்டை அணிந்த காங்கிரசுக்காரராய் இருந்தாலும், அந்தச் சட்டை எவ்வளவுதான் தடிப்பாய் இருந்தாலும் அதைக் கண்டு நாம் அஞ்சப் போவது இல்லை. எத்தனைத் தொல்லை வந்தாலும் பின் வாங்கப் போவது இல்லை. சமூக விரோதச் சக்திகளை ஒடுக்கவேதான், மக்கள் இப்போது இந்த அரசை அனுப்பி வைத்துள்ளனர்!

மணம் பரப்புகின்ற மல்லிகைப்பூ கிடைக்க வேண்டுமானால் தோட்டத்தைச் சுற்றி வேலி போட வேண்டும். அதுபோல், நம் நாட்டு அரிசி கடத்தப்படாமல் நமக்குக்

கிடைக்க வேண்டுமானுல், எல்லையைச் சுற்றிக் காவல் போட வேண்டும்! அதைத்தான் நாம் வந்ததும் செய்து காட்டினேம். இதைப் பக்தவத்சலம் அவர்கள் 'இது பிரமாதமா? என்னலாம்; இதையாவது அப்போது அவர் செய்திருக்கலாமே; செய்வது தானே! பதினெட்டாயிரம் டன் அரிசி கேரளத்துக்குத் தருவதாக ஒப்புக் கொண்டேன்; இது யார் பட்ட கடன்? மூன்று முறை இருந்தவர்கள் பட்ட கடன் தானே? சனநாயகத்தில் இருந்தவர் கடன் வைத்துவிட்டுப் போனுலும், வந்தவர் அடைப்பதுதான் பண்பாடு - முறை அதைத்தான் செய்து காட்டினேப்! நல்ல உற்பத்திப் பெருக்கத்திற்கு இந்த அரசு வழிவகை செய்து வருகிறது. கழக ஊழியர்கள் உழவர்களாக மாறி, உழவுத் தொழிலில் ஈடுபடத் தயாராக இருக்க வேண்டும். தரிசு நிலங்களை விளை நிலங்களாக்க ஐயாயிரம் தொண்டர்களை சென்னை நகரம் மட்டும் தரத் தயாராக இருக்க வேண்டும்; இதனுல் உற்பத்தியைப் பெருக்க வழி செய்யலாம். நான் அழைக்கின்ற நேரத்தில், அந்தக் காரியத்திற்காக ஐயாயிரம் பேரும் வரத் தயாராக இருக்க வேண்டும்! எதிர் பார்க்கின்ற அளவிற்கு உற்பத்தி பெருகிவிட்டால், ஒரு படி என்ன—அதைவிட மலிவாகவும் மக்களுக்கு அரிசி போட முடியும். மூன்றுபடி என்பது எங்களது கழகத்தின் - இவ்வைந்தாண்டிற்குள் போட முயற்சிக்க வேண்டும் - என்ற இலட்சிய அளவு!

பக்தவத்சலத்தின்மீது குழந்தைகளுக்கு ஆசை அதிகமாம்! என்மீது கூடத்தான் குழந்தைகளுக்கு ஆசை அதிகம்! பக்தவத்சலம் தாத்தா அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார் என்பதால் பேரப்பிள்ளைகளான குழந்தைகளுக்கு ஆசையாகத்தான் இருக்கும். தேர்தலில் தோல்வியுற்ற உடன் 'சங்கீதம் கேட்கப் போகிறேன்' இலக்கியங்கள் படிக்கப் போகிறேன்' என்றுர்; ஆனுல் மீண்டும் பழைய தெம்மாங்குதான் பாடுகிருர்! ஓரிரு ஆண்டுகளுக்கு

ஓய்வு எடுத்துக் கொண்டு அவர் கச்சேரிகள் - கலை நிகழ்ச்சிகள் கேட்பதுதானே. நான் பதவி மோகம் பிடித்தவன் அல்லன்; இரயில் போகும் போது இட நெருக்கடி ஏற்படுமானால், விலகிக் கொண்டு, அடுத்த வண்டியில் ஏறிக் கொள்பவன்! இரயிலில் கூட இடம் பிடிக்கும் பழக்கம் எனக்குக் கிடையாது. பக்தவத்சலம் என்னைத் திட்டுகிறார் என்றால், அது எனக்கும் அவருக்கும் உள்ள வேலை; அதை நான் கவனித்துக் கொள்கிறேன். அப்படி அவர் என்னைத் திட்டிப் பேசினாலும் எனக்குக் கவலை இல்லை. அவர் திட்டித் திட்டி அதைக் கேட்டுக் கேட்டு பழக்கப்பட்டவன் நான்! எனவே நீங்கள் அனைவரும் இந்த விஷயத்தில் மனதைத் தளரவிடாமல், அரசினருக்கு உறு துணையாக இருந்து, ஆதரவு தாருங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அரைக்க அரைக்கத்தான் சந்தனம் மணம் கமழும்! உதைக்க உதைக்கத்தான் பந்து மேலே உந்தும்! அதுபோல், கழகம் எதிர்க்க எதிர்க்கத்தான் மேலும் வளர்ச்சி பெறும்! எனவே மாற்றார் மாலை நேரங்களில் மேடைகளில் ஏச ஏசத்தான், நாம் செய்த நல்ல காரியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது; ஆகையால் காங்கிரசுக் காரர்கள் நம்மை ஏசுவதை நல்லது எனக் கூறி, அதனை வரவேற்கிறேன்.

(சென்னை 67 ஏப். 27)

# தஞ்சைத் தரணியில்

—: :—

தேர்தலுக்கு முன் நான் கலந்து கொள்ளாத கூட்டங்களிலெல்லாம் கழகத் தோழர்கள், ஆட்சியைப் பிடிப்போம் 140 இடங்களைப் பிடிப்போம் என்றெல்லாம் பேசுவார்கள்.

எனக்கேகூட அதைப் படிக்கிறபோது கூச்சம் ஏற்படும் - ஐயப்பாடும் அச்சமும் எழும் - இப்படி இவர்கள் பேசுகிறார்களே என்று!

ஆனால் இன்று அவர்கள் பேசியதே பலித்திருக்கிறது. அத்தகைய தோழர்களுக்கும் பெரியவர்களுக்கும் தலை வணங்கி எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களை நீங்கள் வாய்குளிரப் புகழ்ந்தால் மட்டும் போதாது; நாங்கள் செய்யும் காரியத்தை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல் எங்களுக்கு உறு துணையாகவும் இருக்க வேண்டும்.

காங்கிரசார், மக்கள் தொடர்பைக் கெட்டிப்படுத்துவோம் எனத் தீர்மானித்திருக்கிறார்கள். எனவே, சந்தர்ப்பம் பார்த்து நம்மைக் கவிழ்க்கப் பார்ப்பார்கள்!

நீங்களெல்லாம், அமைச்சரவை செய்வதை மக்களுக்கும் - நாங்கள் தவறுகிறபோது எங்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

நாம் வெற்றி விழா கொண்டாடுவதைப் போலவே,

இதை விடப் பெரிய விழாவை அவர்கள் 1947-ல் கொண் டாடினார்கள்.

ஆனால் அவர்களுக்கும்- மக்களுக்குமிடையே தொடர்பு அற்றுவிட்டதால், 20 ஆண்டுகளிலேயே மறைந்து போயி னர்!

இப்போது தோல்விக்கான காரணங்களைக் காங்கிரசுத் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அதற்கான உண்மையைச் சொல்கிறேன். மக்களிடையே அவர்கள் தொடர்பு நாளுக்கு நாள் மறைந்து விட்டது!

காங்கிரசுக்கும் - மக்களுக்குமிடையே பள்ளங்கள் தோன்றிவிட்டன!

இத்துடன் கள்ள மார்க்கெட்காரர்களும் கொள்ளை இலாபக்காரர்களும், பணமுதலைகளும், ஊரையடித்து உலையில் போடுபவர்களும் சேர்ந்து, அதனைப் பெரிய பள்ளங்களாகச் செய்துவிட்டனர்!

அந்தப் பள்ளங்களை நிரப்பத்தான் காமராசர் பாடு பட்டார்; ஆனால் ஏதும் செய்யமுடியவில்லை!

வளர்ந்து வரும் கழகத்தை அழிக்க தொண்டர்களை விட்டு ஏசச் சொன்னார்கள்- நம்மைக் கொடுமைப்படுத்திப் பார்த்தார்கள்!

கழகம் இவற்றையெல்லாம் தாங்கி வந்திருக்கிறது!

அவர்கள் ஆட்சியிலே தாய்மார்கள் சிந்திய கண்ணீர்த் துளிகளின் அளவைக் கணக்கெடுத்து, பூண்டி வாண்டை யார் போன்றவர்கள் வீசிய பன்னீர்த்துளியின் அளவைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தனர்! இவைதான் அவர்கள் வீழ்ச்சிக்குக் காரணம்!

சில வேளைகளில் பெரியவர்கள் கோபமாகச் சொல்வது நல்லதாகவும் முடிவதுண்டு; அதைப்போல் நம்மைக் 'கண்ணீர்த்துளிகள்' என்று பெரியவர்கள் பேசி வந்தனர்.

அத்தகைய கண்ணீர்த் துளிகள், இன்று ஆட்சிபீடம் ஏற்றியுள்ளார்கள்!

எங்களைத் தனிப்பட்ட முறையில் இழித்துப் பேசியதை, காங்கிரசுக் கட்சியின் பெரியவர்களே அனுமதித்து வந்தனர்!

ஆனால் பொது மக்கள், அவைகளைத் துண்டிக்கும் வகையில் தேர்தலில் அவர்களை வீழ்த்தி, கழகத்தை ஆட்சிபீடம் ஏற்றியுள்ளனர்.

எங்களுடைய பிரச்சாரத்தைத் திரித்துப் பேசினார்கள்! நாங்கள் கூறிய காரணங்களை ஆலோசனைகளைப் புறக்கணித்தார்கள்! ஆனால் நான் அப்படிச் செய்ய மாட்டேன். சில நாட்களுக்கு முன்பு ஒரு காங்கிரசுத் தலைவரைச் சந்தித்தேன்; அப்போது. தேர்தல் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது, 'உன்னைவிட என்னைவிட மக்கள் புத்திசாலிகள்' என்று சொன்னார்; எப்படி கண்டு பிடித்தீர்கள்? என்று கேட்டேன்: 'நாங்கள் எங்கு போனாலும் கொட்டு மேளத்துடன் வரவேற்றார்கள்; மாலை மரியாதையுடன் வரவேற்றார்கள்; ஆனால் ஓட்டுப் பெட்டியைத் திறந்தால், இப்படி முடிவாகி விட்டது; ஆகவே, மக்கள் புத்திசாலிகள் இல்லையா?' என்றார்.

இதை மற்ற காங்கிரசார் உணர்ந்தால், அது அவர்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது!

பல நாட்களுக்கு முன்பிருந்தே மக்களது கருவில், நமக்குக் கிடைத்த இந்த வெற்றி வளர்ந்து வந்திருக்கிறது; அதற்காக நாட்டு மக்களைப் பார்த்து நான் தலைவணங்குகிறேன்.

காங்கிரசார் நம்மைப் பார்த்து, என்ன சாதித்து விட்டீர்கள்? என்று கேட்கிறார்கள்; இதை வரவேற்கிறேன்.

இதையே அவர்களைப் பார்த்து நான் கேட்கவும் மாட்டேன்.

சட்டமன்றத்திலே நாம் நியாயம் கேட்ட போது, அவர்கள் பதில் சொல்ல மறுத்தார்கள் - இவர்கள் இப்போது கேட்கிறார்கள் - நம்மைப் பார்த்து!

நாம் பதவி ஏற்று இருபது நாட்கள்தானே ஆகியுள்ளன. நான் அவர்களைக் கேட்கிறேன் 'நாட்கள்', வருடங்கள் ஆகிவிட்டனவா? - எங்கள் ஆட்சியில்? அல்லது இருபது ஆண்டுகள் இருபது நாட்கள் ஆகிவிட்டனவா நீங்கள் ஆண்டபோது? என்று.

எண்ணி இருபது பாராட்டுக் கூட்டங்கள்கூட நாம் நடத்தி முடிக்க வில்லை; அவ்வளவுக்கு அமைதியாய் இருக்கிறோம்.

பதவிக்கு வந்தாலும் அமைதியாய் இருக்கிறோம் என்பதை, தி. மு. கழகம் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது!

நான் மக்களில் ஒருவன்! காங்கிரசார் நினைக்கிறபடி, மக்களை ஏமாற்றிவிட முடியாது.

ஒரு பத்திரிகை நிருபர் என்னை வந்து கேட்டார்- அவர்கள் (காங்கிரசார்) பாராட்டுக் கூட்டம் நடத்துகிறார்களே - அதுபோல் நீங்கள் நடத்த வில்லையா? என்று.

நாம் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

என்னைப் புதிதாகப் பார்க்க வருகிறவர்கள், நீங்களா அண்ணாதுரை? என்று கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

அந்த அளவுக்கு நானும் நமது கழகமும் அமைதியாக நடந்து கொள்வதைக் கண்டு ஆச்சரியப் படுகிறார்கள்!

இதையெல்லாம் நீங்கள் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் - பத்திரிகைகள் எழுதிக் காட்ட வேண்டும்!

காங்கிரசார் நம்மிடையே ஆட்சியை, ரூபாய் ஏழு கோடி துண்டு விழும் கட்டத்தில் - 500 டன் அரிசி மட்டும்

இருப்புடன் ரூபாய் மூன்று கோடி ரிசர்வ் பாங்க் கடனும் உடன் விட்டுச் சென்றார்கள்!

கழுத்தில் உள்ளத் தங்கச் சங்கிலியை, அவசரத்துக்கு அடகு வைத்து வாங்குவோம்- என்று கடைக்கு எடுத்துச் சென்று உரைத்துப் பார்க்கிறபோது 'அது தங்கம் அல்ல வெள்ளிதான் இருக்கிறது உள்ளே' என்றால், எப்படி இருக்கும்?

அதே போல், நம்மிடையே வந்துள்ள ஆட்சி, தங்கம் அல்ல என்பதைக் கண்டு பிடித்திருக்கிறோம்!

நம்மிடம் ஆட்சியை அவர்கள் கொடுத்த போது, மேட்டூர் அணையில் போன ஆண்டு இந்த நாளில் எவ்வளவு நீர் இருந்ததோ அதே அளவுக்குத்தான் இப்போது வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்!

மைசூர் மாநிலத்திடம் மின்சாரம் கடன் வாங்குவது பற்றிக் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் யூனிட்டு ஐந்து காசுக்கு அடங்குகிறது; ஆனால் மைசூரிடமிருந்து ஒன்பது காசு விலையில் வாங்கி வந்திருக்கிறார்கள். நாம் எழுதிக் கேட்டதில், மைசூர் முதலமைச்சரும் குறைப்பதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆந்திராவிலிருந்து நெல்லூர் அரிசி அனுப்புவதை நிறுத்தி விட்டிருந்தார்கள்; தற்போது நமது முயற்சியால் 50,000 டன் (ஐம்பதாயிரம்) கொடுத்து உதவ ஒப்பி இருக்கிறார்கள்.

நாம் கேரளத்துக்கு 18 ஆயிரம் டன் அரிசி கடன் கொடுக்க ஒப்புக் கொண்டது உண்மை; இதை எதிலிருந்து கொடுக்கிறேன் என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

சென்ற ஆண்டில் ஆந்திரத்திலிருந்து கேரளத்துக்குப் போக வேண்டிய 10 ஆயிரம் டன் அரிசியும் 5 ஆயிரம் டன் கோதுமையும் பின்னால் தருவதாக தமிழ்நாடு அரசாங்கம் வாங்கிக் கொண்டது; ஆகவே, பக்தவத்சலம் பட்ட கடனை நான் தற்போது தீர்த்துக் கொண்டு இருக்கிறேன்.

நமது அரசு, பதுக்கலைத் தீவிரமாக ஒழித்துக் கட்டி வருகிறது. இதனால் இந்த ஆட்சிக்கு ஏதாவது தீங்கு வந்தால், உடனே விலகிவிடுவோம்.

ஆனால் பதுக்கல்காரர்களைக் கண்டு இந்த சர்க்கார பயந்து விடாது!

நான்கு மாதத்திற்கு முன் இதே தஞ்சை நகரில் எல்லா கட்சியினரும் சேர்ந்து உணவு கேட்டு உண்ணா நோன்பு இருந்தார்கள்; அதனை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இன்று இதே நகரில் பதுக்கல்கள் கண்டு பிடிக்கப் படுகின்றன!

ஏழைகளின் வயிற்றில் அடிப்பவர்களை நிச்சயமாக சந்திக்குக் கொண்டு வருவோம்.

'அண்ணாதுரை, கூட்டங்களில் கதைதான் சொல்வான்' என்றார்கள் காங்கிரசுக்காரர்கள்!

புள்ளி விவரம் சொல்லுகிறபோது அது புரியாதவர் களுக்குக் கதைபோலத் தோன்றியிருக்கும்.

"எறும்பு தனது உணவுக்காகச் சேர்த்து வைத்திருப் பதை யாரும் அனுமதிப்பார்கள்; ஆனால் எலிகள், வலையிலே சேர்த்து வைப்பதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள் அத்தகைய எலிகளைப் பிடிக்க வலையிலே நாங்கள் கையை விடுகிறபோது, எங்களை எதுவும் கொட்ட முடியாது!

எங்களைக் கொட்ட வேண்டியவர்கள் எல்லாம் கொட்டியாகி விட்டது!

பதுக்கல்காரர்களுக்கும் எங்களுக்கும் விரோதமா என்ன? இல்லையே.

பதுக்கலை வெளிக் கொணர நாங்கள் மிகத் தீவிரப் படுத்துவதற்குக் காரணம் - நாங்கள் ஆட்சிக்கு வந்தது- ஏழைகளுக்கு உணவளிக்கவே!

விலைகள் குறைய உற்பத்தி பெருகவேண்டும்; உற்பத்தியானதை நல்ல முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆகவே பதுக்கலை ஒடுக்கியாக வேண்டும்.

இது, நந்தனூர் காலமல்ல—சொல்வதைக் கேட்டுக் கொள்ள!

சிதம்பரம் போக நந்தனூர் விரும்பிய போது, போவதற்கு அனுமதிக்காமல் தீட்சதர், வயலுக்குப் போகச் சொன்னது போல-நம்மை சிலர் நினைக்கிறூர்கள்!

உற்பத்தி பெருக ஓராண்டு இரண்டாண்டுகள் ஆகலாம்.

ஆகவே முதலில் பதுக்கலை ஒழிக்க வேண்டிய நிலையில் இருக்கிறேம்.

விலை குறைப்புத் திட்டத்துக்கு இத்தகைய திட்டங்கள் அடிப்படையானவை!

"என்ன செய்து விட்டார்கள்?" என்று காங்கிரசார் கேட்கிறூர்களே—இத்தகைய நல்லதைத்தான் கழகம் செய்து வருகிறது!

எனது நண்பர்-எதிர்க்கட்சித் தலைவர், 'காங்கிரசுக் காரர் வீடாகப் பார்த்து நுழைகிறீர்களே' என்று கேட்டார்.

அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? எங்கே பதுக்கலோ அங்கே நுழைகிறேம்; கதர் போட்டவர்கள் எல்லாம் காங்கிரசுக்காரர்களா என்ன?

உண்மையான காங்கிரசுக்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்-பதுக்கல்காரனைப் பார்த்து, அவன் போட்டிருக்கின்ற கதர்ச் சட்டையைக் கழற்றிவிடச் சொல்ல வேண்டும்!

பதுக்கலைப் பிடிக்க பொதுமக்களாகிய நீங்கள், உண்மையான தகவலைப் போலீசாருக்குக் கொடுங்கள்.

தவருன தகவல் கொடுத்துப் போலீசு அதிகாரி களுக்கு அவமானம் தேடித்தரக் கூடாது.

உண்மை இருந்து - போலீசார் நீங்கள் சொல்வதைச் செய்யத் தவறினுல் - பிறகு என்னிடம் கூறுங்கள்.

கட்டுப்பாட்டை எடுத்துவிட வேண்டும் என்று சிலர் கேட்கிருர்கள்.

"காரணம் கட்டுப்பாடு நீக்கப்படும்" என்று நானே சொன்னேன்; ஆனுல் 'ரேசன் இருக்காது' என்று நான் சொல்லவில்லை.

கொள்முதல் செய்வதைக்கூட சிலர் குறை கூறு கிருர்கள்.

கொள்முதல் எதற்குத் தேவை? ரேசன் உள்ள இடங் களுக்கு விநியோகம் செய்ய வேண்டியுள்ளது; ஆகவே கொள்முதல் தேவை.

கொள்முதல் செய்ய கட்டுப்பாடு இருந்தாக வேண்டும். நிலச் சொந்தக்காரர்களே கடமை உணர்ந்து கொள்முத லுக்கு உதவினுல் கட்டுப்பாட்டை நீக்கி விடலாம்.

கொள்முதல் என்ருல் என்ன? காவிரியில் நீர் அதிக மானுல் கொள்ளிடத்தில் நீரைத் தேக்குகிருர்கள். அது போல, தேவைக்குப் போக உபரியையே கொள்முதலுக்குக் கொடுங்கள்; எனக் கோருகிரும்.

சாப்பிடும் போது பசி அடங்குவதற்காகச் சாப்பிட வேண்டும். பசி அடங்கியதும் ருசிக்காகச் சாப்பிட வேண்டும். அதுபோல 8 லட்சம் டன் கொள்முதல் ஆனதும் பிறகு நீங்கள் கொடுப்பதை மட்டும்தான் பெற்றுக் கொள்வோம். (2-4-67)

# தமிழ் வெளியீட்டுக் கழக நூல் வெளியீட்டு விழாவில்

தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள இருபத்திரண்டு நூல்களை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைந்தாலும், இந்த நூல்களில் எதையாவது ஒன்றினை நான் எழுதியிருந்தால் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். 'நூலை வெளியிடுபவன்' என்ற முறையில் இந்த விழாவில் பங்கேற்றதைவிட, 'எழுதியவன்' என்ற முறையில் வந்திருந்தால் மேலும் நான் பெருமிதம் அடைவேன். இந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் பணியினைப் பாராட்டுகிறேன்; என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும் 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' என்றும் நாம் வைத்துக் கொண்டிருப்பது எல்லாம், 'தமிழ் வளர வேண்டும்' என்பதால் அல்ல! தமிழ் வளர்ந்துதான் உள்ளது. 'தமிழ் வளர வேண்டும்' என்பதைத்தான் 'தமிழ் வளர்ச்சி அடையவேண்டும்' என்கிறோம். அதாவது, 'தமிழ் வளர்ந்த அளவுக்குத் தமிழன் வளரவேண்டும்' என்கிறோம்.

தமிழ் வெளியீட்டுக் கழகம் தனது பணியைச் சீரிய முறையில் செய்து வருகிறது. வலிவும், பொலிவுமிக்க நமது தமிழின் சீரிளமைத் திறத்தையும் உயர்வையும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்து வருகிறோம். நமது தாய் மொழியான தமிழ், உயர் தனிச் செம் மொழி; இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும். 'நம்முடைய தாய்மொழி உயர்வானது' என்ற

நினைப்பு, உடனே அந்த நினைப்பினால் ஆபத்து வருமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டு, தமிழால் நாம் வளரமுடியும் என்று நம்பி தாய்மொழி மீது நாம் பற்று வைத்திருக்கிறோம். தாய்மொழி மீது நாம் பற்று வைத்திருப்பது இயற்கையானது! தாய் மொழிக்கு ஏற்படும் ஏற்றம் நமக்கு ஏற்படும் ஏற்றமாகும். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் சொன்னார்கள்: 'தாய்மொழிப் பற்று கடவுள் தன்மைக்கு ஈடானது. அதனால்தான் நம் மொழிக்குக் கெடுதல் ஏற்படும் என்று ஐயப்பட்டாலே கொதித்து எழுகிறோம்! என்றும் நமக்கு அதுமாதிரியான உணர்வு இருப்பது இயற்கையும்கூட! தெருவிலே பேசிக் கொண்டிருக்கும் இரண்டு பேர், அவர்களுக்குள் எதையோ பேசிக் கொண்டு நம்மைப் பார்த்துச் சிரித்தாலே நமக்கு எரிச்சல் ஏற்படுகிறது, கோபம் வருகிறது. அந்த இரண்டு பேரும் உண்மையிலேயே நமக்குச் சம்பந்தமில்லாததைப் பேசிக் கொண்டிருந்தாலும் நம்மைப் பார்த்துச் சிரித்தவுடன் கோபமடைகிறோம். பிற மொழிக்காரர்கள், கூடிக் கூடிப் பேசும்பொழுது, நமது தாய்மொழிக்கு ஆபத்து என்று ஐயப்பாடு எழுவது இயற்கை! பல மொழிகளைக் கொண்ட நமது நாட்டில் 'ஒரு மொழிக்கு மட்டும் ஏற்றம்' என்ற நிலை ஏற்படுமானால், கோபம் ஏற்படுவதில் வியப்பில்லை.

ஷேக்ஸ்பியர் சீசரின் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'சீசரின் மனைவி குற்றங் குறைகளுக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும்' என்று கூறியுள்ளார். அதுபோல், பெரிய அரசை நடத்திச் செல்பவர்களும் எந்த விதமான குறைகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்; ஒரு மொழிக்கு மட்டும் சலுகை காட்டுபவர்களாக இருக்கக்கூடாது!

இங்கு மத்திய அரசின் கல்வியமைச்சர் திரிகுண சென் அவர்கள் வந்திருக்கிறார்கள்; அவர்களிடம் தெரிவித்துக் கொள்வேன்: "தமிழகத்தில், தமிழ் வளர்ச்சிக் கழகம் நூல்களை வெளியிட்டால் மட்டும் போதாது. தமிழ் வளர்ச்சிக் கழக நூல்களை புதுடில்லியிலும் வெளியிடவேண்டும்" என்று!

சில நாட்களுக்கு முன்பு நான் டில்லியில் இருந்த போது, உள்துறை அமைச்சர் சவானைச் சந்தித்தேன்; அவர், நான் மகிழ்ச்சியடைவேன் என்பதற்காகவோ என்னவோ; ஆங்கிலம் நீடிக்க வகை செய்யக் கொண்டுவரப் பட்டிருக்கும் சட்டத்தில் 'இந்தி மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கும் வகை செய்வதைப் பற்றியும் குறிப்பிடப் படும்' என்றார். 'மற்ற மொழிகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், நான் மகிழ்ச்சியடைவேன் என்று அவர் கருதியிருக்கிறார். நான் சொன்னேன் 'இந்தியும் மற்ற மொழிகளும், என்று குறிப்பிடுவதே இந்திக்கு ஏதோ சலுகை காட்டுவதாகவே இருக்கிறது; எல்லா தேசீய மொழிகளுக்கும் சலுகை காட்டுவதாக இருக்க வேண்டும்' என்று. பிறகுதான், அதைப் பரிசீலிப்பதாகச் சவான் தெரிவித்தார்.

'இந்தியும் இதர மொழிகளும்' என்று 'உம்' போட்டிருப்பது சிறப்பும்மையாக இருக்கலாம். இந்தி, வளர்ச்சி அடையவேண்டிய மொழி என்பதைக் காட்டுவதற்காகக் கூட இருக்கலாம். தமிழின் வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தமிழிலே உள்ள பழைய நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் என்பதற்கே பழையகாப்பியம் என்று பொருள் கூறலாம். அந்த நூலில் 'ஏன் சில முறைகள் பிரித்து வகுக்கப்பட்டன' என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் 'எம்மனோர் புலவர்க'ள் வகுத்த முறைப்படி செய்வதாகக் கூறுகிறார். 'எம்போன்ற புலவர்கள் சொன்ன

முறைப்படி என்று அவர் சொல்லுவதால் அவருக்கு முன் ஏராளமான புலவர்கள் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. தமிழ் இலக்கியங்களிலே, 'வெளவால் மனப்பான்மை' என்று ஒன்றைக் குறிப்பிடுகிருர். மாமரத்திலே தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் வெளவால், புளியம் பழத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்குமாம். அது போல இதுவரை நாம் மாமரத்தில் தொங்கிக் கொண்டு, புளியம் பழத்தை நினைத்துக் கொண்டிருந்தோம்! இப்பொழுதுதான் 'நாம் தொங்கிக் கொண்டிருப்பது மாமரம்' என்பதை உணர்ந்து மாம்பழத்தை நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்! வெளவால் மனப்பான்மையிலிருந்து விலகி, கிளி மனப்பான்மைக்கு வந்திருக்கிறோம்; 'எதையும் கொத்திப் பார்த்து சுவையை அறிவோம்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்! முழுச் சுவையையும் உணரும் மனப்பான்மை நம்மிடம் வளர்ந்து வருகிறது!

தமிழ் வெளியீட்டுக் கழகம் இதுவரை நூற்றி ஐம்பது நூல்களை வெளியிட்டுள்ளது பாராட்டத் தகுந்தது. தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ள பொருளாதார நூல்களை ஒரு தட்டில் வைத்து விடலாம்; ஆங்கிலத்தில் இருக்கும் பொருளாதார நூல்களை இந்த மண்டபம் முழுவதும் வைக்கலாம், ஆயிரக்கணக்கில் இருக்கும் அந்த அறிவுக் களஞ்சியங்கள் அனைத்தையும் தமிழில் வெளியிட வேண்டும்.

'தமிழைப் பாட மொழியாக்கலாம்' என்று சொன்ன பொழுது சிலர் 'தமிழில் என்ன இருக்கிறது? திருக்குறள் இருக்கிறது, இராமாயணம் இருக்கிறது, தேவாரம் இருக்கிறது, திருவாசகம் இருக்கிறது; இவைகளைத் தவிர வேறு என்ன இருக்கிறது, பாடங்கள் சொல்லிக் கொடுக்க?' என்று கேட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் பதில் சொல்லும் வகையில் 'தமிழில் எல்லாவற்றையும்

கொண்டுவர முடியும், எல்லாத்துறை நூல்களும் உள்ளன. என்பதை நிரூபித்துக் காட்டும் முறையில் தமிழ் வெளியீட்டுக் கழகம் பணியாற்றியுள்ளது. இது வேறு யாருக்காகவும் அல்ல, நமக்கு நாமே தமிழில் எல்லாவற்றையும் கொண்டுவர முடியும் என்பதை எடுத்துக் காட்டவே செய்யப்பட்டது. என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட 'தமிழால் என்ன செய்ய முடியும்' என்று வினு எழுப்பியவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் 'தமிழால் முடியும்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது; அதே நேரத்தில் மனதில் கவலைகூட எழுந்தது, தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில், 'தமிழால் முடியும்' என்று நூல் எழுதிக் காட்டவேண்டிய நிலைமை இருக்கிறதே என்பதுதான் அந்தக் கவலை! இதை உணர்ந்து ஆசிரியப் பெருமக்கள், தமிழில் ஏராளமான நூல்களை எழுதி உதவ வேண்டும். நம்மிலே சிலர் தவருக எண்ணிக் கொண்டிருக்கிருேம், 'சரித்திரத்தை ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும்; பூகோளத்தை ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும்; மருத்துவத்தை ஜெர்மன் மொழியில்தான் படிக்க முடியும்' என்று, அந்தத் தவருன மனப்பாங்கு நீங்கவேண்டும். பிறமொழிக் கருத்துக்களை எளிதாக எடுத்துச் சொல்லக்கூடிய தன்மை நம்மவர்களுக்கு உண்டு. கடந்த டிசம்பர், சனவரி மாதங்களில் நாங்கள் எல்லாம் பொதுத் தேர்தலில் ஈடுபட்டிருந்த போது 'பாராளுமன்றம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வந்தோம். ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட மூதறிஞர் இராஜாஜி "பார்லிமெண்ட் என்பதற்கு 'பாராளுமன்றம்' என்று சொல்லுகிறீர்கள். வெள்ளைக்காரன், பாரை எல்லாம் ஆண்டான், அதனுல் அவனுடைய பார்லிமெண்டை 'பாராளுமன்றம்' என்று சொல்லலாம்; நம்முடைய பார்லிமெண்டை

பாராளுமன்றம்' என்பதைவிட 'நாடாளு மன்றம்' என்று சொல்லுவதே பொருந்தும்' என்றார். ஒருவருடைய கூர்த்த மதியால் அருமையான சொல்லே தோன்றுகிறது! அந்தக் கூட்டத்திலேயே நானே சொன்னேன்: "தேர்தல் நேரம் இது; இதுவரை நாங்கள், 'பாராளுமன்றம்' என்ற வார்த்தைகளையே பயன்படுத்தி வந்தோம்; திடீர் என்று 'நாடாளு மன்றம்' என்று சொன்னால் 'இவன்' பாராளுமன்றத்திற்கு நிற்கவில்லை; 'வேறு எதற்கோ நிற்கிறான்' என்று நினைப்பார்கள்; தேர்தல் முடிந்தவுடன் 'நாடாளு மன்றம்' என்பதை நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம்' என்று. இப்பொழுது 'நாடாளு மன்றம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம்! இப்படி, தமிழில் புதிய சொற்கள் உருவாக வேண்டியது அவசியமாகும். அது, நம்முடைய மேம்பாட்டுக்கு வழி வகுக்கும். (67. ஏப். 14)

# 'தமிழக அரசு தலைமைச் செயலகம்'

இன்றையதினம் நான் பேச வேண்டுமென்பது இல்லை. நீங்களெல்லாம் எதைக் காணவேண்டும் என்று எண்ணினீர்களோ, அதைக் கண்டு பெறவேண்டிய மகிழ்ச்சியைப் பெறுகிறீர்கள்! 'இது தேவை' என்று எண்ணித்தான் 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்ற ஒளிப் பெயர்ப் பலகையைத் திறக்கிறோம்! விளக்கு ஏற்றி வைப்பதாகச் சொல்கிறோம்! இந்தப் பொருளை உணர்ந்து கொள்ள முடியாதவர்கள், இவ்வளவு நாட்கள், இதைக் கூடச் செய்ய முடியாதவர்கள், வெளிச்சம் போடுவதாகச் சொல்கிறார்களாம்! இருள் உள்ள இடத்தில் வெளிச்சம் போட்டால்தான் ஒளி ஏற்படும்! இருளை நீக்க ஒளி அவசியம்!

'தமிழக அரசு தலைமைச்செயலகம்' என்று பொறித்து வைக்கப்பட்டுள்ள புற விளக்குகள், அகத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவதாக அமையட்டும். கருத்துத் தெளிவுடையவர்கள் 'இது அவசியம்தான்' என்பதை உணர்வார்கள் இது தேவை இல்லாத செயல் என்று நினைத்திருந்தால் பல்லாயிரக் கணக்கில் இங்கே நீங்கள் குழுமியிருப்பீர்களா? 'இது அவசியமானதுதான்' என்பதை இங்கே கூடி இருக்கும் மக்கள் கூட்டமே எடுத்துக் காட்டுகிறது! ஒளிப் பெயர்ப் பலகை அமைத்தது எங்கள் கட்சிக்குப் பெயர் வரவேண்டும் என்பதால் மட்டுமல்ல! 'தமிழக அரசு, தன்னைத் தானே உலகுக்கு உணர்த்திக் கொள்கிறது' என்பதை எடுத்துக் காட்டவே இந்தப் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டிருக்கிறது! நான் இளம் வயதில் இந்தப் பக்கத்தில் வரும் பொழுதெல்லாம் 'அர

சாங்க அலுவலகம்' என்றுகூடச் சொல்லமாட்டார்கள்; 'கோட்டை' என்றே சொல்லுவார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது; தமிழ்ப் பெயரை நாம் வைப்பது, தமிழுக்கு நாம் தரும் ஏற்றத்தின் அடையாளமாகும். தமிழுக்கு ஏற்றம் தரவேண்டும் என்று நாம் சொல்வதெல்லாம், தமிழுக்கு மட்டும் உயர்வு தரவேண்டும்; மற்ற மொழிகள் தாழ்த்தப்பட வேண்டும் என்ற கருத்துடன் அல்ல!

தமிழகத்திலே தமிழ் ஏற்றம் பெறுவதுபோல அந்த மாநிலங்களில் அங்கே உள்ள மொழிகள் ஏற்றம் பெறுவதை இந்த அரசாங்கம் வரவேற்கிறது.

மராட்டிர மண்டலத்திலே உள்ள அரசு அங்கேயும் இதுபோன்ற மராட்டிர மொழியில் தனது அரசு அலுவலகத்திற்குப் பெயர் வைப்பதை இந்த அரசு மதிக்கிறது. இங்கே பேசிய தம்பி கருணாநிதி 'தமிழ்நாடு' என்ற பெயர் இலக்கியத்தில் இல்லை என்று யாரோ சிலர் சொல்வதாகக் கூறினார், யாரோ சிலர் எப்படி வேண்டுமானாலும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள்! இலக்கியத்தில் 'தமிழ்நாடு' இல்லையென்றுதான் வைத்துக் கொள்ளுவோம்; இப்பொழுது 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பது தவறா?

புதிதாக சுதந்திரம் அடைந்துவரும் ஆப்பிரிக்காவில் உள்ள சிறு சிறு நாடுகளுக்கு ஆங்கிலேயர்கள் வைத்த பெயர்கள் வேறு; இப்பொழுது அந்த நாடுகள் வைத்துக் கொள்ளும் பெயர்கள் வேறு, என்று அன்றாடம் ஏடுகளில் படிக்கின்றோம்! அந்தப் பெயர்கள் இலக்கியத்தில் இருக்கின்றனவா? என்று யாரும் கேட்கவில்லை! உண்மையிலேயே தமிழிலக்கியத்தில் 'தமிழ்நாடு' என்ற பெயர் இருக்கிறது. இங்கே அமைக்கப்பட்ட ஒளி விளக்குகளை, நீலக் கடலில் நெடுந் தொலைவில் இருந்து கலத்திலே வருபவர்கள் காணுந்தோறும் அவர்களுடைய உள்ளத்தில் உணர்ச்சியை

ஏற்படுத்தியே தீரும். தத்தம் நாட்டுக்கு அவர்கள் சென்றவுடன் 'தமிழ் நாட்டின் கோட்டையில் தமிழ் கொலுவிருக்கிறது' என்று பேசி இன்புறத்தான் செய்வார்கள்!

இங்கே அமைக்கப்பட்டுள்ள ஒளி வட்டம் நம் அகத்திலே ஒளியை ஏற்படச் செய்கிறது! நம் ஊனேடும் உயிரோடும் இரண்டறக் கலந்திருக்கும் தமிழ், எல்லா இடங்களிலும் கொலுவீற்றிருக்க வேண்டும். இந்த நேரத்தில் வணிகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; உங்கள் வணிக நிலையங்களில் ஆங்கிலத்தில் மட்டும் பெயர்ப்பலகை இருக்கலாம், அதை எடுத்து விடுங்கள் என்று நான் சொல்லவில்லை. ஆங்கிலத்துக்குப் பக்கத்திலோ, மேலேயோ தமிழிலும் பெயரை எழுதிவையுங்கள்' என்று.

எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது, நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதையே காட்டுகிறது. தமிழ் மக்களுடைய எதிர்காலம் ஒளிமயமானது. ஒளி தரத்தக்க வாழ்க்கையைத்தான் நாம் அமைப்போம்! மக்கள் அகத்திலும் புறத்திலும் ஒளிமயமான வாழ்வு உருவாகும்! நம்முடைய ஊனேடும் உயிரோடும் இரண்டறக் கலந்துவிட்ட தமிழ் மொழிக்கு உரிய ஏற்றத்தைத் தருவோம்.

# சென்னை கடற்கரையில்

நான் இதற்குமுன் எத்தனையோ ஆயிரம் கூட்டங்களில் பேசி இருக்கிறேன்; இன்றைக்குப் பேசுவது போல் அடக்க உணர்ச்சியுடன் நான் என் வாழ்நாளில் பேசியது இல்லை! எந்த மக்கள் அரசியலில் துணிந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைத்தேனோ, எந்த மக்கள், 'சாதி உணர்ச்சிக்கும் பணத்திற்கும் அடிமைப்பட்டு விடுவார்களோ' என்று சந்தேகப்பட்டேனோ அந்த மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவே நான் வந்திருக்கிறேன்.

'சாதிப் பித்துக்கு இடங் கொடுக்கமாட்டோம் - பணத்துக்குப் பணிந்து போகமாட்டோம்' என்பதைக் காட்டியிருக்கிறார்கள்; அவர்கள் இந்த வெற்றியை சனநாயகத்துக்குத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்; கிராமத்துப் பெரியவர்கள் எல்லாங்கூட, சொல்லால் அல்ல - செயலால் வெற்றி தேடிக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் தான் உண்மை சனநாயக வாதிகள் என்பதை உலகம் ஒப்புக்கொண்டுவிட்டது; நீங்கள் ஏழை எளிய மக்களின் பக்கத்தில் இருப்பவர்கள் என்று நம்பி எங்களை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்!

தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்ட நேரத்தில், இராஜாஜியும், காயிதே மில்லத்து அவர்களும், 'இம்முறை காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை மாற்றப் போகிறோம்', 'இந்த ஆட்சியை நீக்கப் போகிறோம்' என்று சொன்ன போதெல்லாம் ஏதோ நமக்காக நாலு நல்ல வார்த்தை சொல்லி வைக்கிறார்கள் என்றுதான் எண்ணி இருந்தேனே தவிர அரசியல் வரலாற்றில் இவ்வளவு பெரிய

வெற்றியைப் பெறுவோம்' என்று நம்பியதில்லை! காங்கிரசு ஆட்சி இருபது ஆண்டுகள் வளர்ந்தது! அதன் வீழ்ச்சி நொடிப் பொழுதில் நடந்துவிட்டது! நாம் மகிழ்ச்சி பெறுவதற்கு அல்ல இதைச் சொல்வது, பொறுப்புணர்ச்சி நமக்கு எந்த அளவுக்கு வேண்டும் என்பதற்காகத்தான் இதனைச் சொல்கிறேன். காங்கிரசுக்கே இந்த கதி என்றால்...? நான் இதை ஒரு அரசியல் பாடமாகக் கொள்கிறேன்! வெற்றியை எண்ணி எக்களிப்புக் கொள்ளவில்லை; ஆனால் காங்கிரசில் நல்லவர்களே இல்லை என்று சொல்லவில்லை; அப்படிச் சொல்லும் ஆணவமும் எனக்கு இல்லை! நாட்டு மக்களின் அபிலாஷைகளை - கஷ்ட நஷ்டங்களை - அவர்கள் அறிந்து கொள்ளவில்லை!

நான் இதுவரை பொதுமக்களைப் பற்றி சந்தேகப்பட்டதைப் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்று உங்களை எல்லாம் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தி. மு. க. ஆட்சியைக் குலைக்க அடுக்கடுக்காக ஆபத்து வருமே என்பதைப்பற்றி நான் பொருட்படுத்தவில்லை! இந்த தேர்தலில் ஏற்பட்ட பாடத்தை உணர்கிறேன்! இவ்வளவு பெரிய பணபலம் பத்திரிகை பலம் இருந்தும் அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்றால், இது அரசியலில் ஒரு நல்ல பாடமாகும். இனி தி. மு. க. நல்ல பொறுப்புணர்ச்சியோடும் அடக்க உணர்ச்சியோடும் 'பொது மக்கள்தான் எசமானர்கள்', நாம் சேவகர்கள்' என்ற உணர்ச்சியோடும் ஆட்சியில் அமரும்! நீங்கள் அளிக்கும் ஒத்துழைப்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு - நீங்கள் அழைத்துச் செல்கிற பான்மை அளவுக்கு உங்களுக்கு நன்மை கிடைக்கும். எங்களிடத்தில் நீங்கள் குறை கண்டால் சிறிதும் அச்சம் - தயை - தாட்சண்யம் இன்றி எடுத்துரைத்துக் கண்டிக்கலாம், 'எங்களுக்கு எல்லாம் தெரியும்' என்று சொல்லிக் கொண்டிருந்த ஆணவ அரசு நீக்கப்பட்டு

விட்டது! நாங்கள் அப்படிச் சொல்லமாட்டோம். பாரதியார் பாடியது போல நீங்கள்தான் 'இந்நாட்டு மன்னர்கள்' 'நீங்கள் எவ்வழி நடத்திச் செல்கிறீர்களோ அவ்வழி ஆட்சி நடத்தக் காத்துக்கொண்டிருக்கிறோம்! இன்று எனக்கு ஏற்பட்டுள்ள அடக்க உணர்ச்சியை என் வாழ் நாளில் கொண்டிருக்கவில்லை!

1960-ல் ஐம்பது இடங்களில் நமது கழகம் வெற்றி பெற்றது; ஒரு இடத்தை நான் பெற முடியவில்லை. இராஜாஜிகூட எனக்காகக் காஞ்சிபுரம் வந்து வாழ்த்திப் பேசிவிட்டுச் சென்றும், நான் வெற்றிபெற முடியாத நிலையில் - இதே கடற்கரையில், வெற்றிபெற்ற 50 பேர்களையும் நான் வாழ்த்திப் பேசிய நேரத்தில் கூட நான் இவ்வளவு அச்சத்துடன் - அடக்க உணர்ச்சியுடன் பேசவில்லை! ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனைக் காப்பாற்றுவாயா? என்று நீங்கள் எல்லாம் கேட்கவில்லை - உங்கள் கண்கள் கேட்கின்றன! அந்தக் கேள்விக் குறியின் மத்தியிலேதான் நான் நிற்கின்றேன்!

நீங்கள் எந்த முறையில் எனக்கு துணை நிற்கிறீர்களோ அந்த முறையில் நான் பணியாற்றுவேன் உங்களுக்குத் தோன்றுகின்ற யோசனையை நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். ஆனால் அந்த யோசனை பொது நன்மைக்கானதாக இருக்கவேண்டும். வரிகளை எப்படிக் குறைக்கலாம். எந்த முறையில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தலாம். எந்த முறையில் தொழில்களை வளர்க்கலாம் - என்பதை எல்லாம் அந்தத் துறை விற்பன்னர்கள் அருள் கூர்ந்து யோசனை கூறவேண்டும்.

நான் பள்ளியில் படித்தபோது நல்ல மாணவன் என்று பேரெடுத்தவன். எனக்கு ஆசிரியராக இருந்தவர்கள்கூட சென்னையிலும் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டாலே என்னைப் பற்றிச் சொல்வார்கள். எனவே, நான் யார்

சொல்லும் நல்ல கருத்தையும் தள்ளிவிட மாட்டேன்; அருள்கூர்ந்து உங்கள் யோசனைகளைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிரவும் தத்தம் முதிர்ந்த அனுபவங்களையெல்லாம் எங்களிடம் ஒப்படைத்து, எங்களிடம் கூட்டணித் தலைவர்கள் வைத்த நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியிலிருந்து விலகும் காங்கிரசுக் கட்சியின் தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகவும் சிறப்பாகவும், அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசரைக் கேட்டுக்கொள்கிறேன் - கட்சியைவிட நாட்டைக் காப்பதுதான் உங்கள் தத்துவமாக இருந்தால் ஒத்துழைப்பு தாருங்கள்.

நான் மூதறிஞர் பக்தவத்சலத்தைக் கேட்கவில்லை; ஏனெனில் அவருக்குக் கொஞ்சம் ஆத்திரம் ஏற்பட்டு இன்னும் அடங்கவில்லை; அவர் சாந்தம் அடைந்ததும் கேட்கலாம் என்றிருக்கிறேன்; இப்போது கேட்டால், விஷக்கிருமிகளுக்கா நான் யோசனை கூறவேண்டும்? என்பார் அவர்! அவருடைய முதிர்ந்த அனுபவம் தேவை; முடிந்த அளவுக்கு அவரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறும் அனுபவத்தை நான் பொன்னே போலப் பாராட்டி ஏற்றுக் கொள்வேன்.

தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை உணர்வு, வகுப்புப் பூசல் நீங்கியுள்ள நிலை, உறுதிப்பாடு ஆகிய இவைதான் மதிப்பிடற்கரிய கருவூலம்.

மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் மோதுதல் ஏற்படுமா எனப் பல பத்திரிகை நிருபர்கள் கூடச் சந்தேகம் கிளப்பினார்கள். ஆனால் நான் வம்பு சண்டைக்குச் செல்வதில்லை, வலிய வம்பு வந்தாலும் ஒதுங்கிக் கொள்வேனே ஒழிய மோதிக்கொள்பவன் அல்ல! மோதிக்கொள்வதில்

நல்ல தேர்ச்சிபெற்ற தலைவரிடம் இருந்த பிறகும், நான் இந்தச் சுபாவத்தில் இருக்கிறேன் என்றால், மத்திய அரசிடம் எந்தவித மாச்சர்யமும், மோதலும் ஏற்படாது என்பதை நீங்கள் நம்பலாம்

மத்திய சர்க்கார் எப்படி அமையப்போகிறது என்பதை இராஜாஜி அவர்கள் இங்கு இன்று எடுத்துச் சொல்லிய பிறகும் மோதலுக்கு மத்திய அரசுக்கு நேரம் கிடைக்குமா? மத்திய சர்க்காரில் யார் ஆட்சிக்கு வந்தாலும், அவர்களைக் கேட்டுக்கொள்வேன் ஒருமுறை எங்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுங்கள்! ஒருமுறை வாய்ப்புக் கொடுங்கள்! செய்யவேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன; திருத்தப்பட வேண்டியவை நிரம்ப உண்டு. ஒத்துழைப்பு இருந்தால் அரசியல் அமைப்பு அளிக்கின்ற அதிகாரத்திற்கேற்ப எங்களாலான பல நன்மைகளைச் செய்யமுடியும்.

அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைப்பு தரவேண்டும். இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சியோடு பழகிவிட்ட அதிகாரிகள் அவர்கள்! அவர்களும் ஒத்துழைத்தால்தான் பல காரியங்கள் செய்ய முடியும்! (67–பிப்-26)

# அம்பேத்கார் பிறந்த நாள் விழாவில்

எவ்வளவோ துன்பங்களுக்கிடையே எண்ணுதற்கரிய இன்னல்கள் பலவற்றை அம்பேத்கார் தாங்கவேண்டிய நிலை இருந்த போதிலும் தமது துறையிலே பாராட்டத் தகும் வகையிலே திறமை பெற்றிருந்தார்; 'உயர்ந்த சாதிக் காரர்கள்' என்று சொல்லிக்கொண்டவர்கள் கூட, அம்பேத்காரைப் பாராட்டினார்கள். தமக்கே உரிய சட்டத் திறமையினால் அவர் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தி னார். உலகம் என்றும் திறமைக்கு மதிப்பளிக்கும். எத் தனையோ பேர் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள்; அம்பேத் காரின் எழுபத்தி ஆறாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றோம் என்றால், எத்தனையோ அழுத்தல் களுக்கிடையே, எவ்வளவோ கொடுமைகளுக்கிடையே அம்பேத்கார் திறமையைப் பயன்படுத்தியதால்தான்; அந் தத் திறமையை அவர் தமது சொந்தத்திற்காகப் பயன் படுத்திக்கொள்ளவில்லை; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்திவிடுவதற்காகப் பயன்படுத்தினார்; அதனால்தான் அவரைப் பாராட்டுகிறோம். ஆகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், நல்ல திறமைபெற முயலவேண்டும். பிறப் பின் அடிப்படையிலே சலுகைகள் பெறுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். கல்வித் துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காண வேண்டும். நாட்டில் முன்னுக்கு வர நாம் அனைவரும் படிக்க வேண்டாமா? உலகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? திறமை பெறாமல், பிறப்பின் அடிப்படையில் எத்தனை காலத்திற்கு வளர்ந்துவிட முடியும்? ஆகவே

'தாழ்த்தப்பட்டோர்' என்ற நிலை மாறவேண்டும். தாழ்த் தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் திறமை பெற்றாகவேண்டும். பள்ளியில் குறியீடு பெறுவ தற்கு முயல்வதே ஒரு கலையாக இப்போது வளர்ந்து வரு கிறது! அந்தக் கலையில் நாமும் சிறந்து விளங்கவேண்டும். படிப்பே இல்லாமல் திறமைபெற முடியாது. அப்படி யாராவது இருந்தால் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனால் படிப்பதனால் திறமை போய்விட்டது என்று யாரும் சொல்லமாட்டார்கள்! கட்டிடத்திற்கு செங்கல் போல, வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் படிப்பு தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை; இருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு என்னென்ன உதவிகள், சலுகைகள் கொடுக்க வேண்டுமோ அந்தச் சலுகைகள் எல்லாம் உறுதியாகக் கிடைக்குமென்று சொல்லிக்கொள்வ தோடு, கழகத்தின் சார்பில் எந்தெந்த உதவி செய்ய முடி யுமோ அந்த உதவிகளைச் செய்ய வேறு யாருக்கும் நாங்கள் பின்வாங்கியவர்கள் அல்லர் என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாளை அவர் இல்லாத நேரத்தில் கொண்டாடுகிறோமே என்பது வருத் தப்படக் கூடியதாகும். உயிரோடு இருந்த காலத்தில் அரிய கருத்துக்களைத் தந்து, செயலாற்ற வேண்டிய வழி முறைகளை வகுத்துக் கொடுத்த டாக்டர் அம்பேத்கார் 'உயர்ந்தவாகள்' என்று சொல்லிக் கொண்டோரால் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாகி, தாழ்த்தப்பட்ட சமுதா யத்தின் அல்லல் நீக்கப் பாடுபட்ட அந்த மேதை, யாரும் எதிர்பாராத வகையில் மறைந்துபோனார். இப்போது நாம் மகிழ்ச்சிக்காக இவ்விழாவைக் கொண்டாடவில்லை; தாழ்த் தப்பட்ட சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டுவர அவர் எந்த அளவுக்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்

டார் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், அவருடைய கருத்துக்களைக் கடைப்பிடித்துச் சமுதாய முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதற்கு உறுதி எடுத்துக் கொள்வதற்காகவும்தான் கொண்டாடுகிறோம். இன்றும் சமுதாய ஏற்றத் தாழ்வு கொடுமை இருந்த போதிலும், நமது உரிமையை நிலை நாட்டிக்கொள்ள பல வசதிகளைப் பெற்றிருக்கிறோம். சட்டத்திலே அதற்கு வழி வகைகள் இருக்கின்றன. ஆனால் இதுபோன்ற வசதி ஏதும் இல்லாத காலத்தில், சட்டத்தின் உரிமை நிலைநாட்டப்படாத நேரத்தில் பிறந்தவர் டாக்டர் அம்பேத்கார். தாழ்த்தப்பட்ட மக்களைத் தாழ்த்திக் கொண்டே இருக்கவேண்டும் என்ற சமுதாயக் கருத்து நிலவிக் கொண்டிருந்த காலத்தில்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட வேண்டுமா? என்ற கேள்விக்குறி உலவிய காலத்திலேதான், அம்பேத்கார், இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டது ஒரு வகையில் வியப்பளிக்கக் கூடியதாகும். இப்போது உரிமைகள் அனைத்தையும் காப்பாற்றிக்கொள்ள வழி முறைகள் உள்ள காலம். எல்லோருக்கும் உரிமையுண்டு, அதைப் பாதுகாக்க வழியுண்டு என்பதால், 'யாரும் யாருடைய உரிமையையும் வெளிப்படையாகப் பறிக்க முடியாது' என்று சொன்னேனே தவிர 'பறிக்க முடியாது' என்று கூறவில்லை; அதாவது மக்களின் ஒரு சிலரின் உரிமைகள் மறைமுகமாகப் பறிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடவே அப்படிக் கூறினேன்.

மாணவராக இருந்த காலத்திலும், வழக்கறிஞராக இருந்த காலத்திலும் எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளான போதும், இடையூறில் சிக்கித் தத்தளித்த போதும் டாக்டர் அம்பேத்கார் தம்மைப்பற்றி கவலைப்படாமல் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார். இங்கிலாந்து நாடு சென்று அவர் கல்வி பயின்றார்; கல்வி பயின்றதும் இந்தியாவுக்குத்

திரும்பும்போது, அறிஞர்கள் பலர் அவரை வழியனுப்பி வைத்தனர்.

இந்தியாவுக்கு வந்த அம்பேத்கார், வழக்கறிஞர் தொழில் நடத்த வேண்டும் என்று எண்ணி, நல்ல நெடுஞ் சாலையில் வீடு தேடினார்; நெடுஞ்சாலையில் மட்டுமல்ல, குறுஞ்சாலையில் கூட அவருக்கு வீடு கிடைக்கவில்லை! அந்த அளவுக்கு, வழக்கறிஞராக இருந்த அம்பேத்கார் கொடுமைப்படுத்தப்பட்டார். இப்போது அந்தக் கொடுமை களைச் செய்ய முடியாது! இருந்தாலும் சட்டத்தின் கண் களை மறைத்துக் கொண்டு அந்தக் கொடுமைகளைச் செய்யக் கூடும். இப்படி உயர்ந்தோர் என்று சொல்லிக் கொண் டோரால் அழுத்தி வைக்கப்பட்ட சமுதாயத்தை, நமது காலத்திலாவது உயர்த்தி விடுவதற்கு நாம் கடமைப்பட்ட வர்களாவோம். அதற்காகச் செய்ய வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வோம் என்று உறுதியளிக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் பற்றி, பிற்பட்ட வகுப்பினரைப்பற்றி, ஒருவர் சொல்லி நான்புரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. நான் படித்தது கூட பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளைப் பெற்றுத்தான்! இரண்டு தடவை எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தவறிப் போய் அதன் பிறகுதான் தேர்ச்சி பெற்றேன். கல்லூரியில் படிக்கும் அளவுக்குச் செல்ல இயலாத நிலையில் இருந்த தால், எங்கள் ஊரிலே எழுத்தனாகக் கொஞ்ச காலம் நான் பணிபுரிய நேர்ந்தது. நான் முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால், நான் கல்லூரிக்கு சென்றி ருக்க முடியாது, கல்லூரிப் படிப்பும் பெற்றிருக்க முடியாது.

நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை உள் ளத்தால் உணர்ந்தவர்கள். சமுதாயத்தில் இந்த ஏற்றத் தாழ்வு பிணி அகல வேண்டும் என்பதற்காகச் சமுதாய

சீர்திருத்தப் பிரச்சாரம் செய்த காலத்தில் ஊர்மக்களின் கோபதாபங்களுக்கு ஆளானவர்கள்! தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியவர்கள்! தாழ்த்தப் பட்ட மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்; எல்லாக் கட்சி களின் அனுதாபத்தையும் பெற வேண்டும். பிற்பட்ட சமுதாயத்தை நாம் எல்லோரும் சேர்ந்து தூக்கி விட்டா லன்றி, அழுத்தி வைக்கப்பட்ட நிலையிலிருந்து அதனை உயர்த்த முடியாது!

ஒவ்வொரு மட்டத்திலும் இந்த சமுதாயம் அழுத்தி வைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளி லும், பொருளாதாரத்திலும், மதத்திலும், வருண சிரமக் கொடுமையிலும் பிற்பட்ட பகுதி மக்கள், தாழ்த் தப்பட்ட மக்கள், அழுத்தப்பட்டு வந்துள்ளார்கள். ஆகவே எல்லாத் துறைகளில் இருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்திவிட உதவி செய்தாக வேண்டும். இந்த உதவியைச் செய்யும்போது 'இதைச் செய்கின்றேன் என்ன தருகின்றாய்' என்று பேரம் பேசக் கூடாது; பேரம் செய் யாமல் உதவி செய்ய வேண்டும், பிறர் உதவி செய்ய வேண்டும் என்பதை நம்பிக் கொண்டு, பிறப்பின் அடிப் படையிலேயே நம் மக்கள், உதவியை எந்த நாளும் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது. நாமும் திறமை பெற்றாக வேண்டும் தேர்ச்சி பெற்றாக வேண்டும். இந்த சமுதாய மக்களுக்குப் படிப்பூட்டவும், வாணிகத்தில் முன் னேறவும், வாழ்க்கையில் உயரவும் எந்தெந்த வகையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அந்தந்த உதவிகள் அனைத்தும் உறுதியாக உங்களுக்குக் கிடைக்கும். படிப் புத் துறையில் பதினாறு சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்பது சதவிகித மக்கள் தாம் கல்வியில முன்னுக்கு வந்துள்ளனர்; இந்த சமுதாய

மக்கள் பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்.

வடக்கு மாநிலம் ஒன்றில், படிப்புச் சொல்லிக் கொடுக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் 'உயர் வானவர்' என்று கூறப்படும் மக்களுக்கும் இடையே முள் வேலி போட்டிருக்கும் கொடுமையை, ஒரு தடவை இங்கு தலைமை வகிக்கும் இளையபெருமாள் என்னிடம் கூறியிருக்கிறார். தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட முள்வேலி தமிழகத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்குச் செய்யும் கொடுமைகள் அகற்றப்படும் என்பது மட்டுமல்ல; அதுபோன்ற கொடுமை செய்வோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்போம்! இந்தச் சமுதாயத்தின் உயர்வு பழுதடையாமல் பார்த்துக் கொள்ளவும், சமுதாய உயர்வுக்கு நிறைவு செய்யவும் தமிழக அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளும் என்று கூறிக் கொள்கிறேன். (67-மார்ச். 15)

# பச்சையப்பர் கல்லூரியில்

மாணவப் பருவம் போன்ற மகிழ்ச்சி நிரம்பிய பருவம் கிடையாது. இப்பொழுது உங்கள் முகத்தில் தெரியும் களிப்பு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று எனது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசினவர்கள் எல்லாம் என்னை 'முதல்மைச்சர், முதலமைச்சர்' என்று பேசினார்கள். அவர்கள் பேசும் பொழுது எல்லாம் நான் என்னைக் கேட்டுக் கொண்டேன். 'உண்மைதானா, உண்மைதானா' என்று! அதற்குப் பிறகு 'எதற்காக என்று கேட்டுச் கொண்டேன். 'எத்தனை நாளைக்கு' என்றும் கேட்டுக் கொண்டேன்; அதன் பிறகு 'என்ன செய்ய ?' என்றும் கேட்டுக் கொண்டேன். இதை இங்கு குறிப்பிடக் காரணம், 'நிறைவேற வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன' என்பதால்தான்.

பெரிய கல்வி நிபுணர்கள் எல்லாம் கருதுவது, இப்போதைய தேர்வு முறைக்கும், மாணவர்களின் அறிவுக்கும் சம்பந்தமில்லை என்புதுதான்! இப்படி நான் சொல்லுவதால், மாணவர்களை, தேர்வைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்வதாகப் பொருளல்ல! மாணவர்கள் தரத்தைத் தேர்வுகள் தான் நிரூபிக்கும் என்று உலகம் ஒத்துக் கொண்டிருக்கும் வரையில், தேர்வில் வெற்றியடையப் பாடுபட வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்விகளைக் கேட்கும் பொழுது பயனுள்ளவைகளைத்தான் கேட்க வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களின் ஐயங்களை நீக்கத் தயங்கக் கூடாது. ஏனென்றால் இப்பொழுது காலமே கேள்விக் குறியாக மாறியுள்ளது!

'போன தலைமுறையில் இல்லாத சந்தேகங்கள் இத்தலைமுறையில் சந்தேகங்களாக எழுந்துள்ளன! அந்த அளவுக்கு ஏராளமான பிரச்சினைகள் வளர்ந்துள்ளன. 'பாடத் திட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டும்' என்பதை நான் வரவேற்கிறேன். பகுத்தறிவு தரும் பாடங்களே அமைய வேண்டும். ஆசிரியர்கள் கல்வி நிபுணர்களைக் கலந்தாலோசித்து கல்வி அமைச்சர் பாடத்திட்டத்தைத் திருத்தி அமைப்பதைப்பற்றி முடிவு செய்வார்கள்.

இப்பொழுது மாநில மத்திய அரசாங்கங்கள் கல்லூரிகளுக்கு எவ்வளவோ உதவுகின்றன.

பச்சையப்பன் கல்லூரியை ஏற்படுத்தும் பொழுது அடிப்படையான செலவுகளையும், பச்சையப்பன் அறநிலையக் குழுவே கவனிக்க வேண்டிய நிலை இருந்தது; அந்தச் செலவுகளுடன்தான் கல்லூரிகளும், உயர்நிலைப்பள்ளிகளும் அமைக்கப்பட்டன. இப்பொழுது நீங்கள் எவ்வளவோ வசதிகளுடன் படிக்கிறீர்கள். நான் படிக்கும் பொழுது பச்சையப்பன் கல்லூரி சந்தடி மிகுந்த சைனா பஜாரில் இருந்தது. பேராசிரியர்கள் சொல்லித் தரும் பாடம் ஒரு காதில் விழும் போது இன்னொரு காதில், 'எதை எடுத்தாலும் ஒன்றரையணா' என்று சத்தமும் விழும்!

ஆனால் இப்பொழுது ஓரளவு வசதிகளுடன் நீங்கள் படிக்கிறீர்கள். இங்கே பேசிய மாணவர் ஒருவர் பச்சையப்பன் கல்லூரியின் பழைய மாணவர்களில் இருபத்தைந்துபேர் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதைவிட இன்னும் அதிகமான அளவில், பச்சையப்பன் கல்லூரியில் படித்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள், பொறி இயல் வல்லுநர்களாக,

வழக்கறிஞர்களாக, பேராசிரியர்களாக, மருத்துவத்துறை வித்தகர்களாக, நிபுணர்களாக ஆகவேண்டும். பல்வேறு துறைகளில் நீங்கள் வித்தகர்களாக வேண்டும் என்று சொன்னநான் அமைச்சர்களாக வேண்டும் என்று சொல்லவில்லை! காரணம் அமைச்சராக ஆவது அவ்வளவு கடினமானதல்ல! வெளிநாட்டவர், அமைச்சர்களைப் பார்த்தா நம் நாட்டை மதிப்பிட்டார்கள். "நாடு எப்படி வளர்ச்சி அடைந்திருக்கிறது? ஏழ்மை அகற்றப்பட்டு விட்டதா? பொருளாதார வளர்ச்சி அடைந்திருக்கிறதா? கல்வித்துறை வளர்ச்சி அடைந்திருக்கிறதா? மருத்துவப் பொறி இயல் துறைகள் மேம்பாடு அடைந்திருக்கிறதா? என்பன போன்றவற்றைக் கவனித்துத்தான் நம்நாட்டை மதிப்பிடுகிறார்கள்! ஆகவே மாணவர்கள், சமுதாயத்தின் தரத்தை உயர்த்தப் பாடுபட வேண்டும். சமுதாயத் தரத்தை உயர்த்தப் பல்வேறு துறைகளிலும் வித்தகர் களாக மாறவேண்டும். பயிற்சி மொழியாகத் தமிழ் மொழி இருக்க வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். கல்லூரிகளில் தாய் மொழியான தமிழ் பாடமொழியாக அமையத் தேவையான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படும் என்று உறுதி கூறுகிறேன்.

(67-மார்ச் 17)

# சட்டக் கல்லூரியில்

நாட்டை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களில், நமது அரசு மேற்கொள்ளுகிற நடவடிக்கைகளில் ஐயம் ஏற்பட்டால், தவறு இருப்பதாகக் கருதினால், அந்தப் பிரச்சினைகளைக் குறித்து, அவை தொடர்பான கருத்துக்களை எனக்குத் தெரிவிப்பதில், நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களைச் சமாளிப்பதில் சட்டக் கல்லூரிகள், பயிற்சி பெற்ற பட்டதாரிகள் நல்ல ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாநிலத்தின் நிதி நிலைமை நிலைபடுத்த வேண்டும். நிதி நிலைமையைச் சரிபடுத்த முயற்சி எடுக்கும்போது ஏற்படுகிற சிக்கல்கள், அவற்றின் விளைவுகள் பற்றியும், தமிழகக் கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழித் திட்டத்தைப் புகுத்துவது பற்றியும் சட்டக் கல்லூரி மாணவர்கள், தங்களின் பல்வேறு விதமான கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டும், கலந்து பேசவேண்டும். நிதிநிலைப் பிரச்சினையிலும் மொழிப் பிரச்சினையிலும் வழக்கறிஞர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று மனதார நம்புகிறேன்.

# டில்லியில் செய்தியாளர்க ளிடையே

இப்பொழுது மத்திய மாநில அரசாங்கங்களின் உறவு முறையில் மாறுதல் தேவை.

மத்திய அரசாங்கங்களின் அதிகாரத்தைப் பற்றி பொதுப் பட்டியல் வகுப்பதை நான் விரும்பவில்லை. ஏனெனில், முன்பு மாநில அரசுகளின் பல்வேறு துறை களில் மத்திய அரசு ஊடுருவி, தனக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தது. எல்லா மாநிலங் களிலும் காங்கிரசு ஆட்சி நடந்தபோது, மத்திய அரசாங் கத்தில் உள்ள காங்கிரசு ஆட்சி மாநில அரசின் துறை களில் ஊடுருவியது ஏற்றதாக இருக்கலாம்; ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது! பல மாநிலங்கள் வேறு கட்சிகளின் ஆளுகைக்கு வந்துவிட்டன! முன்னாள் முதலமைச்சரான பக்தவத்சலம் இந்தி எதிர்ப்பு 'பைல்'களை அழித்ததற்கு சில அதிகாரிகள் ஆலோசனை காரணமாக இருக்கலாம். ஒரு முதலமைச்சர் 'பயில்'களை அழிப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று எனக்குத் தெரிய வில்லை.

தமிழக அரசாங்கம் தன்னுடைய உணவுத் தானிய இலக்கில் நாற்பது சதவிகித அளவுக்குக் கொள்முதல் செய்திருக்கிறது. சிக்கல்கள் ஏதுமின்றிக் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இலக்கை அடைந்தவுடன் தாலுக்காக்களில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த உத்தேசிக்கப்படுகிறது. இப்பொழுது வழங்கப் பட்டு வரும் உணவு பங்கீட்டு அளவைக் குறைக்கக்

கூடாது; அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம். பர்மா அரசாங்கம் தரவேண்டிய பணத்திற்குப் பதிலாக அரிசியைக் கேட்டுப் பெறவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துவோம். பர்மா அரசாங்கம் செட்டியார் சமூகத்தினருக்குப் பர்மாவில் உள்ள நிலங்கட்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் இரண்டாயிரம் வீதமாக இழப்பு ஈட்டுத் தொகை தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தின் ஒரு ஆண்டு வருமானம் இது. பர்மா அரசாங்கம் தரவேண்டியதை முழுதும் கணக்கிட்டால் ஏறத்தாழ ரூபாய் பதினைந்து கோடியாகும். பர்மா அரசாங்கத்திடமிருந்து இவைகளுக்குப் பதிலாக தமிழ் நாட்டிற்கு அரிசி கிடைக்கும்படி செய்யவேண்டும்.

மாநில அரசாங்க ஊழியர்களின் அதிக விலைப்படி உயர்வுக்குத் தேவைப்படும் அதிகப்படியான தொகையை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டும்; ரூபாய் மதிப்புக் குறைப்புக்குப் பின், பண வீக்கம் அதிகரித்ததற்கும் விலை உயர்வுக்கும் மத்திய அரசே காரணமாதலால், அது, தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த நாங்கள் விரும்புகிறோம்; ஆனால் மதுவிலக்குத் தோற்றதாக மத்திய அரசு ஒப்புக் கொள்ளவேண்டும். மதுவிலக்கை அமுல்படுத்துவதால் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு ரூபாய் முப்பது கோடி இழப்பு ஏற்படுகிறது. சென்னையில் மதுவிலக்கு அமுல் நடத்தப்படும்போது பெங்களூரிலும் புதுச்சேரியிலும் மதுவிலக்குக் கிடையாது, குடிப்பவர்களுக்கு அங்கு செல்வது கடினமல்ல. (67 ஏப்ரல் 6)

# புதிய சட்டமன்ற தி.மு.க. உறுப்பினரிடையே

இம்முறை புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அறிமுகம் செய்து கொண்டோம். இப்படி நாம் அறிமுகம் செய்துகொள்வதால், நாம் புதிதாக இப்பொழுதுதான் சந்திக்கிறோம் என்று பொருளல்ல!

'தி மு. கழகம் நகர்ப் புறத்திலேதான் இருக்கிறது, கிராமப் பகுதியிலே இல்லை' என்கிறார்கள். இத்தேர்தலில் கிராமப் புறத்திலிருந்து ஏராளமானவர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறோம். ஏராளமான உழவர் பெருங்குடி மக்கள் தேர்தலிலே வெற்றி பெற்றுள்ளார்கள். எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களும், தி. மு. கழகத்தின் வெற்றிக்குப் பாடுபட்டுள்ளனர். எல்லா மக்களும் பரிபூரண நம்பிக்கையுடன் நம்மிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்; இந்தப் புனிதமான நேரத்தில் நாம் அதிகப் பொறுப்புகளுக்கு ஆளாகி இருக்கிறோம்! நாம் அதிகமாகப் பக்குவப்பட வேண்டிய நேரமிது!

மக்கள் நம்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பல காரணங்கள் சொல்லலாம். இது மகிழ்ச்சிக்குரிய நேரம் மட்டுமன்று—அடக்கத்துக்கும் உரிய நேரம்! தமிழக மக்களின் பரிபூரண நம்பிக்கைக்கு ஆளாகியிருக்கிறோம் நாம்! சுதந்திரம் கிடைத்தவுடன் காங்கிரசுக் கட்சியை நம்பினார்களே அப்படியே நம்மை நம்புகிறார்கள்! அந்த நம்பிக்கையை செயல்படுத்த வேண்டிய பொறுப்பு நம்மிடம் இருக்கிறது!

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் இளைஞர்கள்! புதிய தலைமுறையினர் பொறுப்பை ஏற்பதையே . இது எடுத்துக் காட்டுகிறது! இங்கே அறி

முகப்படுத்திக் கொண்ட நண்பர்கள் தங்கள் படிப்பு என்ன என்பதைச் சொல்லவில்லை! தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பட்டதாரிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள்! ஆசிரியராக இருந்தவர்கள் இருக்கிறார்கள்! பொறியியல் பட்டம் பெற்றோர் இருக்கிறார்கள்! பஞ்சாயத்து தலைவர்களாக இருந்தவர்கள் - பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக இருந்தவர்கள் இருக்கிறார்கள்! நிர்வாகத்துறையில் நன்கு அனுபவப்பட்டவர்கள் இருக்கிறார்கள்! பொதுவாக தி. மு. கழகத்தைப் பற்றி, சமுதாயத்தில் ஒருநிலையில் உள்ளவர்களிடம் தவறான எண்ணம் இருக்கிறது. தி.மு.க. என்பது 'வெறி பிடித்து அலையும் படிக்காதவர்கள் கூட்டம்' என்று அவர்கள் நினைக்கிறார்கள்!

தி. மு. க படித்தவர்களின் பாசறை!

தி. மு. க. படிக்காதவர்களுக்கும் அது பாசறை!

தி மு. க. பாமரர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் இடம்!

சுற்றறிவாளர்களுக்கும் தி. மு. கழகத்தில் இடம் உண்டு !

சமுதாயத்தில் எல்லாப் பகுதியினரும் இங்கு உண்டு !

நம்முடைய ஏழ்மைத் தோற்றத்தைக் கண்டு படிக்காதவர்கள் என்று எண்ணியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம் மற்றவர்களுடன் ஒத்துழைப்புடன் தான் ஆளுவோம்! எந்த விதமான தனிப்பட்ட விரோதமும் கிடையாது! மற்றவர்களின் தோழமையுடன் நடந்து கொள்வோம்! காங்கிரசு நண்பர்களிடமிருந்தும் நான் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். அதிகாரத்தில் அவர்கள் இல்லாவிட்டாலும், தங்களுடைய ஆலோசனையையும் அளித்தால் ஏற்றுக் கொள்வோம்.

(பிப். 26, 1967)

# பாராட்டுவோரிடையே

'அமைச்சர்கள்' என்ற உணர்வு தடித்துப் போனதால் தான் சனநாயகத்துக்குக் கேடுகள் விளைந்திருக்கின்றன; அத்தகைய உணர்வுகள் எங்களுக்கு வராமல் பார்த்துக் கொள்வதில் உங்களுக்கும் பொறுப்பு உண்டு; அதை நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். பெரியவர்கள் பலரது நல்லெண்ணம் அவர்கள் சேமித்து வைத்திருக்கின்ற அனுபவ அறிவு ஆகியன, எங்களுக்குப் பயன்பட வேண்டுமென விரும்புகிறேன் வி. கே. இராமசாமி அவர்கள் நாடு வளர்ந்திருக்கிறது; ஆனால் வளர்ச்சி போதாது என்று குறிப்பிட்டார். நாடு வளர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் ஒரு புறமாக வளர்ந்திருக்கிறது! அதுபோல், சீரடைந்திருக்கிறது—ஆனால் ஒரே சீராக சீரடையவில்லை! அடைந்திருக்கின்ற முன்னேற்றம் இருபது ஆண்டு கால ஆட்சியின் விளைவுக்குப் போதுமானதா என்பதை, இருபதாயிரம் கோடி ரூபாய் செலவழித்த பிறகும் கேட்டுக் கொண்டிருப்பது, எந்த அளவு நியாயமானது என்று சிந்திக்கவேண்டும். இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் நீங்கள் விரைவில் தீர்வு காணவேண்டும்.

போதுமான அனுபவசாலிகள் அல்லாத நாங்களே விரைவாக சிக்கல்களைத் தீர்வு காணவேண்டும் என்று எண்ணினால், இருபது ஆண்டுகளாக ஆண்டவர்கள் எவ்வளவு விரைவாக செயல்பட்டிருக்க வேண்டும் என்பதை அருள் கூர்ந்து நினைத்துப் பாருங்கள். நம் நாட்டுப் பொதுமக்கள் மற்ற நாட்டு மக்களைவிட எதையும் கூர்ந்து பார்க்கும் வல்லமை பெற்றவர்கள்; எடை போட்டுப் பார்ப்பதில் சமர்த்

தார்கள், வாய்ப்புகளை வழங்குவதில் அனுபவம் வாய்ந்தவர்கள்!

பதவிக்கு வந்தது யார்? என்று கேட்பதைவிட; பதவிக்கு வந்தவர்கள் எந்த நிலையில் வந்தார்கள்? வந்தபோது நாடு எந்த நிலையில் இருந்தது? பதவிக்கு வந்தது எப்படிப்பட்ட நேரம் என்பதுதான் முக்கியம். கஷ்டமான நேரத்தில் பதவிக்கு வந்திருக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது - கஷ்டம் எதனால் வந்தது என்பதைக் கூடவே எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு பாகத்தை மறைத்து மற்றொரு பாகத்தைக் காட்டக் கூடாது. முழுக் கதையும் வேண்டும்.

நூல் நிலையங்களில் உள்ள புத்தகங்களில் முன்னால் இருபது பக்கங்கள் இருக்காது; அல்லது பின்னால் முப்பது பக்கங்கள் இருக்காது! அதைப் போல் பாதியை மட்டும் எடுத்துக் கூறிப் பயனில்லை. இவ்வளவு நாட்கள் ஆட்சியில் இருந்தவர்கள் நல்லவர்களாக மட்டுமல்ல—வல்லவர்களாகவும் இருந்தார்கள்! என்றாலும் சீர்கேடுகளுக்குக் காரணம் என்ன என்பதை மக்களுக்கு எடுத்துக் காண்பித்தாக வேண்டும். நோய்க்கு மருந்து கொடுப்பதைவிட நோய்க்கு மூலத்தை ஆராய்ந்து-மருந்து கொடுப்பதுதான் நல்லமுறை என்பதை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வள்ளுவர் சொல்லியிருக்கிறார். மருத்துவத்துக்கு அவர் சொல்லியது அரசியலுக்கும் பொருத்தமுடையதாகத்தான் இருக்கும். இதைப் பெரியவர்கள் நோய்களை எடுத்துச் சொல்லும்போது அதற்கான மூலகாரணங்களையும் துணிந்து விளக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சனநாயகத்தில், 'இவர்தான் பதவிக்கு வரவேண்டும்' என்ற நியதி ஒன்றும் கிடையாது! வாய்ப்புக் கிடைத்தால் தகுதி தானாக வரும். இங்கிலாந்து நாட்டில் ஜான் மன்னன்

காலத்தில், பாதிரியார் மட்டுமே கலந்துகொள்ளக் கூடிய தேர்தல் ஒன்று நடந்தது. அங்கே உள்ள பாதிரிமார் களுக்கு ஜான் மன்னன், கடிதம் ஒன்று அனுப்பினான். 'நீங்கள் யாருக்கும் ஓட்டு போடலாம்; ஆனால், ரிச்சடுக்கு மட்டும் நிச்சயமாக ஓட்டுப் போடக் கூடாது' என்று அதில் குறிப்பிட்டிருந்தானாம்! யார் வேண்டுமானாலும் வரலாம், ஆனால் இவர்கள் மட்டும் வரக்கூடாது என்பது சனநாயகமல்ல.

இதுவரையில் பதவியைக் கொடுத்து வந்த மக்களுக்கு, இப்பொழுது அச்சமும், ஆச்சரியமும், நீங்கி இருக்கும். இனி பதவிக்கு வருபவர்களுக்குக் கூட 'இவர் கள் எல்லாம் இருந்ததுதானே' என்று அமோகமான மோகம் ஏற்படாது. 'இவர்களே பதவிக்கு வந்து விட்டார் கள்' என்று பதவிக்குக் காட்டப்பட வேண்டிய உண்மை சனநாயகம் நிலைத்துவிட்டது. எங்கள் வெற்றியால் நாட்டுக்கு உண்மை சனநாயகம் கிடைத்திருக்கிறது!

நம் நாட்டு விவசாயத் துறையினர் பிற்போக்கு வாதி கள் என்று கருதி வந்தோம்! எரு போடுவதில் கூட 'இப் படி - இப்படி' என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் படுகிறது ஒருபுறம். இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர், நீர் விடுவதைவிட எரு போடுவதும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிந்து எழுதிச் சென்று விட்டார். நம் நாட்டில், தெரிந்ததைத் தெரியாதது போல் காட்டிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள்! இதற்கு இங்கே உள்ள விவசாயிகள் நல்ல உதாரணம். மற்றும் சிலர் தெரியாததைத் தெரிந்தது போல் காட்டிக் கொள் வார்கள்.

விவசாயிகளுக்கு அறிவுரை தருபவர்கள், பின்னாலே சொல்லப்பட்ட வகையைச் சேர்ந்தவர்கள். 'உற்பத்தியை அதிகரிக்க எருக்களை உபயோகிக்க வேண்டும்' என்று

அறிவுரை தருபவர்களை இங்குள்ள விவசாயி சிரித்துக் கொண்டே கேட்கிறான் 'எங்கே இருக்கிறது எரு' என்று: நாம் ஏட்டைக் காட்டுகிறோம். இதோ, டெல்லிக்கு எழுதியிருக்கும் கடிதம் என்று! 'எரு எங்கே' என்று கேட்பவர்களுக்கு கிடைப்பது; 'இவ்வளவு வந்தது; இவ்வளவு வீணாயிற்று இவ்வளவு விநியோகிக்கப்பட்டது' 'இவ்வளவு பதுக்கியது' என்பது தான்! (67-மார்ச். 14)

காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதாகக் கூறினார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு எப்படிப்பட்டது என்பதை சட்டமன்ற மேலவையில் பார்த்து விட்டோம்! காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவர்கள் 'இவர்களா வரமுடியும்? இவர்களால் ஆளமுடியுமா? என்று வியப்புக் காட்டினார்கள்; அந்த வியப்புதான் எங்களுக்கு வலிவாக அமைந்தது! சென்ற தேர்தலின் போது காங்கிரசு கட்சியைச் சார்ந்த பெருந்தலைவர்கள் எல்லாம் கூடப் பேசினார்கள் - திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வர முடியுமா? இவர்கள் வருவதைப் பார்த்து விடுவோம் என்று! இதிலிருந்து காங்கிரசுத் தலைவர்களுக்கு உண்மை எளிதில் புலப்படவில்லை; சனநாயகத்தில் ஒரு கட்சி மாறி இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரும் என்றும் தெரியவில்லை என்பது விளங்கும். காங்கிரசுத் தரப்பிலே 'ஒத்துழைப்பு தருகிறோம்' என்கிறார்கள்.

ஜான்சன் என்ற ஆங்கிலப் புலவர் பேரகராதி ஒன்றைத் தயாரிக்க செஸ்டர் பவுல் பிரபுவின் உதவியைக் கேட்டார்; அவர் அளிக்கவில்லை; ஆனால் அகராதி முடிந்து வெளிவந்த பிறகு செஸ்டர் பவுல் பிரபு உதவியளிக்க முன் வந்தார்; ஜான்சனோ 'எனக்குத் தேவைப்பட்டபோது அளிக்கவில்லை...' என்று சொல்லிய பதிலைப் போல நான்

சொல்லவில்லை. காலங்கடந்தாலும் ஏற்றுக் கொள் கிறேன்.

நகரங்களில் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத் துக்கு ஆதரவு உள்ளது என்று நினைத்திருந்தேன். ஆனால் தேர்தல் முடிவுகள், கிராமங்களிலும் கழகத்துக்கு நல்ல ஆதரவு உள்ளன என்பதை உணர்த்தி விட்டன. தமிழகம் முழுவதும் பரவலாக திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரசு கட்சியில் உள்ள குழுச் சண்டைகளும் போட்டிகளும் தவிர்க்கப்படாவிட்டால், காங்கிரசு ஆட்சி செலுத்தி வரும் மத்திய அரசாங்கம் சில மாதங்களில் பெரிய அபாயத்தை சந்திக்க வேண்டி யிருக்கும்.

'காந்தீயம்' அரசியல் முழக்கமல்ல. காந்தீயம் என்பது ஒரு தத்துவமாகும். அது அரசியலுக்கு அப்பால் பட்டது ஆகும். காங்கிரசு கட்சிக்கு வெளியே உள்ளவர்களும் காந்தீயத்தைக் கடைபிடிக்கிறார்கள்! சர்க்கார் நிர்வாகத் திறமையுடன் பணியாற்ற உங்கள் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

# திருச்சி வழக்கறிஞர்களிடையே

உங்கள் அனைவரின் நல்வாழ்த்தையும், நல்லெண்ணத்தையும் பெற்றுப் போக வந்திருக்கிறேன்.

நாங்கள் பெற்றிருக்கும் வெற்றிபெற நீங்களெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் வழக்கறிஞர்கள் மட்டும் ஏறக்குறைய 28 பேர் - கழகத்தைச் சார்ந்தவர்கள்; இது கழகத்துக்கும் - வழக்கறிஞர்களுக்கும் இருக்கிற உறவையே காட்டுகிறது.

இனி சட்டங்கள் இயற்றும் பொழுது 'அந்த சட்டங்கள் நீதி மன்றத்துக்குப் போனால் மதிக்கப்பட வேண்டும்' என்ற அடிப்படையிலேயே நாங்கள் உருவாக்குவோம்.

ஏனெனில், பல சட்டங்கள் நீதிமன்றங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளதைப் பார்த்திருக்கிறோம்

தற்போதைய சூழ்நிலைக்கு இந்த அமைச்சரவை மீது இயற்கையாக உங்களுக்கு மனத்திருப்தி ஏற்பட்டிருக்கும் அதில் வழக்கறிஞர்கள் இருப்பதால்!

சட்டமன்றத்திலே வழக்கறிஞர்கள் இருந்து விட்டால் மட்டும் போதாது; அங்கே இயற்றுகின்ற சட்டங்கள் குறைபாடு இல்லாததாயும், மக்கள் மதிக்கக் கூடியதாகவும் ஓட்டைகள் இல்லாததாகவும் இருக்க வேண்டும். அதற்கு உதவுபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும்.

வழக்கறிஞர்களாக இருக்கும் நீங்கள், உங்களுடைய காரியங்களை மட்டும் கவனித்துக் கொண்டிருக்கக் கூடாது. நாட்டு நிலைமைகளையும் உங்கள் சங்கங்களிலே

கூடிப்பேசி முடிவெடுக்க வேண்டும்; அப்போதுதான் எங்களுக்கும் நீங்கள் உதவி செய்பவர்களாவீர்கள்.

உண்மையான வழக்கறிஞர்களின் கடமை, வழக்குகள் அதிகமாக வராமல் பார்த்துக் கொள்வதுதான் எப்படி டாக்டர்கள் நோயாளிகள் பெருக வேண்டும் என்று கருதாது நோயை தடுக்க வேண்டும்' என்று தடுப்பு ஊசி மருந்து போடுகிறார்களோ, அது போல், உண்மையான வழக்கறிஞரும் அதிக வழக்குகள் நடைபெறாததைத் தான் விரும்ப வேண்டும்.

குறிப்பாக மாநிலங்களுக்கிடையே இரண்டு அரசாங்கங்களுக்குள் அல்லது மத்திய அரசாங்கத்துக்கும் -மாநிலத்திற்கும் எந்த வழக்கும் வராமல் இருக்க நீங்கள் வழிவகைகள் கண்டு அதுபோல் நீதிமன்றங்கள், நல்லபடி தனித்து இயங்கவும் பாடுபட வேண்டும்; அதற்கான சூழ்நிலையை எனது அரசாங்கம் தோற்றுவிக்கத் தவறாது.

வழக்கறிஞர்கள் நல்லபடி நாட்டுக்குச் சேவை செய்யப் பாடுபட வேண்டும்.

அல்லாடி கிருஷ்ணசாமி போன்றவர்கள் வழக்கறிஞர்களாக நல்லபடி பணியாற்றி, நாட்டுக்குத் தேவையான சட்டங்களையும் இயற்றித் தந்துள்ளார்கள். அத்தகைய வகைகளில் நீங்களெல்லாம் பாடுபட வேண்டும்.

கற்றறிந்தவர்கள் குறைவாக இருக்கிறார்கள். அரசியலில் மற்று எந்தச் சட்டம் தெரிந்திருந்தாலும் தெரியாவிட்டாலும், நாட்டு அரசியலைத் தெரிந்து கொள்ளாமல் யாரும் விலகி இருக்க முடியாது - கூடாது.

அரசியலில் - பொதுப்பணியில் உங்களை ஈடுபட அழைக்கிறபோது, 'கட்சிதான் அரசியல்' என்று நினைத்து விடாதீர்கள்! கட்சிக்கு அப்பாற்பட்ட அரசியல் விவகாரங்களையே கவனிக்க உங்களை அழைக்கிறேன்.

அரசியல் வாதிகள், மற்றவர்களை அரசியலுக்கு அழைப்பதில்லை; ஆனால் நான் ஒரு தனிப்பட்ட அரசியல் வாதி; அரசியலில் படித்தவர்களும், மற்றவர்களும் சேரப் பண்படும் என்று கருதுபவன் நான்.

உங்களை சந்தித்ததிலே மகிழ்ச்சி கொள்ளுகிறபோது அதே வேளையில் பொதுவான இரண்டு கருத்துகளை மட்டும் சொல்லிப்போக விரும்புகிறேன். நாட்டில் இருக்கிற ஒவ்வொரு பிரச்சினையிலும், மக்களிடத்திலே இரண்டு கருத்துக்கள் இருந்து வருகின்றன.

அரிசி, நெல் கொள்முதல் முதற்கொண்டு குழந்தைகள் பெற்றுக் கொள்வது வரையில் இரண்டு விதக் கருத்துகள் நிலவி வருகின்றன. ஒரு சிலர் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டும் என்று வாதாடுகின்றார்கள். மற்றொரு சாரார் கட்டுப்பாடு வேண்டும் என்கிறார்கள். இத்தகைய நிலையில் உங்களைப் போன்றவர்கள் ஆராய்ந்து எங்களுக்குச் சொல்லி உதவலாம். அடுத்ததாக நாட்டில் தொழில்கள் வளர்ந்தால் நல்லது என்பது பற்றியதாகும். இதில் ஒரு சிலர், தொழில்கள் அனைத்தையும் பொதுத் துறையிலே அரசாங்கமே பெற்று நடத்த வேண்டும் என்கிறார்கள்! வேறுசிலர் தனியார் துறையில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இத்தகைய கருத்துக்களில் எது சிறப்பானது; நாட்டிற்கு உகந்தது என்பதை நீங்கள் ஆராய்ந்து சொல்ல வேண்டும். நீங்கள் எல்லோரும் சிறந்த வழக்கறிஞர்கள் என்று கருதி இந்த வழக்குகளை உங்களிடையே விட்டுச் செல்கிறேன்.

வேறொரு அதிர்ச்சி தரத்தக்க செய்தி, மாநில - மத்திய சர்க்கார்களுக்கு இடையே உள்ள உறவு, அதிகாரங்களைப் பற்றியது. இத்தகைய கருத்துக்களுக்கு எனக்குப் பக்கத்திலே உங்களை இருக்கும்படி நான் கேட்கவில்லை; மாறாக,

அரசியல் சட்டத்தைக்கொண்டு பரிசீலிக்க வேண்டு கிறேன்.

'எந்தக் கருத்து சிறந்தது' என்பதை ஆராய்து முடிவு செய்தால் போதுமானதாகும்.

வருகிற பத்தாண்டுகளில் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே உள்ள அரசியல் நிலைபற்றி தான் இனி நீதிமன் றங்களில் வழக்குகள் எனக் கருதுகிறேன்.

இதையே 25 ஆண்டுகளுக்கு முன் சர். சி. பி இராம சாமி ஐயர் சொன்னார். அதையே நான் மீண்டும் அழுத்திச் சொல்லக் காரணம் என்ன? ஆந்திர ஆறுகளில் ஓடும் நீரை யும், கேரளத்தில் வீணாகப் போய் விழும் நீரையும் நமது மாநிலத்துக்கு உதவுவதிலே சிக்கல்கள் ஏன்? ஆந்திர அரசினரை உணவு கேட்டால், 'கேரளத்துக்கு இல்லை' என்பது எப்படி ஒருமைப்பாட்டை வளர்க்கும்? கேரள முதலமைச்சரும், ஆந்திர முதலமைச்சரும் கூடிப் பேசிய பிறகுதான் இந்த நிலை! இருப்பினும் நான் அவர்களை சந்தித்த பிறகுதான் உண்மை நிலையை அறிய முடியும்.

இதை சொல்லுவதாலேயே பத்திரிகைக் காரர்கள் தவறான கருத்துக் கொள்ளக் கூடாது; "பிருமானந்தா ரெட்டிக்கு அண்ணாதுரை எச்சரிக்கை" என்று போட்டுப் பகை உண்டாக்கிவிடாதீர்கள்! பிறகு நமக்கு வருவதும் வராமல் போய்விடும்!

ஆகவே வழக்கறிஞர்கள் துறையிலே இருப்பவர்கள் இத்தகைய பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து விளக்கந்தர வேண்டும். —(ஏப் 8–67).

# மதுரை நீதிமன்றக் கட்டிட கால்கோல் விழாவில்

மக்கள் விருப்பங்களை அறிந்து சட்டங்கள் இயற்றப் படும் பொழுது அந்தச் சட்டங்களை மக்களின் சட்டங்கள் என்று கூறலாம். சட்டங்கள் எந்த நிலைமையில் எந்த கண்ணோட்டத்துடன் சட்டமன்றத்தில் இயற்றப்பட்டன என்பதை மனதில் கொண்டு நீதி மன்றங்கள் விளக்கம் தரலாம். இங்கே பேசிய நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாநில அரசாங்கங்களுக்கும், தனி நபர்களுக்கு மிடையே எழும் வாக்குகளின் விளைவாக நுண்ணியமான நிலைமையில் தீர்வு காணவும், இரண்டுக்குப் நீதி வழங்கக்கூடிய நிலை யிலும் நீதி மன்றங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். மாறிவரும் உலகில் மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கு மிடையே கூடத் தகராறுகள் ஏற்படலாம்; இவைகளில் நீதி மன்றங்கள் தலையிட்டு, தங்களது விளக்கங்களை தர வேண்டிய நிலைமையும் எழலாம்.

இப்பொழுது திருமலை நாயக்கன் மகாலில் நீதி மன்றங் கள் உள்ளன. அந்த இடங்கள் பாதுகாப்பு குறைவாக இருப்பதால் புதிய இடத்தில் நீதி மன்றங்கள் அமைக்கப் பட வேண்டியதன் அவசியத்தை உணருகிறோம். புதிய கட்டடங்கள் இரண்டொரு ஆண்டுகளுக்குள் கட்டப்படும் என்று நம்புகிறேன்

நிர்வாகம் என்பது வேறு; நீதித்துறை என்பது வேறு. இந்த வேறுபாட்டைத் தமிழக அரசாங்கம் உறுதியாகக் கடைபிடிக்கும். நீதி மன்றங்கள் வளைந்து கொடுத்து அரசாங்கத்தையே பின்பற்ற வேண்டும் என்று புதிய அரசு விரும்பவில்லை. மக்களின் விருப்பத்துக்கேற்ற புதிய சட்டங்களையே இயற்ற அரசாங்கம் விரும்புகிறது.

# வணிகர்களுக்கு

வியாபாரிகளுக்குச் சமுதாயத்தில் முக்கிய பங்குண்டு. வியாபாரிகள் என்றவுடன் அனைவரும் நல்லவர்கள் என்றோ அனைவரும் கெட்டவர்கள் என்றோ சொல்லிவிட முடியாது. வியாபாரிகளில் சில கெட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்களால் வியாபார சமூக முழுவதுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது!

சிலர் வழி தவறி நடப்பதால் கெட்ட பெயர் அந்தத் தொழில் முழுவதும் உண்டாகிறது! நான் யாரிடமாவது கோபித்துக் கொண்டேன் என்றால் என்ன சொல்வார்கள்? இந்தக் குள்ளமானவர்களே இப்படித்தான் என்பார்கள்! நான் ஒருவன் செய்யும் காரியத்தால், உயரமில்லாத அத்தனைப் பேருக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்துவது போலச் சில வியாபாரிகள் மறைத்து வைப்பதால், குறைத்துக் கொடுப்பதால் அந்த சமுதாயம் முழுவதுக்குமே கெட்ட பெயர் ஏற்படுகிறது. சில வியாபாரிகள், தேய்ந்து போன படிக்கல்லையும், சாய்ந்துபோன தராசையும் பயன்படுத்துகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. வணிகர் இல்லாமல் சமூகம் இயங்க முடியாது. அறவோர், ஆளுவோர், வணிகர், குடிமக்கள் என்று பழங்காலத்தில் சமுதாயத்தைப் பிரித்து வைத்திருந்தார்கள்; வணிகர்கள், சமுதாயத்தில் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை இதிலிருந்து நாம் உணரலாம். ஆனால் இடைக்காலத்தில் அதை, சாதி வேறுபாட்டுக்கு அடையாளமாகக் காட்டினார்கள். வியாபாரிகளில் சிலர் செய்யும் தவறுகள்தான் அந்த சமுதாயம் முழுவதுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்தித் தருகிறது! இந்த கருத்தைப் பாராளுமன்றத்திலும்,

சட்ட மன்றத்திலும் பலர் வலியுறுத்தியுள்ளனர். வியாபாரிகளுக்கு எதிர்காலம் உண்டா இல்லையா? என்று இங்கே பேசியவர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் வியாபாரிகளுக்கு நிச்சயமாக எதிர் காலம் உண்டு. அந்த எதிர்காலம், பழி பாவமானதா? பழிபாவமில்லாததா? என்பதை வியாபாரிகள்தான் முடிவு செய்ய வேண்டும். நன்மை தீமைகளை வியாபாரிகள்தான் ஏற்படுத்த வேண்டும். "பொருள்களை வைத்துக்கொண்டே இல்லையெனச் சொல்கிறார்கள்" என்று கூறப்படுகிறது. இங்கே 'கட்டுப்பாட்டை நீக்க வேண்டும்' என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது, கட்டுப்பாட்டைக் கையாளுவதால் தான், பிரச்சினைகள் எளிதாக்கப்படுகின்றன. கட்டுப் பாடு என்ற வார்த்தையைக் கேட்ட உடனேயே சிலருக் குப் பயம் தோன்றுகிறது! கட்டுப்பாடு என்றவுடன் பயப் பட வேண்டிய அவசியம் இல்லை. கட்டுப்பாடு என்றால், 'அது நல்ல கட்டுப்பாடா? அது தேவைதானா? அது யாருக் காக? என்பதைப் பார்க்க வேண்டும்.

கட்டுப்பாடு தேவை இல்லை என்று இந்த சர்க்கார் கருதினால், உணர்ந்து கொண்ட உடனேயே கட்டுப் பாட்டை நீக்கும், 'கட்டுப்பாடு கட்டுப்பாடு' என்று பொது வாக நாம் இப்பொழுது சொல்வது எல்லாம், உணவுக் கட்டுப்பாட்டைப் பற்றிதான்! உணவுப் பொருள்கள் ஏழை எளிவர்களுக்கு மலிவு விலையில் கிடைக்கச் செய்யும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. தன்னை நம்பியிருக்கும் மக்களுக்கு உணவு தர முடியாது ஓர் 'அரசு' என்று சொல் லிக் கொள்ளும் அந்தஸ்துக்கே லாயக்கில்லாதது. உணவு நெருக்கடியால் மக்கள் திண்டாடாமல் செய்யும் பொறுப்பு வணிகர்களிடமிருக்கிறது. வணிகர்கள் இதில் அரசாங்கத்துக்கு நல்ல ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

# உணவு விடுதிகள் சங்கத்தினரிடையே

இப்போது நாட்டில் உள்ள உணவுப் பிரச்சினை தற்காலிகமானதுதான்; உணவுச் சிக்கலை வெற்றிகரமாக சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன்.

உணவு பற்றுக்குறையை இல்லாமல் செய்வதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உணவு விடுதிச் சங்கம் ஒத்துழைப்பு நல்க வேண்டும். உணவுத் தானிய நெருக்கடி தீரவேண்டும்; நியாயவிலைக்குப் பொருட்கள் கிடைக்க வேண்டும். உணவுப் பொருட்களுக்கு வரி விலக்களிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது; உங்கள் குறைகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும். கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தாலும் அவை செயலுக்கு வரவும் சீர்மை பெறவும் சிறிது காலம் ஆகும். உணவு விடுதிகளில் பரிமாறப்படும் உணவுகளுக்கு வரி விலக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை மாநில நிதி நிலையில் குறைவு ஏற்படாதிருந்தால் இயலக்கூடியதுதான். ஆனல் இப்போது துண்டு விழும் வரவு செலவு திட்டத்தைத்தான் கொடுத்துள்ளேன்; ஆகவே இது தொடர்பாக என்னிடம் அதிகம் எதிர்பார்க்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

# பத்திரிகையாளர்க்கு

காங்கிரசுக்காரர்களே ஒரு மாத அவகாசம் கொடுத்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்; உங்களிடமிருந்தும் அதை எதிர்பார்க்கிறேன். பழைய நிலைமைகளை சீர் தூக்கிப் பார்ப்பதற்கே எங்களுக்கு நேரம் தேவை!

போதிய உணவு உற்பத்தி இருக்கிறது என்றால் கட்டுப்பாடு - விநியோக வரையறைகள் போன்ற நடைமுறைகளுக்கு அவசியமே இல்லை; தட்டுப்பாடு ஏற்படுகிறது என்றால், அதனை சரி செய்யும் அளவுக்கு கட்டுப்பாடுகளை மேற்கொள்ளத்தான் நேரிடும்.

உணவுப் பிரச்சினை அரசியலுக்கு அப்பாற்பட்டது. மத்திய அரசின் உணவுக் கொள்கையும் ஒரு வழிப்பாதையாக இருக்கக் கூடாது. தமிழகத்திலிருந்து தவறான வழிகளில் உணவுத் தானியங்கள் கேரளத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் வகையில் எல்லையில் காவல் முறைகள் வலுப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

மக்களுக்குத் தேவையான உணவு கிடைக்க வேண்டும் என்ற பிரச்சினையில் அரசியல் கட்சிகளிடையே வேறுபாடுகள் இருக்கக் கூடும் என்று நான் கருதவில்லை. உணவுத் தேவைக்கு திடீர்பரிகாரம் கண்டு விட முடியும் என்று நான் நினைக்கவில்லை; எங்கள் அமைச்சரவையின் ஒவ்வொரு இயக்கமும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை தோற்றுவிக்கும் என்பதனை நான் இத்தருணத்தில் கூறமுடியும். தமிழகத்தின் தேவைகளைப் புறக்கணிக்கும் வகையில் தேசிய உணவுக் கொள்கை இல்லாமல் எங்கள் அமைச்சரவை பார்த்துக் கொள்ளும்.

நமது மாநிலத்தில் மும்மொழிக் கொள்கை அமுல் படுத்துவதை ஆராய்ந்தும், மற்ற மாநிலங்களில் மும் மொழிக் கொள்கை எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பதைப் பற்றி பரிசீலனை செய்த பிறகும், இது பற்றி தீவிர ஆலோசனை செய்யப்படும். மற்ற மாநிலங்களில் மும்மொழிக் கொள்கை சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை நிறைவேற்றப்படும் அளவுக்கு வடக்கே உள்ள மாநிலங்கள் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில்லை என்று பொதுவான கருத்து நிலவி வருகிறது.

பத்திரிகையாளர்களை நான் எப்பொழுதும் விரும்பிக் கேட்டுக் கொள்வேன்; நான் ஒரு பத்திரிகைக்காரன் என்று சொல்லிக் கொள்வதையே பெருமையாகக் கருதுபவன். மாநிலங்களவைக்கு நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட போது, 'உங்கள் தொழில் என்ன?' என்று கேட்ட போது கூட 'அரசியல்வாதி' என்று நான் எழுதிக் கொடுக்க வில்லை; 'பத்திரிகைக்காரன்' என்றுதான் எழுதிக் கொடுத் தேன்.

'பத்திரிகைக்காரன்' என்று என்னைச் சொல்லிக் கொள்ளும் நான் மற்ற பத்திரிகைக்காரர்களை இப் பொழுதே கேட்டுக் கொள்வது இதுதான்.

"தி. மு. க ஆட்சியில் தவறு ஏதாவது ஏற்படுமானால், அதைச் சுட்டிக்காட்டுங்கள்; தவற்றைக் கண்டிக்க வேண் டாம் என்று சொல்லவில்லை; தவற்றைக் கண்டித்துப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது உங்கள் கடமை - உரிமையுங்கூட."

ஆனால், அந்த கடமையைச் செய்யும் முன்பு இருபத்து நான்கு மணிநேரத்துக்கு முன்பு எங்களுக்குத் தெரிவியுங் கள் - தவற்றை நாங்களே திருத்திக் கொள்கிறோம். இந்த ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று நம்புகிறேன்.

# தொழிலாளர்களுக்கு

உங்கள் பிரச்சினைகளுக்கு வழிவகைகள் காண்பதில் நானும் எனது அமைச்சரவையைச் சேர்ந்த நண்பர்களும் பாடுபடுவோம் என்று கூறிக்கொள்கிறேன். நாங்கள் எதையாவது சரிவரச் செய்யா விட்டாலும், 'தெரியாமல் நடந்துவிட்டது' என்று பொறுத்துக் கொள்ளுங்கள்! 'தெரியாமல் கூட இருக்குமா' என்றுகேட்கலாம்; தெரியாத அளவுக்குப் பிரச்சினைகள், அதிகார வர்க்கத்தில் வளர்ந்து விட்டிருக்கின்றன! உங்களிடையே வந்து என்னென்னவோ சொல்ல வேண்டுமென்று விரும்புகிறது-என் உள்ளம்! ஆனல் எனது எண்ணங்களோ, எங்கெங்கோ செல்கிறது! கடிகாரத்துக்கும் காலண்டருக்கும் கட்டுப் பட்டுப் போயிருக்கும் என்னிடம் நீங்கள் ஏதாவது பேச வேண்டு மென்ருல், இரண்டுக்கும் இடைப்பட்ட நேரத்தைத்தான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் என்னிடம் நேரடியாகச் சொல்ல நினைப்பதைவிட, எழுதிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் நான் இரவு நேரத்தில் தூங்காமல் நீண்ட நேரம் விழித்துக் கொண்டிருப்பவன் என்பது உங்களில் பலர் அறிந்ததுதான்.

நேரில் கூற நினைப்பதைவிட, எழுதிக் கொடுக்கும் அத்தகைய பிரச்சினைகளை நான் இரவுப் பொழுதுகளில் படித்துப் பார்ப்பேன். நீங்கள் அவ்வாறு எழுதிக் கொடுக்கும் பிரச்சினைகளை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, இதற்கு முன்னர் அவைகள் கோரிக்கைகளாகத் தெரிவிக்கப்பட்டனவா - சமாதானம் என்ன கூறப்

பட்டது - நான் என்ன விளக்கம் சொல்ல வேண்டும் - என்று எழுதிக் கொடுத்தால், நிச்சயம் அவைகளைப் படித்துப் பார்த்து உங்களுக்கு வெற்றி கிடைக்கும் வகைகளில் நடப்பேன். சிலர் ஒருவகை அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் தொழிலாளர்கள். ஆனால் மிகப் பெரும்பாலானவர்கள், முறையான அமைப்பின் கீழ் கொண்டுவராமல், உரிமை உணர்வுகள் அற்றுப்போய் அரசியல் சூதாட்டத்துக்கு ஆளாகி வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது! தொழிலாளர்கள் வளர்ந்தால்தான் நாட்டில் செல்வம் வளரும்! செல்வம் வளர்ந்தால்தான், நீங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குச் சந்தைகள் கிடைக்கும்! நீங்கள் ஒரு டைப்ரைட்டரை செய்கிறீர்கள் என்றால், அதை வாங்கும் நிலையில் மக்கள் இருக்க வேண்டும்; அடிமட்டத்தில் இருப்பவர்கள் மிச்சப்படுத்தும் நிலையில் இல்லை என்றால், உங்கள் உற்பத்திக்கு வழி இல்லாமல் போய்விடும்!

உங்களது வசதிகளுக்காக நீங்கள் எடுத்துரைக்கிற கோரிக்கைகளுக்கு நாங்கள் துணைநிற்போம்! உங்களது பிரச்சினைகளை மட்டும் தெளிவான முறையில் எழுதிக் கொடுப்பதோடு முன் கூட்டியே எங்களிடம் வாதிப்பீர்களானால் நிச்சயம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். கொஞ்சம் தாமதித்து நடப்பதற்கு மட்டும் உங்கள் அனுமதி கிடைக்க வேண்டும். எதிர்கட்சியாக வந்துள்ள காங்கிரசே ஆறுமாத காலம் கொடுக்கிறபோது, நீங்கள் இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் (67 மார்ச்சு-14)

நான் ஏற்றுக் கொண்டிருக்கிற அரசு! உங்களைப் போன்ற தொழிலாளர்களின் அரசு! உங்களைப்போன்ற தொழிலாளர்களின் கருத்தைக்கூட இந்த அரசு கேட்கவில்லை என்றால், அது அரசே இல்லை! எனக்கே கூட

சூட்சமமாக இருந்தது நீங்கள் கோரிக்கைகளைப் படித்துக் கொடுத்த போது !

காங்கிரசு ஏகாதிபத்திய வாதிகள், நமது அரசுக்கு ஒத்துழைப்பைத் தருவதாகச் சொன்னார்கள்; ஆனால் சொன்னது போல நடந்து கொள்ளவில்லை. 'அருப்புக் கோட்டை, நெல்லை நகராட்சிகள் சரியாக இயங்கவில்லை. என்று கூறி அவற்றைக் கலைத்தார்கள். ஆனால் உயர்நீதி மன்றத்தில், 'இப்பொழுதுகூட அரசாங்கம் மறு பரிசீலனை செய்யலாம்' என்று கூறினார்கள். நியாயமாக சனநாயக முறைப்படி உயர்நீதி மன்றத்துக்கு மதிப்புக் கொடுப்ப தானால், காங்கிரசார் அந்த நகராட்சி களைப் புதுப்பித்து இருக்க வேண்டும்.

அவைகளைப் புதுப்பிக்க நாங்கள் கொண்டு வந்த சட்டத்தை, சட்டமன்ற மேலவையில், காங்கிரசார் தோற் கடித்தார்கள் ! அவர்கள் தடுத்து நிறுத்தலாம்; திருப்பி அனுப்பலாம்; ஆனால் வேறு எதுவும் செய்துவிட முடி யாது ! இப்படிப்பட்ட அவர்களது செயல்களை நல்லவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் 'ஒத்துழைப்புத் தருகிறோம்' என்று சொல்லியதையே நம்பிக் கொண்டிரா மல் உங்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்பையே என்றும் வேண்டுகிறேன்.

# அரசாங்க ஊழியர்களிடையே

நண்பர்களே !

உயர்ந்த நிலையில் உள்ளவர்கள், சாதாரண நிலையில் உள்ளவர்கள் ஆகிய எல்லா ஊழியர்களும் என்னிடம் மிகத் தாராளமாகத் தங்கு தடையின்றி தங்கள் கருத்துக் களை எனக்கு எழுதலாம்; அல்லது, என்னிடம் நேரில் சொல்லலாம்: கொஞ்சங்கூட கூச்சப்படாதீர்கள் !

முன்னாலே என்னிடம் எத்தனை அன்புடன் பழகினீர் களோ அதே அளவில், இப்போதும் நீங்கள் மனம் விட்டுப் பழகினால்தான் நான் உள்ள ஆரோக்கியத்தோடு உடல் ஆரோக்கியமும் உள்ளதாகக் கருதிக் கொள்வேன். இல்லாவிட்டால், எனக்குப் பதவிக்குப் பதில் ஏதோ நோய் வந்துவிட்டதோ என்றுதான் எண்ணிக் கொள் வேன். நீங்கள் எண்ணும் எண்ணங்களை என்னிடத்தில் எடுத்துச் சொல்லுங்கள். ஆனால் சொல்லும் பொழுது 'நம் மைப்போலவே பலபேர் பலயோசனைகளை இப்படிச் சொல் லுவார்கள்' என்று உணர்ந்து சொல்லுங்கள்.

"பலபேரும் எடுத்து வைக்கும் எணணங்களில் சிறந்த தைத் தேர்ந்தெடுத்துச் செயல்படும் போது அது எங்கள் சொந்தக் கருத்து என்று எண்ணி விடாதீர்கள் - சமுதா யத்தின் கருத்து என்று எண்ணுங்கள்"

சர்க்கார் அலுவலங்களில் பணியாற்றும் உங்களுக்கு மனக்குமுறல் நிரம்ப உண்டு. ஊதிய அமைப்பில் - வேலை வாய்ப்புகளில் - முன்னேற்றம்பற்றி உங்களுக்கு குறைகள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். முடிந்தவரை நானும் என் நண்பர்களும் நிச்சயம் அவற்றில் அக்கறை

காட்டி ஆவன செய்ய முயலுவோம். உங்கள் குறைகள் ஏற்கனவே உள்ள மனக் குறைகள்; நாங்களோ புதிதாக வந்தவர்கள். எனவே 'ஐயோ, பாவம்' என்ற உணர்ச்சி யோடு எங்களை அணுக வேண்டுகிறேன்.

உங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடி உடனடி யாக எங்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள்! ஒரேயடி யாகத் தொல்லை கொடுக்காதீர்கள்! மற்ற விஷயங்கள் எல்லாம் தெரிகிற இவர்களுக்கு, இதுதானா தெரியாது? என்று எண்ணி விடாமல்; 'ஐயோ' பாவம்! இவர்களுக்கு இதெல்லாம் தெரியாது சொல்லிக் கொடுப்போம் என்ற எண்ணத்தோடு எங்களை அணுகுங்கள். உங்கள் குறை களை நாங்கள் மெள்ள மெள்ள நிதானமாகத் தீர்ப்போம்; ஆனால் நிச்சயமாகத் தீர்ப்போம். சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் என்று உங்களை நான் அறிந்திருப் பதைவிட, உங்கள் வீடுகளில் நான் உங்களைப் பார்த்திருக் கிறேன். 'நான் உங்களில் ஒருவன்!' என்னைப்பற்றி எழுதிய பத்திரிகைக்காரர்கள் 'நான் பள்ளி ஆசிரியனாய் வாழ்வைத் தொடங்கினேன்' என்று எழுதி இருக்கிறார்கள். ஆனால் அதற்கும் முன்பு சில திங்கள் நான் காஞ்சீபுரம் நகர்மன்றத்தில் ஓர் எழுத்தனாகப் பணியாற்றி இருக்கி கிறேன். அதுவே நீடித்திருந்தால், உங்களைப்போல் பணி யாற்றிவிட்டு இப்போது ஓய்வு பெற்றிருப்பேன்.

நான் அங்கேயே இருந்திருந்தால் உங்களைப் போன்றே தொல்லைகள் அனுபவித்துக் கொண்டுதான் இருந்திருப் பேன். வெறும் தலைவலி வந்தாலே தாங்க முடிய வில்லையே! இந்த சர்க்கார் உங்களுடைய சர்க்கார்தான் என்றாலும் வாழ்வில் குறைகள் இருந்தால் - வலி நிச்சய மிருக்கும்! தலைவலிக்குக்கூட பல்வேறு மருந்துகள் உண்டு. சில எரிச்சல் தரும்; சில குளிர்ச்சியாய் இருக்கும். மருந்து தடவுவதிலும் பலவகைஉண்டே! வேண்டியவர்கள் தடவி

ளுல் வலியெல்லாம் பறந்து போகும்! வேறு யாராவது தடவிளுல் 'பழைய வலியே பரவாயில்லை' என்று சொல்லத் தோன்றும்! என்னுடைய முறை வலி பறந்து போகிற மாதிரி மெல்லத் தேய்க்கிற முறை!

கூடிய விரைவில் எங்களாலே முடிந்த அளவுக்கு உங்கள் குறைகளைக் கவனிப்போம் என்று உறுதி தருகிறேன்.

அரசியல் கட்சிகள் ஆட்சி பொறுப்பிற்கு மாறி மாறி வரும் போகும்! சக்கரம் உருண்டால்தான் பயணம் போக முடிகிறது! சக்கரம் உருளாவிட்டால் பயணம் தடைபட்டுப் போகும்!

இந்த ஆட்சி மாற்றத்தின் மூலம் சனநாயகச் சக்கரம் சுழல ஆரம்பித்துவிட்டது! புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் எங்களை நல்ல பாதையில் அழைத்துச் செல்ல முன்ளுள் அமைச்சர்களுக்கு முழு உரிமையுண்டு. பொறுப்பேற்றிருப்பவர்கள், தப்புச் செய்தால் செய்யட்டுமே என்று நிர்வாகத்தில் அக்கறை இல்லாமல் அவர்கள் இருப்பார்களேயாளுல், அவர்கள் தங்கள் கடமையை மறந்ததாகவே ஆகும். பன்னெடுங்காலம் பதவியிலிருந்து நடத்தியவர்கள் எங்களை வழி நடத்திச் செல்வதே முறையாகும்.

அவர்கள் இங்கே இருபது இருபத்தைந்து முப்பது ஆண்டுகளாகப் பல்வேறு துறைகளில் பணியாற்றி அனுபவம் மிக்கவர்கள். அதிகாரிகள் இருக்கிளுர்கள்; அவர்கள் தங்களுக்கு இருக்கும் ஆற்றலை எல்லாம், நிர்வாகம் செம்மைபட அளித்து, மக்கள் மனக்குறையைத்தீர்க்கும் அளவில் உதவி செய்ய வேண்டுகிறேன். அந்த ஒத்துழைப்பும் தோழமையும், நட்பும் மிகுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் துணிந்து வந்திருக்கிளும்.

நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எங்களுடன் முழுக்க ஒத்துழைப்பதாக நண்பர் ராமகிருஷ்ணன் அவர்கள் உறுதியளித்தார். அந்த வகையில் நீங்கள் வழங்கும் கருத்துகளுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படும் என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன் !

என்னை உங்கள் முதலமைச்சர் என்று நினைப்பதை விட உங்கள் குடும்பத்து மூத்தபிள்ளை என்று எண்ணிக் கொள்ளுங்கள். குடும்பப் பாசத்தோடு உழைத்துக் கொண்டிருக்கிறேன். உழைப்பேன்.

# காஞ்சி கைத்தறி வாரவிழாவில்

கைத்தறித் துணிகள் ஏராளமான அளவில் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாற்றப்பட்டால் தான் கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வு உண்டு. ஆகை யினால் பொது மக்கள் கைத்தறித் துணிகளை வாங்க வேண்டும்.

பட்டுவிலை உயர்வினால் உற்பத்தி பாதிக்கப் படுகிறது. பட்டு நெசவில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்கு உதவ கச்சாப் பட்டின் விலையைக் குறைக்க கருநாடக அரசைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நெசவாளர்களின் குழந் தைகள் இதர தொழில்களில் பயிற்சி பெற வேண்டும். பாலி டெக்னிக்குகளில் நெசவாளர்களுடைய குழந்தை களுக்கான மாலை நேர வகுப்புக்களை ஏற்பாடு செய்யலாம்.

(67. ஏப். 18.)

# கொள்கை விளக்கம்

அரசு மக்களிடையே கடன் எழுப்புவதற்கும் புதிய வரிகளை விதிப்பதற்கும் நாங்கள் கொள்கையளவில் எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அல்லர்!

அரசாங்கத்தின் புதிய வரி விதிப்புகள், மக்களின் நலனை உணர்ந்த வகையில் இருக்க வேண்டும். அதற்குப் புறம்பான வரிகளைத்தான் நாங்கள் இதற்கு முன்பு எதிர்த்து வந்திருக்கிறோம்.

மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்காக நமக்கு ஒதுக்கும் அளவினை அறிந்து கொண்ட பிறகே திட்டம் பற்றி முடிவு மேற்கொள்ள வேண்டும்.

சேலம் இரும்பாலைத் திட்டம் பற்றி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் சபையில், தங்களுடன் சேர்ந்து இயங்க வேண்டும் என்பதற்கான எவ்வித அதிகார பூர்வமான முயற்சியும் ஜனசங்கத்திடமிருந்து இது வரையில் வரவில்லை; மற்ற கட்சிகளுடன் ஐக்கியமாகி விடுவது என்ற திட்டமும் எங்களிடம் இல்லை; முக்கியப் பொது பிரச்சினைகளில் மற்றய எதிர்கட்சிகளுடன் சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் அங்கே வாக்களித்திருக்கிறது. என்பதனை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (67-மார்ச். 8).

கொள்கைகளைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு வலதுசாரிக் கட்சி என்று ஒரு சில வட்டாரங்கள் கருதுவதை நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

ஆனால் மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில் எங்கள் பக்கம்தான் 'ரைட்'—அதாவது 'சரி' என்ற பொருளில் குறிப்பிடுகிறேன்—திசைப் பொருளில் அல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் தலைவர்களுக்கும்—தொண்டர்களுக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

இப்போது இங்கு இந்தி கட்டாய பாடமில்லை; இருந்தாலும், இந்த முறையை பதவியிலிருந்து விலகியிருக்கும் அமைச்சரவை எந்த அளவுக்கு கடைபிடித்து இருக்கிறது என்பதை எங்களது புதிய அமைச்சரவை முதலில் கண்டறியும். மற்ற மாநிலங்களின் நிலை என்ன என்பதை நாங்கள் தெரிந்து கொண்டாக வேண்டும்.

எங்களது மொழிக் கொள்கைகளுக்கு ஏற்ப மத்திய அரசிடம் அரசியல் சட்டத்திருத்தத்தை இந்த அமைச்சரவை வலியுறுத்தும்; என்றாலும், மத்திய அமைச்சரையும் புதியதாகையால், அவர்களுக்கும் போதிய அவகாசம் கொடுப்போம்.

உணவுதான் இன்று முக்கியமான பிரச்சினை; இது குறித்து அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. உணவுப் பிரச்சினைகள் தீர்ந்தால், பிற பிரச்சினைகள் எளிதில் தீர்ந்து விடலாம். நம் நாட்டிலே உள்ள ஏராளமான எளிய குடிகளில் உள்ள ஏழ்மை எனும் இருளும் அகற்றப்பட வேண்டும். மன நிறையும், மகிழ்ச்சியும் ஏழைகளுக்கு ஏற்படுமாயின் வாழ்வைக் கவ்வியுள்ள இருளும் அகலும்! அந்தப் பணியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

தனித் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்ட போதிலும் தனது மூன்று அடிப்படைக் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைவிடவில்லை.

1. எங்களுடைய மொழியும், கலாச்சாரமும் காப் பாற்றப்பட வேண்டும்.

2. இந்தியக் கூட்டாட்சிக்குள் எங்கள் மாநிலத்திற் குரிய அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

3. எங்களுடைய பொருளாதார முன்னேற்றத் திற்கு உத்திரவாதம். அவசியம் இவைகள்தான் அக்கோரிக் கைகள். தனி நாடாகப் பிரிந்தால்தான் இத்தகு பாது காப்புக் கிடைக்குமென முதலில் நினைத்தோம்; ஆனால் சீனப் படையெடுப்பிற்குப் பிறகு இந்தியாவின் ஒரு பகுதி யாகச் செயல்படுவதன் அவசியத்தை உணர்ந்து கொண் டோம். இன்று இந்தி ஆதிக்கம் பற்றியதே எமது கவலை யெல்லாம். இந்தி மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது எமக்கு எரிச்சலூட்டுகிறது! எங்களுடைய கலாச்சாரத்தின் அடித்தளத்தையே அது தாக்குவதாக நாங்கள் கருதுகிறோம் காலப் போக்கில் அனைத்திந்தியா விற்கும் ஒரு பொது தொடர்பு மொழி உருவாக வேண்டும்! அதுவரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும். பதினான்கு தேசிய மொழிகளுக்கும் சமமான மதிப்பு அளிக்க வேண்டும்.

(யோசனை நிருபர்களுக்கு 67. ஏப். 20).

# திருவொற்றியூர் குடியிருப்புக் காலனி திறப்பு விழாவில்

ஐம்பதுக்கு மேலான அழகான இல்லங்களைத் தொழிலாளர்கட்கு திறந்து வைக்கும் வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காக, நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று, இத்துணை நல்ல பணிகளில் தனது ஒத்துழைப்பைத் தந்து தீவிர பணிபுரிந்து வரும் டி. எஸ். இராமானுசம் அவர்களுக்கும் எனது மகிழ்ச்சியையும், பாராட்டினையும் உரித்தாக்குகிறேன். தொழிலாளர்களின் நலன் கருதியே, இது போன்ற காலனிகள் அமைத்துத் தருகிறார்கள் தொழிலதிபர்கள்.

இது போன்ற காலனிகளுக்கு அரசும் தன்னாலான உதவிகளைச் செய்து வருகிறது; அப்படிப்பட்ட உதவி இந்த டி. எஸ். ஆர். நகருக்கு கிடைக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன். தருகின்ற உள்ளங்கள்தான் மீண்டும் மீண்டும் தந்து கொண்டே இருக்கும். அதனால் தான் இப்படிப்பட்ட வசதிகளைச் செய்துள்ள இந்த நிறுவனத்தின் நிர்வாக உரிமையாளரையே, மீண்டும் மீண்டும் தொழிலாளரது வேண்டுகோளான, திருமணக் கூடத்திற்கான செலவையும் ஏற்று அதனை முடித்துத் தரும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். தொழிலாளர் நலனில் இத்துணை அக்கறை காட்டும் அவர். நிச்சயம் அதையும் முடித்துத் தருவார் என்று நம்புகிறேன். இந்த காலனிக்கு அரசினர் உதவி எந்த அளவுக்குக் கிட்டும் என்பதை அதிகாரிகளைக் கலந்து கூறுகிறேன். 'அரசு உதவும்' என்று சொன்னேன். மத்திய அரசு எந்த

அளவிற்கு நமது மாநில அரசிற்கு உதவ முன் வருகிறது என்பதைப் பொறுத்துத்தான் சொல்ல முடியும். எனவே, இவ்விழாவில் கலந்து கொண்ட நண்பர் கே. குருமூர்த்தி தாம் சார்ந்துள்ள காங்கிரசுக்காரர்களிடம் கூறி, மத்திய அரசின் உதவி கூடுதலாகக் கிடைத்திட அவரால் ஆன வழி வகைகளைச் செய்யலாம். இன்றையத்தினம் மாநில அரசு மத்தியில் இருந்து கொண்டு, இக்கட்டான நிலையில் ஏதும் செய்ய இயலாமல், சிற்சில சமயங்களில் தவிக்கிறது; மேலே பார்த்தால் மத்திய அரசு; மாநில அரசின் நிர்வாகத்திற்குக் கீழே பார்த்தால் நகரசபை; இரண்டும் இத்தொகுதியைப் பொறுத்த வரையில் காங்கிரசிடம் இருப்பதால், அவர்களும் சற்றுத் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டி ஆவன செய்ய வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். டெல்லியில், மொரார்ஜி தேசாய் 'இவ்வாண்டில் இதுபோன்ற திட்டங்களுக்கு அதிகம் உதவ முடியாது' என்று கூறி விட்டார். 40' × 20' அளவுள்ள வீடு கட்டும் திட்டம் தந்து, உதவிடவும் உறுதியளித்து விட்டு அறைக்கு இரண்டு சுவர்களின் வேலை முடிந்த பிறகு, உறுதியளித்த தொகை வராததால், மீதி இரண்டு சுவர்களையும் வைக்க முடியாமல், உறுதியளித்தவரைக் கண்டு கேட்கின்றபோது, மீதி இரண்டு சுவர்களையும் 10' × 15' அளவுள்ளதாக அமைத்துக் கொள்ளுங்கள்; இல்லையாயின் அந்தத் திட்டத்தையே, அந்தப் பணியினையே நிறுத்தி விடுங்கள்! என்று கூறினால், அது எத்தனை சிக்கல்கள் நிறைந்ததாய் முடியுமோ, அத் திட்டத்தால் எத்தனை கட்ட நட்டங்கள் ஏற்படுமோ, அதுபோல்தான் இன்றைய திட்டங்களும், மொரார்ஜியின் நிதியுதவியும் உறுதிமொழியும் இருந்து வருகிறது. இப்படித் திட்டங்களில் சிக்கல்களை உண்டாக்கக் கூடாது. பாதியில் நிறுத்திக்கொள் என்பது, நல்ல சனநாயகமாகாது, நல்ல பண்பா

டாகாது. அது அவர்களின் நல்ல சுபாவத்தைக் காட்டாது. அது முறையுமல்ல, சரியுமல்ல. இந்த காலனிகூட திட்டம் தீட்டிய அன்றே நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசினர், சீனுவின் எதிர்ப்பைக் காரணங் காட்டாது நிதியுதவி செய்திருந்தால், இன்று ரூபாய் எண் ணாயிரம் ஆகக்கூடிய வீட்டின் மதிப்பு ரூபாய் நாலாயிரத் துக்குள் முடிந்திருக்கும். கட்டிடம் கட்டுவதற்கு மட்டு மல்ல இந்த விதி, வீட்டில் பெற்றோர்கள் தங்களது மகன் களுக்கு பதினெட்டு இருபது வயதிற்குள் திருமணம் செய்து விடுவதுதான் சுலபமான வழி. அதை விடுத்து முப்பத்தைந்து நாற்பது வயதில் பெண் தேடினால். நல்ல தரமுள்ள பெண் வயதான மாப்பிள்ளைக்குக் கிடைக்குமா? அது போலத்தான், எதையும் காலத்தில் திட்டமிட்ட உடனேயே திட்டத்தை முடித்திடப் பாடுபட வேண்டும். இல்லையாயின் இப்படித்தான் கட்டங்களும் நட்டங்களும் ஏற்படும். எனவே, இத்தொழிற்சாலை அதிபர் மித்ரா அவர்களுடனும், தொழிற் சங்கத் தலைவர் டி. எஸ். இராமானுசம் அவர்களுடனும் கலந்து "யார் யாரிட மிருந்து எவ்வளவு பெற முடியும்" என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, கட்டிடக்கலை நிபுணர்களை அழைத்து கலந்து பேசி, எவ்வளவு மலிவாக இந்தக் கட்டிடங்களை நேர்த்தியாக, உறுதியாகக் கட்டித்தர முடியும் என்பதனை யும் தெரிந்து கொண்டு, பிறகு தமிழக அரசின் உதவியை நாடினால், நிச்சயம் இன்றையத் தமிழக அரசு தொழிலாளி களின் குடியிருப்புக்கு நிதியுதவிட, ஒத்துழைத்திட பின் வாங்காது என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன். இப்படிப்பட்ட குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப் பதால் தொழிலாளர்களுக்கு சுறுசுறுப்பும் உற்சாகமும் ஊக்கமும் தொழிலின்பால் உண்டாகிறது. அதனுல் உற் பத்தி பெருகுகிறது உற்பத்திப் பெருக்கத்தினுல், முத

லாளி உட்பட தொழிலாளர்களும் மேலும் நன்மை பெற வழி ஏற்படுகிறது. ஒரு முதலாளி ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்து வாங்கிய இயந்திரம் திடீர் என்று கெட்டு விட்டதாகக் கூறினாலும், அல்லது உள்ளபடியே பல் சக்கரத்தில் உள்ள ஒரு பல் உடைபட்டு ஒருவிதமான சத்தம் வருவதைக் கண்டாலும் எப்படி பதைபதைத்துப்போய், நடு நடுங்கிப்போய் அந்த இயந்திரத்தை உடனே பழுது பார்த்துச் சரி செய்து வைடபாரோ, அதே போன்று, தொழிலாளர்களில் யாராவது ஒருவர் எப்போதாவது சோர்வுற்றிருந்தாலோ, அல்லது கவலை கொண்டிருந்தாலோ, உடல் நோய்வாய்ப்பட்டு இருந்தாலோ, வாழ்க்கைத்தரம் குறைந்து கொடுமைக்கு ஆளாகி இருந்தாலோ முதலாளிகளாக இருப்பவர்கள், உடனே அத்தொழிலாளியின் குறையைப் போக்கிட முன்வருதல் வேண்டும்; துயர் களைதல் வேண்டும் அதுபோன்று தொழிலாளர்களும் நன்கு உற்பத்தியைப் பெருக்க வெண்டும். இந்த நேச மனப்பான்மை இருவரிடையேயும் வளர வேண்டும். அப்போதுதான் நாடு நலம் பெறும், நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள். ஒவ்வொரு நிறுவனத்தின் முதலாளியும், தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். 'இம்பீரியல் டுபாக்கோ' கம்பெனியில் திறமைசாலிகளைத் தொழிலாளர்களாக வைத்துக் கொண்டுள்ளனர், அவர்களது உழைப்பை மதிக்கின்ற வகையிலே வீடு கட்டித் தந்துள்ளார்கள்; இதுபோன்று குடியிருப்பு அமைத்துத் தந்து ஒவ்வொரு முதலாளியும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் மிகுந்த உடல் நலமில்லாமல் இருந்தும், திரு டி. எஸ். இராமானுசம் அவர்கள், தொழிலாளர்களுக்கு அன்றுபோல் இன்றும் தன் பங்கைச் செலுத்திப் பெரிதும் உதவி யிருக்கிறார் அவர் நீண்ட நாள் வாழ்ந்து மேலும் தொழிலாளர்களுக்கு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்

எனக் கேட்டுக் கொள்கிறேன். அவரது பெயராலேயே இந்தக் காலனி 'டி. எஸ். ஆர் நகர்' என்று வழங்கப் படுகிறது. எனவே, இப் புதுமனைகள் தோறும் என்றென்றும் இன்பம் நிலவிட, மகிழ்ச்சி பொங்கிட, தோழமை உணர்வுடன் அனைவரும் வருவீராக என வாழ்த்தி விடை பெறுகிறேன். (67-ஏப்-14)

# பங்கீட்டுக் கடை வியாபாரிகளிடையே

பொதுவான வியாபாரிகளுக்கும், பங்கீட்டுக் கடை வியாபாரிகளுக்கும் வேறுபாடு உண்டு. பஞ்சத்தினாலேயே பங்கீட்டு முறை இருக்கிறது பங்கீட்டு முறை இருப்பதால் தான் பங்கீட்டுக் கடை வியாபாரிகள் இருக்கிறார்கள். அதில் தங்களுக்குள்ள குறையை எடுத்துச் சொல்கிறார்கள். பங்கீட்டு முறை என்பது எப்பொழுதும் இருக்க வேண்டிய ஒன்றல்ல. உணவுக் கட்டுப்பாடு என்பது இந்தச் சர்க்காரின் நிரந்தரமான கொள்கையுமல்ல. பஞ்சத்தால் ஏற்பட்ட பங்கீட்டு முறைகள் நீங்கினால் பங்கீட்டு வியாபாரிகளின் குறைகளும் நீங்கும். முன்பு இருந்த அரசாங்கம் பங்கீட்டு வியாபாரிகளுக்கான இலாபத்தை ஆறேகால் சதவீதமாக உயர்த்த ஒப்புக் கொண்டது என்று கூறினீர்கள். முன்பு இருந்த அரசாங்கம் அப்படி உறுதி மொழி தந்திருந்தால், அது அரசாங்கப் பதிவேடுகளில் உள்ளனவா என்று பார்க்கிறேன். உணவு இலாகாவில் அப்படி அவர்கள் அதை நிறைவேற்றுவதாகக் கூறியிருந்தால், ஆறேகால் சதவிகிதம் இலாபம் தருவதை எப்படிச் சரி கட்டுவது என்றும் எழுதி வைத்திருப்பார்கள். இரண்டும் இருந்தால் நிச்சயமாக நான் பரிசீலிப்பேன். தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இங்கே கூப்பிட்டுவந்து எனக்கு கழுத்தி லிருந்து கணுக்கால்வரை மாலை போட்டதால் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்றுசொல்லித்தட்பித்துக்கொள்ளச்சொல்ல வில்லை. உங்கள் கோரிக்கைகளை நான் நிச்சயமாகப் பரிசீலிப்பேன். இங்கே பேசிய எனது நண்பர் எ. வி. பி ஆசைத்தம்பி 'பதிமூன்றாயிரம் அரிசி மில்கள் தமிழகத்தில்

உள்ளன; அவைகளை அரசாங்கத்தின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்' என்றார். 'அப்படிச் செய்தால் உணவு விநியோகத்தில் ஏற்படும் சீர்கேடு பற்றாக் குறையை ஏற்படுத்தும் ஒழுங்கீனங்கள் அகற்றப்படும்' என்று தெரிவித்தார். நீங்கள் உங்கள் கோரிக்கைகளை உங்கள் சங்கத்தின் மூலம் இங்கே எடுத்துரைத்ததுபோல், அரிசிமில் உரிமையாளர்களும் தங்கள் சங்கத்தின் மூலம் கோரிக்கைகளை எடுத்துரைக்கிறார்கள். ஓட்டல் உரிமையாளர்கள் ஜவுளிக் கடைக்காரர்கள், உற்பத்தியாளர்கள் முதலிய அனைவரும் தங்கள் தங்கள் சங்கங்கள் மூலம் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துரைக்கின்றார்கள். 'ஆறேகால் சதவிகிதம் இலாபம் வேண்டும்' என்று பங்கீட்டுக் கடைக்காரர்களாகிய நீங்கள் கேட்கின்றீர்கள். அரிசி ஆலை சங்கத்தினர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப் பட்ட அரவைக் கூலிதான் எங்களுக்குத் தரப்படுகிறது கூலியை உயர்த்துங்கள் என்று கேட்கின்றார்கள். உற்பத்தியாளர்கள் உணவு தானியங்களின் கொள்முதல் விலையை உயர்த்துங்கள் என்கிறார்கள். இப்படி ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் கோரிக்கைகளை, சங்கங்கள் மூலம் எடுத்துரைக்கிறார்கள். ஆனால் வாங்கிச் சாப்பிடும் ஏழை மக்கள் இருக்கிறார்களே அவர்களுக்குச் சங்கங்கள் இல்லை! வயிறார உணவு கிடைக்காதா? விலைகள் குறையாதா? என்ற ஏக்கப் பெருமூச்சுடன் அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். ஏழை எளிய மக்களை, சர்க்காருடன் சேர்ந்து வியாபாரிகள் வாழ வைக்க வேண்டும்! ஏழை மக்களை மன நிறைவுடன் வாழ வைப்பதுதான் இந்தச் சர்க்காரின் முதல் திட்டம். பங்கீட்டுக் கடைக்காரர்களுக்கு குறை நிரந்தரமானதல்ல. ஒரு காலத்தில், ஒரு மூட்டை அரிசி விற்றால் 'கோணி மட்டும் இலாபமாகக் கிடைத்தால் போதும்' என்று கருதியவர்களும் உண்டு. ஆனால் இப்போது வியாபாரி

களுக்கு ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வியாபாரிகள், இழப்பிலேயே வியாபாரம் நடத்த வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு நான் கொடுமைக்காரன் அல்லன். வியாபாரிகள் இலாபம் கவனிக்க வேண்டிய பிரச்சினைதான். ஆனால், நாட்டு மக்களின் நிலை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். நீங்கள் விற்கும் பொருள்கள் ஏழை மக்களின் கைகளுக்கு எட்டக் கூடிய தாக இருந்தால்தான் வியாபாரம் நடக்கும். ஆகையினால் வாங்குவோருடைய நிலை உயர வேண்டும். ஆப்ரிக்காவில் ஏராளமாகத் தங்கம் கிடைக்கிறது. ஆனால் ஆப்ரிக்க மக்கள் தங்கம் விளையும் நிலங்களை வெள்ளைக்காரர்களுக்கு குறைந்த விலையில் விற்றார்கள். பூமிக்கு அடியில் உள்ள தங்கத்தை வெள்ளைக்காரர்கள்தான் எடுத்துக் கொள்கிறார் கள். தங்கம் விளையும் நிலத்தை வைத்துக் கொண்டு இருந்த ஆப்ரிக்க மக்கள், அதன் மீது தரித்திரர்களாக உலவி வந்தார்கள். அப்படிப்பட்ட தரித்திர நிலையில் நமது மக்கள் இருக்கிறார்கள். மக்களுடைய பொருளாதார நிலையில் சுபீட்சமான சூழ்நிலை ஏற்பட்டால் வியாபாரிகள் முன்னேற முடியும். மக்கள் நன்றாக இருந்தால்தான் வியாபாரிகள் முன்னேற முடியும். ஆகவே வியாபாரிகள் மார்க்கட் நல்லதாக அமைய ஏழைகள் நல்வாழ்வு பெற வியாபாரிகள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

(67 - ஏப். 19)

# ஏற்றுமதி இறக்குமதி வணிகர்களிடையே

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதின் எதிரொலியாக வெளிநாடுகளுக்குச் செய்யும் ஏற்றுமதியும் குறைந்துவிட்டது. ரூபாய் மதிப்பு குறைப்பின் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், அதன் மூலம் ஏற்றுமதியை அதிகப்படுத்த முடியும் என்று நம்பிக் கொண்டிருந்தார்கள்; மாருக இதனுல் ஏற்றுமதி குறைந்தது. இதை அரசியலுக்காக கூறுவதாக யாரும் நினைக்கத் தேவையில்லை; ஏற்பட்ட நிலைமையினைத்தான் எடுத்துச் சொல்கிறேன். நமது நண்பர்கள்மூவரும் நிறைய நல்ல முறையில் நமது நாட்டில் தயாரித்த பொருள்களை பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இருந்தாலும், நமது ஏற்றுமதியாளர்கள் இன்னும் ஏற்றுமதியை விரிவு படுத்த முயற்சிகள் எடுக்கவேண்டும், அதற்கான ஆக்கப் பணிகளில் ஊக்கம் காட்ட வேண்டும். ஆசிய நாடுகளில், வணிகர்கள் யாவரும் ஒன்று கூடி 'ஆசியப் பொதுச் சந்தை' அமைத்து, ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தை, நாட்டின் வளத்தைப் பெருக்கிட வேண்டும், முன்னேற்ற மடையச் செய்திட வேண்டும்! ஏற்றுமதியைப் பெருக்கிட அயல் நாடுகளில் நாம், நமது உற்பத்திப் பொருள்களைப் பற்றி சிறந்த முறையில் பல வழிகளில் நிறைய விளம்பரம் செய்துவர வேண்டும்; அப்போதுதான் நம் நாட்டு ஏற்றுமதிப் பொருள்களுக்கு அயல் நாடுகளில் நல்ல மதிப்பிருக்கும், நல்ல விலைபோகும். நிறையத் தேவையும் ஏற்படும். வெளிநாட்டவர், நமது ஏற்றுமதிப்

பொருள்களுக்கு நல்ல விளம்பரம் இல்லை என்று குறைபட்டுக் கொள்கின்றனர். நாம் நமது பொருள்களின் ஏற்றுமதிகளை விரிவு படுத்த நினைக்கும் இதே நேரத்தில் நாம் நமது இறக்குமதிகளையும் குறைத்திட எல்லா வழிகளையும் கையாள வேண்டும்; அதற்கான முயற்சிகளை, இத்துறையில் ஈடுபட்டவர்கள் கையாள வேண்டும். நாம் நமது ஏற்றுமதியைப் பெருக்கிட மூலகாரணமாயுள்ள தொழிலாளர்களின் ஊதியத்தைக் காலத்திற் கேற்றாற்போல உயர்த்தித் தந்து, அவர்களையும் ஆதரிக்கவேண்டும். பட்டு மற்றும் கைத்தறித் துணிகளை எந்த அளவிற்கு அதிகம் ஏற்றுமதி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப் பாடுபட வேண்டும். இறக்குமதிகள் அடியோடு குறைத்திட்ட ஒரு நாடுதான் உண்மையில் வளர்ச்சியடைந்த நாடாக இருக்க முடியும். படிப்படியாக நாம் இறக்குமதிகளைக் குறைத்துக் கொண்டே வந்திருக்கிறோம். உரங்கள், மருந்துப் பொருள்கள், இயந்திரங்கள் முதலியன தவிர மற்ற இறக்குமதிகளும் குறைக்கப்பட்டு வருகின்றன, ஏற்றுமதியை அதிகப்படுத்த வெளிநாட்டில் அதிக அளவுக்கு நமது பொருளுக்கு விளம்பரங்கள் செய்ய வேண்டும்; மத்திய அரசு விளம்பரத் துறை இதைக் கவனிக்க வேண்டும். ஏற்றுமதியை அதிக அளவில் செய்து வெற்றி பெற்றவர்கள் மீண்டும் அடுத்த ஆண்டும் பரிசுகளைப் பெறவேண்டும்; அதே போல மற்றவர்களும் பரிசுகளைப் பெற முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

(67-ஏப்-19)

# நீதிக் கட்சி வரவேற்பில்

இந்த விழாவிற்கு வந்திருப்பவர்களில் என் பழைய நண்பர்களையும் எனது நல்வாழ்வையும் முற்றேற்றத்தையும் விரும்பியவர்களையும் பார்க்கிறேன். 'இங்கே தரப்படும் வரவேற்பு அரசியல் நோக்கம் கொண்டதல்ல' என்று பி. டி. இராசன் தெரிவித்தார்; ஆனால் ஆன்ற அறிவாளரான பி. டி இராசன் அவர்கள் கலந்து கொண்ட எந்த நிகழ்ச்சியும் பெருமைக்கு உரிய நிகழ்ச்சியாகவே அமையும். அறிவுரை வழங்க வேண்டிய பி. டி. இராசன் அவர்கள் அறிவுரையைத் தனிமையில் தெரிவிக்கலாம் என்று எண்ணி, வாழ்த்துதலை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பி. டி. இராசன் அவர்களைப் போன்ற அறிவாளர்கள் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டியவர்கள் ஆவார்கள். நீதிக்கட்சி ஆட்சியிலிருந்தபோது ஆற்றியுள்ள பொதுப் பணிகளுக்கும் இப்போதைய பொது வாழ்வுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. அந்தக் காலத்தில் அரசியல் தலைவர்களின் விருப்பங்களை அறிந்து மக்கள் நடந்தார்கள்; ஆனால், இந்தக் காலத்தில், யார் அரசாங்கம் அமைத்தாலும் மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. நீதிக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது பி. டி. இராசன் போன்ற ஆற்றலாளர்களால் மிகுந்த திறத்துடன் நிர்வாகத்தை நடத்தினார்கள்; அந்த உயர்தரமான நிர்வாகத்தின் திறன் தொடர்ந்து செயல்பட பி. டி. இராசன் போன்றோர் எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அன்றைய தினம் நீதிக் கட்சிக்கு இரண்டு மகத்தான பொறுப்புக்கள் இருந்தன. மக்களின் விருப்

யத்தை ஈடேற்றும் வகையில் செயல்பட வேண்டிய பொறுப்பு ஒன்று; இன்னொன்று. ஆங்கிலேயரின் அதிகாரத்துடன் மோதிக் கொள்ளாமல், பெறவேண்டியவைகளைப் பெறுவது, என்பது. அதாவது, நீதி கட்சியின் தத்துவம் ஆங்கிலேயரிடம் மோதல் ஏற்படுத்திக் கொள்ளாமல், பெறவேண்டிய பயன்களைப் பெறுவது என்பதாகும். முன்பெல்லாம் காங்கிரசு கட்சியின் அமைச்சர்களிடம், மத்திய அரசுடன் போரிட்டு உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்ன பொழுது மத்திய அரசிடம் மோதலை ஏற்படுத்திக் கொண்டு பெறும் பயன்களை விட அவர்களுடன் இணைந்து நின்று பெறும் பயன்தான் அதிகமாகும் என்றார்கள்.

காங்கிரசு ஆட்சி மத்திய அரசிடம் கொண்டிருந்த அதே தத்துவத்தைத்தான், முன்பு நீதிக்கட்சி கொண்டிருந்தது. அப்பொழுது, அந்தக் காலத்திலிருந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் கட்சியாக நீதிக் கட்சி இருந்தது, அந்தத் தத்துவம் இப்போது அரசியலில் பொருந்தாமல் இருக்கலாம். நீதிக் கட்சியை தான் வைத்துக் கொண்டிருப்பதாக பி. டி. இராசன் சொல்லலாம். எல்லா கட்சிகளும் 'நீதிக் கட்சி எங்களுடையது' என்று சொல்வதற்கு இடமிருக்கிறது. சேலம் மாநாட்டில்தான் நீதிக்கட்சி 'திராவிடர் கழக'மாக மாற்றப்பட்டது; ஆகவே 'அது எங்களுக்குச் சொந்தம்' என்று நாங்களும் சொல்லலாம். காங்கிரசு கட்சியினரும் 'நீதிக் கட்சியில் பெருந்தூண்களாக இருந்தவர்கள் எங்கள் பக்கத்திலேதான் இருக்கிறார்கள்' என்று கூறி உரிமை பாராட்டலாம். இப்படி இப்படி எல்லாக் கட்சியினரும் நீதிக் கட்சியினிடம் உரிமை பாராட்டுவது கண்டு பி. டி. இராசன் போன்றவர்கள், மிகுந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் ஆளாகலாம். என்னைப் பொறுத்தவரையில், மூன்று வகையில் ஆற்றலையும்

பலனையும் பெறுகிறேன். நீதிக் கட்சியிடம் எனக்குத் தொடர்பு இருந்ததால் அந்தக் கட்சிக்குரிய ஆற்றலான பெருந்தன்மைப் போக்கினைப் பெற்றுக்கொள்வேன். சுய மரியாதை இயக்கத்தில் எனக்குத் தொடர்பு இருந்ததால், தன்மான உணர்வை வேண்டும் போது நான் பெற்றுக் கொள்வேன். காங்கிரசுக் கட்சியின் பெருந்தலைவர்களிடம் தோழமை இருப்பதால் அரசியல் சிக்கல்களில் அவர்கள் கையாளும் இராச தந்திரத்தை நான் மேற்கொள்வேன். ஆகையால், மூன்று வேறுபட்ட உணர்ச்சியின் பிரதிநிதி யாக நான் செயல்படுவேன்.

தமிழகத்தின் புதிய அரசு, 'முன்னேற்றத்தைக் கருதிப் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யும்; சமூகத்தின் கட்டுக் கோப்பைக் குலைக்கும்' என்று சிலர் அச்சம் தெரி வித்தார்கள். தமிழக அரசு படிப்படியான மாறுதல்களை யும் வளர்ச்சிகளையுமே விரும்புகிறது; அது நிலைத்து நிற் கும். புதிய அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் கடமை அனுபவமிக்கவர்களாக, ஆற்றலாளர் களாக விளங்கும் உங்கள் அனைவருக்கும் உண்டு. தேவை யான பொழுது நாங்கள் அதைப் பெறுவோம். நெருக்கடி யான பிரச்சினைகள் இருப்பதை பி. டி. இராசன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள், உங்கள் அனைவரது நல்லெண்ண மும், ஒத்துழைப்பும் உறுதுணையாக அமைந்திருப்பதால், எல்லாப் பிரச்சினைகளிலும் நல்ல தீர்வுகாண உளமாரப் பாடுபடுவோம். முன்பு காலண்டரையும் கடிகாரத்தையும் கவனித்துக் கொண்டு பணியாற்றியதில்லை; அவர்கள்மீது அக்கறை செலுத்தியது இல்லை; ஆனால் இப்பொழுது நிலைமை முழுவதுமாக மாறிவிட்டது! ஆனால், காலண் டரும் கடிகாரமும் தான் என்னை ஆட்டிப் படைக்கும் முதலாளிகளாக இன்று மாறிவிட்டன! இந்த நேரத்தில் இறுதியாக உங்களிடம் ஒன்றை விவிலிய நூலிலிருந்து

எடுத்துரைக்க விரும்புகிறேன். 'எப்பாடு பட்டேனும் என்ன நிகழ்ந்தாலும், எங்கள் மீது சுமத்தப்பட்ட சிலு வையை (பொறுப்புகளை) எடுத்துச் செல்ல வேண்டிய இடத்துக்கு எடுத்துச் செல்வோம்!' மக்களை அழைத்துச் செல்ல வேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்வோம்.

# சென்னை கைத்தறி வார விழாவில்

கைத்தறி நெசவுத் தொழில் மிகுந்துள்ள காஞ்சி நகரத்தைச் சேர்ந்தவன் நான். காஞ்சி நகரம் ஒருபக்கம் நெசவாளர்கள் வசிக்கும் பேட்டைகளும், தொழில் நிறைந்த பாளையங்களும், ஒரு புறம் கைத்தறித் துணிகள் விற்பனை யாகக் கடைவீதிகளும், இன்னொருபுறம் கைத்தறி நெசவை நம்பி வாழ்வோருமாக இருக்கும் நகரம்; ஆகவே நெசவாளர் களின் நிலைமைகளை நான் நேரிடையாகவே அறிவேன். கைத்தறியாளர்கள் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதி கரித்து வருகின்றனவே தவிர தீரவில்லை; இதற்கான பரி காரத்தைக் காணவேண்டும், நெசவுத் தொழிலில் முக்கிய மானது நூல்; அந்த நூல் எப்பொழுதும் சிக்கலாகக் கூடியது. அது போல் நெசவாளர்களின் வாழ்க்கையும் சிக்கலாக அமைந்திருக்கிறது. நூலின் சிக்கலைப் பக்குவ மாக எடுப்பது போல், நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்களையும் பக்குவமாக நீக்கவேண்டும். கைத்தறி நெசவுத் தொழிலின் நேர்த்தி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உலக மக்கள் அனைவரும் பாராட் டத் தகுந்த அளவில் கைத்தறித் துணியின் நேர்த்தியும் வளர்ந்து வருகின்றது. கைத்தறித் துணிகள் விற்பனையா காததற்குக் காரணம், நெசவாளர்கள் மக்களின் விருப் பத்தை நன்கு உணர்ந்து. காலத்துக்கு ஏற்ப துணிகள் உற் பத்தி செய்யாததனால்தான் 'காலத்துக்கு ஏற்ப நெசவாளர் கள் துணிகளைத் தயாரிக்க வேண்டும் என்று சிலர் சொல் கிறார்கள். அப்படிச் சொல்பவர்கள் இப்படிப்பட்ட விழாக் காலங்களில் இந்தப் பக்கம் வருபவர்கள்தான்! கைத்தறி நெசவாளர்கள் அவ்வப்போது மக்களின் மனநிலை

யையும் விருப்பத்தையும் உணர்ந்து ஆடைகளைத் தயாரிக்கிறார்கள். நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளிபொங்கச் செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை என்பதை இந்தச் சர்க்கார் மறக்கவில்லை! புதிய சர்க்கார், கைத்தறி நெசவாளர்களின் சங்கடங்களை நன்கு உணரும்! வெளியில் இருக்கும் பொழுதே கைத்தறித் தொழிலை ஆதரித்த நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு ஆதரவு காட்டாமல் இருப்போமா? இந்த சர்க்காரால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உதவும். கைத்தறித் தொழிலில் ஏற்பட்டிருக்கும் இடர்பாடுகளுக்கு நான்கு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன :—

ஒன்று நூல் விலை ஏற்றம். இரண்டு, சாய வகைகள் அந்நிய நாடுகளில் இருந்து கிடைக்க வேண்டும்; வேறு இடங்களில் இருந்து கிடைக்கும் சாயமும் விலை ஏறியுள்ளது. மூன்று, கைத்தறி நெசவில் ஈடுபட்டிருப்பவர்களுடன் பாங்கிகள் நல்ல முறையில் ஒத்துழைப்பதில்லை. நான்காவதாக எங்தெந்த நாடுகள் நம்முடைய கைத்தறித் துணியை இறக்குமதி செய்தனவோ அவைகள் கதவைத் தாழிட்டுக் கொண்டன. இவைகளால்தான் கைத்தறித் தொழிலில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு காலத்தில் கைத்தறித் துணிகளை ரோமாபுரி மக்கள் விரும்பினர்; ஆனால், இன்று கைத்தறித் துணிகளுக்கு பத்து காசு பதினைந்து காசு தள்ளுபடி கொடுத்து சந்தை தேடவேண்டியிருக்கிறது! உலகில் முன்பு நமது கைத்தறித் துணிக்குக் கிராக்கியும் சந்தையுமிருந்த இடங்களில், இப்பொழுது கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு இல்லை! உலகமெங்கும் நம்முடைய நாட்டின் தூதரகங்கள் இருக்கின்றன; வணிக அமைப்புகள் உள்ளன; இவைகளுக்கு ஆக நாம் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறோம். அந்தத்

தூதுவரகங்களில் பணியாற்றுவோர் வணிகத் தொடர்புக் காக இருக்கும் அதிகாரிகள், நம்முடைய கைத்தறித் துணி களுக்குச் சந்தை தேடித்தர வேண்டும். நான் வெளிநாடு களுக்குச் சென்றபொழுது, தூதுவரகங்களில் பணியாற்றி யவர்கள் கைத்தறி ஆடைகளை அணிந்திருக்கிறார்களா என்று கூர்ந்து கவனித்தேன்; அவர்கள் வெளிநாட்டு ஆடைகளையே அணிந்திருந்தார்கள்; சிலர் 'தேசிய உடை' என்ற கதராடை அணிந்திருந்தனர்; ஆனால் யாரும் கைத் தறி ஆடைகள் அணியவில்லை! வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களும், வாணிக அதிகாரிகளும், கைத்தறி ஆடை களின் நேர்த்தியை எடுத்துக் காட்டும் அளவில் கைத்தறித் துணிகளை அணியவேண்டும். வெளிநாடுகளில் நல்ல முறை யில் கைத்தறித் துணிகளுக்கு விளம்பரம் செய்ய வேண் டும். இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும். கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை கிடைக் கும். 'நம்முடைய' மத்திய சர்க்கார், ஒத்துழைக்க வேண் டும். இதனை சொல்லும்பொழுதே 'நம்முடைய' மத்திய சர்க்கார் என்று சொந்தம் பாராட்டிச் சொன்னேன். மத் திய சர்க்காருடன் எல்லாப் பிரச்சினைகளிலும் மோதல்களை ஏற்படுத்திக் கொள்வேன் என்று சிலருக்கு ஐயப்பாடு இருப்பதாலேயே அப்படிக் கூறினேன்.

கைத்தறித் துணிகள் இந்த அளவுக்கு நம் நாட்டில் விற் கப்படுகின்றன என்றால், அதற்குக் காரணம், நம்முடைய தாய்மார்கள்தான். தாய்மார்கள் இன்னும் கைத்தறித் துணி களை மறந்துவிடவில்லை. வழி வழியாக இருந்து வரும் பண்பு டன்கைத்தறித் துணிகளை ஆதரித்து வருகின்றனர். ஆடவர் கள் ஆமதாபாத் ஆடைகளிலும், கட்டாவ் துணிகளிலும் கவனம் செலுத்துகின்றனர், நம்முடைய தாய்மார்கள் காஞ்சீபுரத்தையும், கும்பகோணத்தையும், அம்மாபேட்டை

யையும், சேலத்தையும் இன்னும் மறந்துவிடவில்லை. அப்படித் தாய்மார்கள் மறந்து இருப்பார்களானால், தமிழகத்தில் வாழும் நெசவாளர்கள், சென்னை நகரத்தின் சாலைகளிலே குடியிருப்பர். அந்த நிலையை உண்டாக்காமல் கைத்தறித் துணிகளை ஆதரித்து வரும் தாய்மார்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொடர்ந்து கைத்தறித் துணிகளை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தில், மதுவிலக்கு, வழி நடத்திச் செல்லப்படும் தத்துவமாகக் கூறப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அரசியல் சட்டத்தின் மீதுதான் உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்கள், அதற்கு முரணாக நடந்து கொள்வது முறையாகுமா? மத்திய அரசாங்கத்திற்குத் தைரியம் இருக்குமானால், அரசியல் சட்டத்தில் வழிகாட்டும் தத்துவமாக மதுவிலக்கு இருப்பதை நீக்க வேண்டும் அல்லது மதுவிலக்கை நாடு முழுவதும் நல்ல முறையில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த வாரம் டில்லியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்! அக் கூட்டத்தில் எல்லாக் கட்சி தலைவர்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. எனக்கு மட்டும் கைத்தறித் துணி அணிவிக்கப்பட்டது. ‘ஏன் அவருக்குக் கைத்தறித் துணி அணிவித்தீர்கள்?’ என்று கேட்ட பொழுது ‘அண்ணாதுரைக்குக் கைத்தறித் துண்டுதான் பிடிக்கும்’ என்றார்கள். இதிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் எதற்கு ஆதரவு காட்டுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

கைத்தறித் தொழிலுக்கு உதவும் வகையில், கூட்டங்களில், 'மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகளை அணியுங்கள்' என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன பொழுது பலர் கேலி பேசினர்; ஆனால் இன்றைய தினம், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைத்தறித் துண்டை, மாலைக்குப் பதிலாக அணிவிக்கிறார்கள்! இப்படிக் கூட்டங்களில் மாலைக்குப் பதிலாகக் கைத்தறித் துண்டுகளை அணிவிப்பதால், கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்பதால் அல்ல! கைத்தறித் துணிகள் அணியப்படுவதைப் பார்க்கும் பொழுதெல்லாம், 'கைத்தறித் துணிகளுக்கு நாளும் ஆதரவு காட்ட வேண்டும் என்ற உணர்வை மக்களிடம் பரப்பும் என்பதால்தான்!

சைவ முத்தையா முதலியார் என்று போட்டுக் கொண்டிருப்பவர் 'பதார்த்தம் என்ன ?' என்று கேட்டால் 'கோழி குருமா' என்று பதில் சொல்வது? மதுவிலக்கைப்பற்றி அரசியல் சட்டத்திலே எழுதி வைத்துக்கொண்டு, அதற்கு மாறான, அக்கிரமமான முறையிலே மத்திய அரசு நடந்து கொள்ளலாமா ?

அண்டையிலே உள்ள மாநிலங்களும், பிறமாநிலங்களும் மதுவிலக்கைத் தளர்த்தும் பொழுது, இங்கே உள்ளவர்களுக்கு அந்த மோகம் வராதா ? அங்கே எல்லாம் மதுவிலக்கை நீக்குகிறார்கள்; நீங்கள் மட்டும் நீக்கமாட்டேன் என்கிறீர்கள்; நீங்கள் என்ன, 'காந்தியின் வாரிசு'களா என்று தான் கேட்பார்கள். இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் நாங்கள் பொறுப்பு ஏற்ற பிறகு சந்திக்க வேண்டியிருக்கிறது. தமிழகத்தில் மதுவிலக்கை அமுல் நடத்துவதனால் நட்டம்! அண்டைப் பகுதிகளில் விசைத் தறிகள் புகுத்தப்படுவதால் நட்டம்! இவைகளுக்குப் பரிகாரமாக

'காந்தியக் கொள்கைகளை தமிழ் நாடு காப்பாற்றி வருகிறது' என்பதைப் பாராட்ட மத்திய அரசு, தமிழகத்துக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய வேண்டும். மத்திய அரசு அளிக்கும் பண உதவி, இழப்பீடாக, பரிகாரமாக தமிழக அரசுக்கு அளிக்கும் வெகுமதியாக இருக்கட்டும். இந்த உதவியை மத்திய அரசு செய்ய வேண்டுமென்று நாம் வலியுறுத்துவது அறத்தின் அடிப்படையிலேதான்.

# போஜனா இதழுக்கு அளித்த பேட்டியில்

இந்தியத் திட்டக்குழு மாநிலங்களிலும் பணியாற்றலாம். மாநிலத் திட்டங்களுக்கு ஆலோசனை கூறும் விதத்தில் திட்டக்குழு செயல்பட்டால், அதை நான் விரும்பி வரவேற்பேன் மாநிலங்களின் வளர்ச்சிக்குத் திட்டக்குழு பக்கபலமாக நின்று அதிக உதவிகளைச் செய்ய வேண்டும்.

தேசியத் திட்டங்களை வகுப்பதிலும், மாநிலமட்டத் திட்டங்களை உருவாக்குவதிலும் மத்திய அரசின் பொறுப்புணர்ச்சியே தலைமையானது. கட்டுப்பாடுகளுக்கு உட்படாத சுதந்திர உணர்ச்சியோடு மாநில அரசுகள் திட்டங்களை வகுக்கும் புதிய சூழ்நிலை அரும்பவேண்டும். அதற்கேற்ற வகையில் திட்டக் குழுவிலும், மத்திய அரசின் நிர்வாகத்திலும் 'மத்திய அரசு மயமாக்குதல்' எனும் கொள்கை பின்பற்றக் கூடாது. மக்களின் விருப்பங்களைக் கண்டறிந்து, அவற்றின் அடிப்படையில்தான் நாம் திட்டங்களை உருவாக்க வேண்டும். அப்போதுதான் நமது திட்டங்கள் நல்ல பயனை விளைவிக்கும். திட்டங்கள் முதலில் சிற்றூர்களில் வகுக்கப்பட வேண்டும். பிறகு மாநில அரசு, அவைகளைப் பரிசீலிக்க வேண்டும். மாநில அரசுகள், சிற்றூர்களில் தொடங்கப்படும் முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டு ஒத்துழைக்க வேண்டும். திட்டக் குழு ஒரு கூட்டமைப்பைப் போலச் செயல்பட வேண்டும்

ஒரு கால்வாய்த் திட்டத்திற்குக்கூட மத்திய அரசை ஒரு மாநில அரசு எதிர்பார்க்க வேண்டி

யிருக்கிறது. வெறும் திட்டப் பார்வையோடு மட்டுமின்றி மாநில நலத்திற்கான பொதுப் பார்வையோடு மத்திய அரசு நிதி ஒதுக்குவதற்குத் திட்டக் குழு வகை செய்ய வேண்டும். மத்திய மாநில அரசுகளிடையே நிலவும் கருத்து வேறுபாட்டினால் ஏற்படும் மோதல் தவிர்க்க முடியாதது அல்ல; மனம்விட்டு விவாதிப்பதன் மூலம் கருத்து வேறுபாடுகளைப் போக்கிக்கொள்ள முடியும். இந்தியாவிற்கு ஒரு கட்சி ஆட்சி ஏற்றதல்ல. ஒரு கூட்டாட்சியில், அந்தக் கூட்டாட்சியை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின்கீழ் ஒரு கட்சி ஆட்சியே எப்போதும் நடைபெறுமென்று எதிர்பார்க்க முடியாது. இந்தியக் கூட்டாட்சிக்கு உட்பட்ட பல மாநிலங்களைப் பல்வேறு எதிர்கட்சிகள் ஆளும் சூழ்நிலை உருவாகி விட்டது. பல மாநிலங்களில் கூட்டு அமைச்சரவைகள் ஏற்பட்டிருப்பதை இந்திய அரசின் இடைக்காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி என்றே நான் கருதுகிறேன். மத்திய - மாநில அரசுகளின் தொடர்பு ஏற்படுவதற்கு நான் எந்த திட்டத்தையும் கூறவிரும்பவில்லை; ஆனால் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் விவாதிக்கப்பட வேண்டும். பல முதலமைச்சர்கள் கூடி விவாதிப்பதன் மூலம் ஒரு நிறுவனத்தின் ஆற்றலைப் பெறமுடியும். இத்தகைய நேரடித் தொடர்பு வெறும் அமைப்பு முறைகளைவிட மிகவும் சிறப்பானது.

## பண்பாட்டுக் கழகக் கருத்தரங்கில்

மாநில - மத்திய அரசுகளின் தொடர்பு பற்றி இங்கே விவாதிக்கப்பட விருக்கிறது. 'தொடர்பு' என்பதே நீக்கப் படமுடியாதது - இருந்தே தீர வேண்டியது' என்றுதான் பொருள் தரும்; இல்லையென்றால் இருவருடைய தொடர்பு ஒருவருக்கு மட்டும் சொந்தமாக மாறிவிடும். ஆகையால், மாநில - மத்திய அரசுகளின் தொடர்பு பற்றிய சிந்தனை, விரிவாக பரந்து காண தெளிவான கண்ணோட்டத்தைப் பெற வேண்டும்.

**முடிவுரை**

நான் முதலமைச்சர் பொறுப்பிலிருப்பதால் சந்தானம் அவர்கள் கூறிய கருத்துக்களை விமர்சனம் செய்ய முடிய வில்லை. நான் கூறுகிற கருத்து தமிழக அரசாங்கத்தின் கருத்து என்று கருதப்படுகிறது என்பதால்தான் விமர்சிக்க முடியவில்லை. இது போன்ற கழகங்களும், சங்கங்களும் இக்கருத்துரையை விவரமாக விவாதிக்க வேண்டும். தம் முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். சந்தானம் அவர்களுடைய கருத்துக்கள் எனக்கு வசீகரமான கருத்தா கத் தோன்றியது. மாநில அரசுகளின் 'பிரதிநிதிக் குழு' பற்றியதாகும். மாநில சட்டமன்றங்களின் இரு அவை களிலும் உள்ள உறுப்பினர்களைக் கொண்டு மாநிலங் களின் கூட்டாட்சி உரிமைகள் பற்றி அரசுக்கு ஆலோ சனை கூறக்கூடிய அரசியல் சட்ட பரிசீலனை குழுவைப் பற்றி சந்தானம் எடுத்துரைத்தார்; இது கவர்ச்சிகரமான யோசனையாகும். ஒரு மாநில அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க இக்குழு அமைந்தால் பெரிதும் பயன்படும் மாநில அரசாங்கங்

களுக்கு மதிப்பில்லாமல் போனதற்கு மாநில அரசுகள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்னும் கருத்து கசப்பான உண்மையாகும், ஆனால், அதை நான் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறேன். மாநில அரசுகளிடமிருந்து வரி வசூலிப் பதை மத்திய அரசு பிடுங்கிக்கொள்ளும் போக்கு ஒரே அரசி யல் கட்சி எல்லா இடங்களிலும் ஆண்டபோது சரியான தாக இருக்கலாம்; இப்பொழுது பல கட்சிகள் வெவ்வேறு மாநிலங்களில் ஆளுவதால், அக்கருத்து சரியானதாக இருக் காது. சிலர் 'யார் வரி வசூலித்தால் என்ன அந்தப் பணம் இந்தியாவிற்குள்ளேதானே இருக்கிறது?' என்று விசித்திர வாதம் புரிகின்றார்கள். அப்படிப்பட்ட வாதத் திற்கு, முன்பு கைதட்டல் கிடைத்திருக்கலாம்; இன்னும் கொஞ்ச காலத்திற்கு சொல்லிவைத்துத்தான் கைதட்டல் பெற முடியும்; இன்னும் சில ஆண்டுகள் சென்ற பிறகு சொல்லி வைத்தாலும் கைதட்டமாட்டார்கள்; அதன் பின் னும் சில ஆண்டுகள் சென்றால், கைதட்டுபவர்களை சந்தே கிப்பார்கள்! 'திருநெல்வேலியில் களவாடியது திருச்செந் தூரில் இருக்கலாம்; திருச்செந்தூரில் களவாடியது திரு நெல்வேலியில் இருக்கலாம்; களவாடப்பட்ட பொருள்கூட இந்த நாட்டிலேதான் இருக்கிறது! ஆகவே, 'களவாடப் பட்டதும் பற்றி கவலை வேண்டா' என்று எவரும் கூறத் துணிய மாட்டார்கள்!

ஒருவருக்கு உரிய பொருளை எடுத்தாலும் ஒருவருக் குரிய உரிமையை எடுத்துக்கொண்டாலும் திருட்டு திருட்டுதான்.

ஆகையால், உரிமைகளை மதித்து மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டும். ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டுமே தவிர, ஒன்றுக்கப் பட்டுவிடக் கூடாது! கலந்துரையாடியே பிரச்சினைகளுக் குப் பரிகாரம் காணவேண்டும். அடிமை மனப்பான்மை

வந்துவிடக் கூடாது ! 'சொல்பவர் ஒருவர் கேட்பவர் பலர்' என்ற நிலை அமையக் கூடாது ! இந்த முறையில்தான் இனிமேல் இந்திய அரசியல் முறை அமைய வேண்டும்.

மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கூறினால் 'பிரிவினைக் கொள்கையை முன்பு வலியுறுத்திய வன்' என்பதால் 'பழைய கோரிக்கைகளுக்கு இப்படி வடிவம் தந்து பேசுகிறேன்' என்பார்கள். ஆனால் கே. எஸ். சந்தானம் போன்றவர்கள் பேசினால், அப்படிப்பட்ட கருத்து தோன்றுவதற்கு இடமில்லை ! மத்திய மாநில அரசாங்கங்களின் தொடர்பு பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது ! அந்தச் சிந்தனையில்லாவிட்டால், ஆபத்து வந்து சேரும் என்ற அச்சமும் தோன்றியிருக்கிறது.

(67 - ஏப். 24)

# காஞ்சி வழக்கறிஞர்களிடையே

சட்டம் எப்படி இருக்கிறதோ அப்படியே தீர்ப்பு வழங்கப்படுகிறது. வழக்கின் நிலை அறிந்து, தீர்ப்புக் கூறப்படுவதில்லை. சட்டம் எப்படியோ அப்படித்தான் தீர்ப்பு என்று இருப்பது, தீர்ப்புக் கூறும் போது, 'சட்டம் எப்படி இருக்கவேண்டும்' என்பதையும் அறிந்து தீர்ப்பு வழங்க வேண்டும். அதற்குத் தகுந்தவாறு சட்டத்தைத் திருத்த சட்ட வல்லுநர்கள் தக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆட்சி மன்றத்திற்குக் கட்டுப்பட்டதுதான் நீதி மன்றம் என்றாலும், எல்லாருக்கும் - எல்லாவற்றிற்கும் நீதி வழங்கும் தலையான இடம் நீதிமன்றமாகும் என்பதை மறந்துவிடக் கூடாது. அது காஞ்சியிலே உள்ள நீதி மன்றமானாலும், கல்கத்தாவிலே உள்ள நீதிமன்றமானா லும், டில்லியிலே உள்ள தலைமை நீதிமன்றமாயினும் நகரங்களிலே உள்ள தீர்ப்பு மன்றங்களாயினும் அவை அனைத்தும் நீதிமன்றங்கள்; நீதி கூறும் பெருமைபெற்ற உயர் இடங்களாகும். ஆட்சிமன்றம் நிறைவேற்றுகிற சட்டங்களில் தவறு குற்றம் இருந்தால், சட்டத்தைத் திருத்தவும், சட்டத்தின் மேன்மைத் தன்மையை உயர்த்த வும் சட்டத்திற்கான மதிப்பை வலுப்படுத்தவும் சட்ட வல்லுநர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; அது சட்ட வழக்கறிஞர்களின் கடமையும் பொறுப்புமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சியும் குழப்பமும் அதிகம் நிகழாத இங்கிலாந்து நாட்டில் சட்டத் தொடர்பாக ஒரு கிளர்ச்சியும் ஏற்படாது.

அரசன் வரி விதித்தான்; 'வரி போட்டது தவறு' என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. நீதி மன்றன்தித்

தீர்ப்பை அரசன் பொருட்படுத்தவில்லை; 'ஆட்சிமன்றத்தில் இருப்பது நான்தான்' என்று அரசன் கொக்கரித்தான். 'ஆட்சிமன்றத்தில் இருப்பது நீங்கள்தான்; நீதிசொல்ல வேண்டியது நீதிமன்றம் தான்; நீங்கள் சொல்வதுதான் நீதி என்றால் நான் இருப்பதும் ஒன்றுதான் – இல்லாததும் ஒன்றுதான்' என்று தெரிவித்து, தலைமை நீதிபதி பதவி விலகிவிட்டார் அதன் தொடர்பாகப் பெரும் ஆர்ப்பாட்டமே நடைபெற்றது! ஆட்சிமன்றத்தின் முன் அமைந்திருந்த அறமன்றத்தில் இந்த விவகாரம் விசாரிக்கப்பட்டு, 'அரசன் தண்டிக்கப்பட்டான்' என்று ஆங்கில வரலாறு தெரிவிக்கிறது. ஆகவே நீதி மன்றங்கள், அவைகளின் உயர்வு அறிந்து செயல்பட வேண்டும். நீதிபதிகள், விருப்பு வெறுப்புக் காட்டாமல், வழக்கின் நியாயத்தன்மை உணர்ந்து - தீர்ப்பு வழங்க வேண்டும். மக்கள் உள்ளத்தில், சந்தேகத்திற்கு இடமில்லாத நிலை ஏற்படச் செய்ய வேண்டும்.

ஆட்சிமன்றத்தில் அதிகப் பெரும்பான்மை இருப்பதால், அவசர அவசரமாகச் சட்டத்தை நிறைவேற்றுவதும், எதிர்க் கட்சியினர் கூறுவதைக் காதில் போட்டுக் கொள்ளாது அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதும், அதனால் பல விதமான அரசியல் விபத்துக்கள் ஏற்படுவதும், சட்டத்தில் உள்ள ஓட்டைகளைச் சிலர் பயன்படுத்திக் கொள்வதால் ஏற்படுகின்ற தவறுகளை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்களின் தீர்ப்புக் குறிப்புகளில் கோடிட்டுக் காட்டுவதும் சட்டவல்லுநர்களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறது; வழக்கறிஞர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்; ஆகவே, முன்பு இருந்ததைப் போல் அல்லாமல், நாங்கள் சட்டத்திற்கு அதிக மதிப்புக் கொடுப்போம்; நாங்கள் நிறைவேற்றுகின்ற சட்டங்கள் நிறைவேறக் கொஞ்சம் கால

தாமதம் ஏற்படலாமே தவிர, ஓட்டைகளை ஏற்படுத்திக் கொள்ளமாட்டோம். சட்டவல்லுநர்களுடன் கலந்து பேசி - சட்ட ஞானம் தெரிந்தவர்களின் அனுபவத்தைப் பயன்படுத்திச் சட்டத்தை நிறைவேற்றுவோம்; பொது மக்களிடத்தில், சட்டத்திற்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படுத்துவோம் என்று உறுதி தெரிவித்துக் கொள் கிறேன். (67 - ஏப். 23)

# தேசிய வாணிபக் கழகத்தில்

வாணிபக் கழகத்தின் தலைவர் பேசுகையில், தென்னகவாணிபக் கழகம் உருவாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. அவசரமானது; என்றார், உங்கள் கோரிக்கையை தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யும். நான் கூறினால், மத்திய அரசில் நடக்கும் என்று கூறப்பட்டது. உங்களின் உதவியும் உறுதுணையும் இருந்தால்தான் டில்லியில் எனது குரலுக்கு எடுப்பு இருக்கும். மதிப்பிருக்கும். ஆகவே, வாய்ப்புக் கிடைக்கும் போது வாணிபத் தொழில் வளர்ச்சித் தொடர்பாக மத்திய அரசிடம் எடுத்துரைப்பேன். எனது குரலுக்கு ஆதரவாகவும், தென்னகத்தொழில் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான பிரச்சினை எழும்போது பக்கபலமாகவும் இருந்தால், நீங்கள் எதிர்பார்ப்பது போல, டில்லி நமது குரலுக்கு இணங்கிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற பிரச்சினைகளில் ஈடுபடும்போது, 'தேர்தலின் போது வாக்குறுதி கொடுத்துச் சென்றவர்கள், அதை மறக்கச் செய்யதிசை திருப்புகிறார்கள் என்று தெருமுனைகளில் நின்று ஒரு கட்சியினர் எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர். உங்களுக்குத் தெரியும் நாங்கள் எதிர்ப்பிலே வளர்ந்தவர்கள்! 'எதிர்ப்பு' என்னும் தீயில் எதிர் நீச்சல் அடித்து வந்தவர்கள்! ஆகவே, இவர்களின் அச்சுறுத்தலைக் கண்டு ஒரு போதும் அஞ்சமாட்டேன்! தென்னகத் தொழில் வளர்ச்சிக்காக மத்திய அரசிடம் வாதிடுவேன் என்று உறுதியளிக்கின்றேன்! வணிகக் கழகத்தின் தலைவர் 'விற்பனை வரி அதிகம் என்றும், அதைக் குறைக்க வேண்டும்' என்றும் கூறினார்; ஆனால் வரி போடாமல் அரசு இயங்க முடியாது,

என்று தமிழக அரசு மட்டுமல்ல - எல்லா அரசுகளுமே தெரிவித்திருக்கின்றன. தமிழக அரசு, பற்றுக்குறை நிதித் திட்டத்தைச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வரி கூடாது என்று இங்கே கோரப்பட்டது; அதே நேரத்தில், கணக்கில் காட்டப்படாத பணம் நிரம்ப நாட்டில் உள்ளது. என்று அரசினர் சொல்கின்றனர். ஆகவே அரசுத் தரப்பினரும் - வாணிகச் சார்பினரும் இது தொடர்பாகக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இது ஏப்ரல் மாதம்; எந்த அமைச்சரும் கவனமாகப் பேச வேண்டிய காலமிது; ஆகவே வரி தொடர்பாக எந்த உறுதி மொழியும் தர நான் ஆயத்தமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்; என்றாலும், உங்களின் கருத்துக்கள் பரிவோடு, ஆய்வு செய்யப்படும் என்று உறுதியளிக்கிறேன். (67 - ஏப். 23)

சுடான்லி (STANELY) இஃச்டாலின் மருத்துவமனை

# மருத்துவக் கல்லூரி

## புத்தாண்டு விழாவில்

தமிழ்ப் புத்தாண்டு தரும் வாழ்வைப்பற்றி இங்கே பேசினார்கள். முதலில் நாம் 'வாழ்வு' என்பதுபற்றி இலக்கணம் வகுக்கவேண்டும். உள்ளபடியே நடத்துகிறார்களா உண்மையில் நல்வாழ்வு, முழு வாழ்வு வாழ்கிறோமா? புது வாழ்வு கிடைக்குமா? என்பதற்கெல்லாம் வாழ்க்கைக்கு நாம் இலக்கணம் வகுத்த பிறகுதான் விடை கிடைக்கும். நமது நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் வாழ்கின்றனரா என்பதே சந்தேகமாக இருக்கிறது. திடீர் என்று ஒருநாள், இரண்டு நண்பர்கள் சந்திக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நண்பன், "எப்படி இருக்கின்றாய்?" என்று இன்னொருவனைக் கேட்டால், "செம்மையாக இருக்கிறேன், நன்றாக இருக்கிறேன், நல்ல நிலையில் இருக்கிறேன்" என்று பதில் கிடைக்கும், நிச்சயமாக கிடைக்காது; 'ஏதோ இருக்கிறேன்' என்றுதான் பதில் வரும். நம்முடைய நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் 'ஏதோ இருக்கிறேன்' என்று சொல்லுமளவுக்கு வாழ்க்கை நடத்துகிறார்கள். நூற்றுக்கு எண்பது பேர் இப்படி இருக்கிறார்கள்? இறக்காததனால் தானே இருக்கிறார்கள் அவர்கள் இரந்து கொண்டு; ஐயமெடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்! வாழ்வுக்கு நாம் இலக்கணம் வகுத்ததனாலேயே நாம் இப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகத்திலே எந்த நாட்டு மக்களும், அறிவைப் பெறாத காலத்திலேயே வாழ்வுக்கு

இலக்கணம் எது என்பதை உணர்ந்திருந்தார்கள். வாழ்வு மெய்யானதாக அமைந்த வள்ளுவர் அமைத்த அருங் குறள் நம்மிடமிருந்தும், நாம் வாழ்வைப் பெறவில்லை! தமிழர்கள் இப்படி வாழத்தெரியாதவர்களாக இருப்பது திருவள்ளுவருக்கு நாம் ஏற்றவர்களா? என்ற ஐயத் தையே ஊட்டுகிறது. தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டும் வாழ்வித்துக் கொள்ளக்கூடியதல்ல! தமிழன் நல்வாழ்வு வாழவேண்டுமென்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்! தமிழ் இலக்கியங் கள் இதைத்தான் உணர்த்துகின்றன. தமிழ்மீது பற்றுக் கொள்வதே இதை உணர்த்தும். தமிழர்கள் தமிழ்மீது பற்றுக்கொள்வதைப் பார்த்து ஐயப்படுகின்றனர்! சிலர் ஆச்சரியப்படுகின்றனர்! தன் நிழலைப் பார்த்து சிலர் பயப்படுவதுபோலத்தான் இது! தமிழர்களிலே சிலர் அப்படி அச்சப்பட்டாலும், தமிழகத்திலே தமிழ் இந்த ஐயப்பாடுகளைக் கடந்து சென்றுகொண்டிருக் கிறது. உலகையே தன் வீடாக முதன்முதல் நினைத் தவன் தமிழன்தான், அப்படிப்பட்ட தமிழனின் தமிழ் மொழிப் பற்றை குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டுவிட முடியாது. யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் தாய்மொழிப்பற்று குன்றிவிடாது. பொங் கித்தான் வழியும். 'தமிழ்மீது பற்றுக்கொண்டிருப்பது தேசியத்துக்கு ஊறு ஏற்படுத்தும்; ஒருமைப்பாட்டைக் கெடுக்கும்' என்று சிலர் நினைப்பது பொருளற்றது! ஒருமைப்பாட்டை இப்பொழுதுதான் நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்! இங்கிலாந்து நாட்டுப் பள்ளியிலே படிக்கும் மாணவன், நாள்தோறும் இங்கிலாந்து நாட் டின் ஒருமைப்பாட்டின்மீது உறுதிமொழி எடுத்துக் கொள்வது இல்லை! ஆனால் நம் நாட்டிலோ, நாள் தோறும் அல்லது ஆண்டுக்கு ஒருமுறை இந்திய ஒருமைப்

பாட்டின்மீது உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். 'நான் இந்திய ஒருமைப்பாட்டுக்கு கட்டுப்பட்டு நடப்பேன்' என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதே 'நாம் ஒருமைப்பாட்டை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்' என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

திரைப்படக் காட்சியிலே பார்க்கலாம். கணவன் மனைவியாக நடிக்கிறவர்களில் மனைவி காலையிலே எழுந்தவுடன் கணவன் கால்களைத் தொட்டுக் கண்ணிலே ஒற்றிக் கொண்ட பிறகு அவன் தாயைவணங்கி பிறகு தான் காலைக் கடன்களை முடிக்கச்செல்வாள். இப்படிக் காட்டப்படுவது, திரைப்படத்திலே நடிக்கும் கதாநாயகனும் நாயகியும் உண்மையிலேயே கணவன் மனைவி அல்லர்; அப்படி நடிப்பவர்களே! நடிப்பவர்களை நாம் கணவன் மனைவி என்று நம்புவதற்காக அந்தக் காட்சி படத்திலே இடம் பெறுகிறது. அப்படித்தான் இன்றைக்கு, 'ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு' என்று நம்பவைக்கப்படுகிறோம்,

இப்பொழுதுதான் ஒருமைப்பாட்டை நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை, நாம் மறந்துவிடுவதற்கில்லை.

கரும்புத் தோட்டத்திலே இருக்கிற கரும்புகள் அனைத்தையும் கையாலே கசக்கிப் பிழிந்து அந்தச் சாற்றை உள்ளங்கையிலே வைத்துக்கொண்டு சூரிய வெளிச்சத்திலே காட்டினால், கற்கண்டை உண்டாக்கி விடலாம் என்று நினைக்கிறோம். முதலில் எந்தக் கரும்பில் சாறு அதிகம் என்று பார்க்கவேண்டும். உத்தரப்பிரதேசத்துக் கரும்பிலே அதிகச் சாறு இருப்பதாக இதுவரை எண்ணி வந்தோம். அது தவறானது. இந்தியாவிலேயே உத்தரப் பிரதேசத்தில் விளைவதைவிட மராட்டியத்திலே விளையும் கரும்பிலே அதிகச் சாறு இருப்பதாகவும் அடுத்ததாக தமிழகத்திலே விளையும் கரும்பிலே அதிகச் சாறு இருப்ப

தாகவும் சொல்லப்படுகிறது. இப்பொழுது உத்தரப் பிர தேசத்தைக் காட்டிலும் தமிழகத்திலும் மராட்டியத்திலும் அதிகக் கரும்பு விளைகிறது.

எந்தக் கரும்பு அதிகச் சாறு தருமோ அந்தக் கரும்பை எடுத்துத்தான், நீக்கவேண்டியவைகளை நீக்கி சாறெடுத்துக் கற்கண்டாக ஆக்கவேண்டும்: உத்தரப் பிரதேசக் கரும்பை மட்டும் எடுத்துக் கையிலே சாருக வைத்துக்கொண்டு சூரிய வெளிச்சத்தில் காட்டினுல், அது ஆவியாகப் போகுமே தவிர, கற்கண்டு ஆகாது. தமிழகத்தின் பண் பாடும் இருந்தால்தான் இந்திய ஒருமைப்பாடு உருவாகும். நம்முடைய பண்பாடு இல்லாமல் இந்திய ஒருமைப் பாட்டை உருவாக்கினுல் அது கைக்கும் எட்டாது, கருத்துக்கும் ஒட்டாது. தமிழ்ப்பற்றினுல் ஒருமைப்பாடு கெட்டுவிடும் என்பது பொருந்தாக் கூற்ருகும். என்னு டைய அரசியல் வாழ்வில், நான் திராவிட நாடு கோரிக் கையை விட்டபிறகு புது டில்லிக்குச் சென்றிருந்தபொழுது நாடாளு மன்றத்தில் மத்திய பிரதேசத்துக் காங்கிரசுத் தலைவர்களும் பீகாரைச் சேர்ந்த காங்கிரசுத் தலை வர்களும் என் தோள் மீது தங்கள் கைகளைப் போட்டுச் சொன்ஞர்கள். "நல்லதைச் செய்தீர்கள், நல்லதைச் செய்தீர்கள்; 'உங்களை விட்டுப் போகிருேம்' என்று சொன்ன நீங்கள் 'உங்களுடன் இருக்கிருேம்' என்று ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் முடிவுக்கு எங்கள் பாராட்டுகள்" என்று தெரிவித்தார்கள். "எங்கள் கட்சியிலே, திராவிட நாட்டுக் கொள்கையை, 'வேண்டாம்' என்று முடிவு எடுத்தோம். அதன்படி அந்தக்கோரிக்கையை கைவிட்டோம்" என்று சொன்னேன். மத்தியப் பிரதேசத் துக் காங்கிரசுத் தலைவரிடம் கேட்டேன். "நாங்களெல்லாம் உங்களுடன் இருக்க ஒப்புக் கொண்டுவிட்டோம்; இந்தியாவும் பூகோள அமைப்புப்படி மேலே அகலமாக

வும் தென்பாகம் செல்லச் செல்ல குறுகியும் செல்கிறது. எங்கள் பக்கத்திலே நிலப்பரப்புக் குறுகிச் செல்வதால் எங்களில் இருந்து ஒரு கோடி பேரை மத்தியப் பிரதே சத்தில் குடி ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று

அவர் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார். 'அது புதிய ஆபத்தான பிரச்னையை உண்டாக்கும்' என்று. இந்திய ஒருமைப்பாடு என்பது, அந்த இலட்சணத் தில்தான் புதிய ஆபத்தான பிரச்சினையை உண்டாக்குவ தாக இருக்கிறது! மத்தியப் பிரதேசத்தில் ஒரு கோடி தமிழர்கள் குடியேறினால், பக்கத்திலே உத்தரப் பிரதே சத்திலே உள்ளவர்கள் 'இவர்கள் யார், இவர்கள் யார்? எங்கே வந்தார்கள்? எதற்காக வந்தார்கள்? என்ன செய்கிறார்கள்?' என்றுதான் கேட்பார்கள்! வேடிக்கை யாக நான் சொல்லவில்லை. வெந்த மனத்தோடுதான் சொல்கிறேன்! 'இந்திய ஒருமைப்பாடு' என்பது, இப்ப டிப்பட்ட நிலையில்தான் இருக்கிறது. உண்டாகி வரும் ஒருமைப்பாடு, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வளர இன்னும் ஒரு நூற்றாண்டு காலமாகும்! நம்முடைய தனித் தன்மைகளை இழந்துவிடுவது, இந்திய ஒருமைப் பாட்டை உண்டாக்கி விடாது! தமிழ்ப் பண்பாட்டை இழந்து தேசிய ஒருமைப்பாட்டை அமைக்க விரும்பினால் அது பாரதியார் சொன்னதுபோல கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கியதாகத்தான் இருக்கும்!

நம்முடைய தாய்மொழிப் பற்றை யாராலும் தடுக்க முடியாது! நம் பண்பாட்டை இழந்து விடவும் முடியாது!

நாம், நம்முடைய நாட்டில் இப்பொழுதுதான் ஒருமைப்பாட்டை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்! ஒருமைப்பாடு இன்னும் உருவாகிவிட வில்லை! நாம் பேசும் பொழுதெல்லாம் கூட 'அகில இந்தியா' என்று

சொல்லுகிறோம். நம்முடைய வானொலிக்கும் 'அகில இந்திய வானொலி' என்றுதான் பேர் சொல்லுகிறோம். அதிகாரவர்க்கத்துக்குக்கூட, 'அகில இந்திய சர்வீசு' என்றுதான் கூறுகிறோம். இப்படி 'எல்லா இந்தியாவும் எல்லா இந்தியாவும்' என்று நாம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது 'இது இந்தியாவா - அது இந்தியாவா?' என்ற சந்தேகம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான்! இங்கிலாந்து நாட்டு ஒருமைப்பாட்டுக்காக உறுதி மொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அவன் சொல்பவர்களைச் சந்தேகத்தோடு பார்ப்பான்! ஆனால் நமது நாட்டில், நாள்தோறும் அல்லது ஆண் டுக்கு ஒருமுறை இந்திய ஒருமைப்பாட்டுக்கான உறுதி மொழியை எடுக்கச் சொல்கிறோம்! நம்மை நாமே நம்பவைத்துக் கொள்வதற்காக, அடிக்கடி ஒருமைப்பாடு என்று பேசுகிறோம்! தமிழர்களுடைய பண்பாடும் இந் திய ஒருமைப்பாட்டில் இடம் பெற வேண்டும். 'உத்தரப் பிரதேசப் பண்பாடுதான் இந்திய ஒருமைப்பாடு' என்றால், அது நம் கைக்கு எட்டாததாகும். கருத்துக்கும் ஒட் டாது. தாய்மொழிப்பற்று, யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் அடங்கி விடாது! பொங்கித்தான் வழியும், தேசியத்தைப் பேசி தாய்மொழிப்பற்றைக் குறைத்து விட முடியாது.

(67-ஏப். 25)

# தமிழ்நாட்டு சங்கீத சங்க விழாவில்

மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நம் நாட்டின் கலைச் சிறப்புக்கும் அடிப்படையான ஒரு வேறுபாடு இருக்கிறது! செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள்; ஆனால் நம்முடைய நாட்டிலோ, ஏழ்மை இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது! நம்முடைய நாட்டு மக்கள், வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள், கலைஞர்கள் வாழ்த்துகிறார்கள், வளர்க்கிறார்கள், கலையை வளம்பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பில் இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால், கலையை வளர்க்கும் கலைஞர்களை எப்படியெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க 'நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்ற பிரம்மை ஏற்படுகிறது. மற்ற நாடுகளில் கலை வளர்க்கப்படுவதற்கும் நம் நாட்டில் வளர்க்கப்படுவதற்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்! கலையின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பணியாற்றும் கலைஞர்கள், அந்தந்தத் துறைகளை நேர்த்தியாக வளர்ப்பது மட்டுமல்ல மற்ற நாட்டினரும் புகழத்தக்க விதத்தில் நற்பணி ஆற்றி வருகிறார்கள். இசை, நாட்டியம், மற்ற துறைகளில் உள்ளவர்களும் வாழ்வின் பெரும் பகுதியை ஏழ்மையில் கழித்திருக்கிறார்கள். நாட்டுக்குக் கலைச் செல்வத்தைத் தருகிறவர்கள் விருது பெற்றிருப்பதால் தான் நான் பெருமைப்படுகிறேன். இத்தனைப் பண்டைக் கலைகளும் ஒரு சேர நவீன முறையில் அமைந்திருப்பதுதான் சினிமாத்துறை! நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளதில் நெகிழ்ச்சியை மகிழ்ச்சியை உண்டாக்கும் தலைசிறந்த சாதனமாக உள்ளது

சினிமாத்துறை; அப்படிப்பட்ட துறையில் சிறந்த கலைஞர்கள் விருது பெற்றிருக்கிறார்கள்; அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். சினிமா கதை வசனத்துறையில் தம்பி கருணாநிதி வெற்றியைப் பாராட்டி விருது தந்திருக்கிறார்கள். அவர் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது சரியா? தவறா? என்று வீண் ஐயப்பாடு கொள்பவர்கள் இருக்கலாமே தவிர, இந்த விருது வழங்கப்பட்டதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது! அந்த அளவுக்கு இந்தத் துறையில் சிறப்பான முறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர் அவர்! கலையின் நேர்த்தியைக் கட்டிக் காப்பதோடு, தரப்பட்டுள்ள பொறுப்பையும் கலையின் நேர்த்தியோடு சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை அறிந்து கலை உலகத்தினரும் மகிழ்ச்சியடைகிறார்கள்! எதையோ எண்ணிக்கொண்டு எதையோ செய்பவர்கள் தங்களைக் கலைஞர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் கலையில் ஈடுபாடு கொண்டு அதனை நேர்த்தியாகச் செய்வது போலவே, ஆட்சியிலும் கலையின் நேர்த்தியை இணைத்து காரியமாற்றி முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர் விருது பெறுவதால் நான் தனிப்பட்ட முறையில் பெருமை அடைவதை நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

# பெண்கள் உணவுக் கவுன்சிலில்

'அரிசிக்குப் பதிலாகப் பழவகைகளை சாப்பிட்டுப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்' என்று ஏழை எளிய மக்களிடத்தில் கூறமுடியாது; அப்படிக் கூறினால், தவறான கருத்து அவர்களிடையே ஏற்படும். அரிசி சாப்பிடுவது நம்முடைய மக்களுக்கு நீண்டகாலப் பழக்கமாகி விட்டது; அதை உடனடியாக மாற்றுவதற்கு ஏழைகளால் இயலாது! வாழ்க்கையில் வசதிப்பட்டவர்கள் வேண்டுமானால் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள முடியும்; அவர்கள் மாற்றிக் கொள்வதை வரவேற்கிறேன். அரிசி உபரியாக இருக்கிற நேரத்தில் வேண்டுமானால் மக்களிடையே, மாற்று உணவுகளைப் பழகிக் கொள்ளும்படி கூறலாம்; அரிசி இல்லாத நேரத்தில் கூறினால் 'அரசாங்கத்தால் முடியவில்லை' என்று தவறான எண்ணம் ஏற்படும்; குறிப்பாக இந்த திட்டத்தை வசதி படைத்தவர்கள்தான் கடைபிடிக்க வேண்டும். பழத்தைச் சாப்பிடும்படி பிரச்சாரம் செய்துவிட்டு வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்கிறார்கள்! சொல்வது ஒன்று செய்வது வேறாக இருக்கிறது; இதனால் பழத்தின் விலையும் ஏற்றமாக இருக்கிறது; ஏழைகளால் வாங்கிச் சாப்பிட முடியவில்லை! உணவு விஷயத்தில் இருபது ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிற புள்ளி விவரங்கள் கற்பனையாகவே இருக்கின்றன; உண்மையானதாக இல்லை; இதை வைத்துக் கொண்டு உணவுப் பற்றாக் குறையைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. விவசாயத்தை வளப்படுத்த அதன் அடிப்படை பலமாக இருக்க வேண்டும்; அப்போதுதான் நிரந்தரமான முன்னேற்றம் காண முடியும். (67 - ஏப். 24)

# மகாவீரர் பிறந்தநாள் விழாவில்

வேலூரில் முப்பத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்த ஒரு வெள்ளைக்காரர் ஓய்வு பெற்ற காலத்தில் தாயகம் செல்ல விருந்த பொழுது வழியனுப்பு விழாவிற்கு என்னையும் அழைத்திருந்தார்கள். எவ்வளவோ மைல்களுக்கு அப்பாலே யிருந்து வந்து வேற்று நாட்டுக்காரராக இருந்தாலும் விழு மிய தொண்டராக பிறர் பயனடைய மருத்துவ நிலையங் களையும், கல்விக் கூடங்களையும், அறமனைகளையும் கட்டித் தந்து பணி புரிந்தவர்களாயிற்றே என்ற கருத்தில், அமெ ரிக்காவிற்குச் செல்லவிருந்த அந்தக் கிறித்துவரை வழி யனுப்பச் சென்றேன்; அப்போது வேலூரிலிருந்து இந்து மதத்தைச் சார்ந்த ஒருவரிடமிருந்து எனக்கு மிரட்டல் கடிதம் வந்தது. 'கிறித்துவரை வழியனுப்பும் விழாவில் கலந்துகொள்ள வந்தால் நாங்கள் கறுப்புக்கொடி காட்டு வோம்' என்று அந்த கடிதத்தில் எழுதியிருந்தது; 'எங்கள் கட்சிக் கொடியிலே கறுப்புதான் இருக்கிறது' என்று அப்போது வேடிக்கையாகச் சொன்னேன். எவ்வளவோ தூரத்துக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் என்றாலும் அயல வர்கள் என்றாலும் - அவர்கள் செய்த நல்ல காரியத்தைத் தமிழக மக்கள் வரவேற்க வேண்டும்; அதுபோன்ற காரி யங்களைச் செய்யவும் வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். ஜைனமதத்தைச் சேர்ந்தவர்களும் மருத்துவ மனைகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்தி ஈட்டிய பொருளை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான் பிறந்த காஞ்சிபுரத்தி லும், அதைச் சுற்றிய சிற்றூர்களிலும் ஜைனமதத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கின்றார்கள்; அவர்களுடன் எனக்குத்

தொடர்பும் உண்டு. இந்த மார்க்கம் தமிழர்களுக்கே உரிய மார்க்கம் என்றுகூட, தமிழ் ஆய்ந்த வல்லுநர்கள் சிலர் கூறுகின்றனர்; ஆகவே, இந்த மார்க்கத்தில் எனக்குத் தொடர்பும் ஈடுபாடும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்திலேயே நம்முடைய நாட்டில்தான் பெரும் பெரும் மகான்கள், வழிகாட்டிகள் தோன்றியிருக்கின்றார்கள். நான் கூடச் சில சமயம் நினைத்துப் பார்ப்பேன் 'இப்படிப்பட்ட பெரியவர்கள் தோன்றாமல் இருந்திருக்கலாம்: அவர்கள் தந்த அந்த நல்ல சிந்தனைகள் தோன்றாமல் இருந்திருக்கலாம்' என்று. பெருமைக்குரிய வழிகாட்டிகள் பலர் இருந்தும் கூட, நாம் இந்த அளவுக்குக் கெட்டுப்போயிருக்கிறோம். 'உயர்ந்த நிலை'யில் இல்லையே என்பதால்தான் அப்படிக் கருதத் தோன்றியது. இது போன்ற வழிகாட்டிகளே தோன்றாத நாடுகளில், எவ்வளவோ முன்னேறி இருக்கின்றனர். வளர்ச்சி அடைந்திருக்கின்றனர். ஆனால் வழிகாட்டிகள் இருந்தும், அவர்கள் வழிநடத்திச் செல்பவர்களாக இருந்தும் நாம் முன்னுக்கு வரவில்லை! காரணம், நாம் சொல்பவர்களாகவே இருந்தோம். செய்யத் தவறிவிட்டோம். ஆகவே, இனிமேல், சொல்வதுடன் செய்து காட்டவும் வேண்டும். 'புத்தர் சொன்னார்; சித்தர் கூறினார்; மகாவீரரும், முகமது நபியும், காந்தியடிகளும் சொன்னார்கள்' என்றுதான் சொல்கிறோமே தவிர, அவற்றைச் செய்து காட்டுகிறோமா?' 'அவர் அப்படிச் சொன்னார் – இவர் இப்படிச் சொன்னார்' என்று கூறிவிட்டு 'நீ என்ன செய்யப் போகிறாய்?' என்றால் விழித்து நிற்போரைத் தான் நாம் பார்க்கிறோம்.

ஆகவே சொல்வதோடு மட்டும் நில்லாமல் செய்தும் காட்ட வேண்டும்; அப்போதுதான் அந்த நன்னெறிகளை உணர்ந்தவர்கள் ஆவோம்! மகாவீரர் போன்ற உயர்ந்த

மேதைகளை நாம் பின்பற்றிச் செல்ல வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய ஜைன நெறியை நல்ல முறையில் பாதுகாத்து, அந்த நெறியிலே நடப்பது மட்டுமல்லாமல், மற்ற சமுதாயத்தினரும் அந்த நெறியிலே நடந்து வாழ்ந்து சிறக்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டுகின்ற உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மகாவீரர் போதித்த தத்துவங்கள் நல்ல மார்க்கங்களாகும், நல்ல நெறிகளாகும். 'ஐம்புலன்களை அடக்கு' பொருள்களின் மீது மிகுதியாக ஆசை வைக்காதே' 'என்றெல்லாம் இங்கு எழுதியிருப்பதைக் காண்கிறேன். இந்த உண்மைகளை யெல்லாம் உண்மையிலேயே உலகில் உள்ளோர் அறிந்து உணர்ந்திருப்பரேயானால், சண்டை சச்சரவுகள் ஏற்பட்டிருக்காது; ஐக்கிய நாடுகள் மன்றமும் தேவைப்பட்டிருக்காது. மனித சமுதாயத்தை வழிநடத்தும் மார்க்கங்கள் எல்லாம் நான்கு மாடிக் கட்டிடங்களாக உள்ளன என்றாலும், இரண்டு மூன்று மாடிகளுக்குத்தான் ஒழுங்காகப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது மாடியிலிருந்து அடுத்த மாடியைப் பார்த்தால், தொங்குகிற நூல் ஏணியில் ஏறிச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது. ஜைனமதத்தை அறிந்த அறிஞர்களிடமும், பெரியவர்களிடமும் எனக்கு நெருங்கிய தொடர்பும், பழக்கமும் உண்டு. ஜைன சமயம் பற்றிப் பல தடவைகள் நாங்கள் விவாதித்திருக்கிறோம். அப்போது நான் வருத்தப்பட்டேன். நெறிகள் சரியில்லை என்பதால் அல்ல; அந்த நெறிகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் வளர்ந்து கொள்ளவில்லையே' என்பது தான் அதற்குக் காரணம். 'அந்த அறநெறிகளுக்கு ஏற்ற வளர்ச்சியே இல்லை' என்ற குறை இருப்பதால், அந்த நெறிகளை எல்லாம் மறந்துவிட வேண்டும் என்று நான் கூறமாட்டேன்.

(67 - ஏப். 24)

# காஞ்சி பட்டு - சரிகை விற்பனை சங்கத்தில்

பட்டு உற்பத்தித் தொழிலில் ஏற்பட்டு உள்ள நலிவைத் தீர்ப்பதில் என்னாலான முயற்சியை உறுதியாக எடுத்துக் கொள்வேன். பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் தமிழக அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. தமிழக அரசு சில பிரச்சினைகளில் பரிந்துரை செய்ய முடியாது. அதற்கான போதிய அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாததே அதற்குக் காரணம் ஆகும். தமிழகத்தில் பல விற்பனை நிலையங்களைத் தமிழக அரசு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுப்பது மத்திய அரசாகும். பட்டுத் தொழிலில் ஈடுபட்டு இவர்கள், வெளிநாடுகளுக்கு ஒரு குழுவை அனுப்பி அங்கு நமது பட்டுத் தொழில் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அச் செலவை அத்தொழில் செய்வோர் ஏற்றுக் கொள்ள வேண்டும். நெசவாளர்களின் வாழ்க்கையில் நிறைவு ஏற்பட்டால்தான், நிம்மதி இருந்தால்தான், அவர்கள் வாழ்க்கை நிலை உயர்ந்தால்தான் கை நேர்த்தியான சேலைகளை அவர்கள் நெய்து தருவார்கள். ஆகவே நெசவாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும்; அதனால் ஏற்படும் அதிகச் செலவை நிறைவுசெய்ய விற்பனையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.